பக்கங்கள்: மொத்தம் 48

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 18 ஞாயிற்றுக்கிழமை (04.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 008



07
நல்லூர் வீதியின் அவல நிலை



16
தங்கம் வெல்வதே இலக்கு



17
தொடரை வென்றது பாக்.

## யாழ்.சிறையில் கைதி உண்ணா நோன்பு

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ்ப்பாணம் சிறைச் சாலையில் தமிழ் அரசியல் கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி இராணுத்தால் வரணிப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட எழுதுமட்டுவாழைச் சேர்ந்த இராசையா ஆனந்தராசா (வயது - 30) என்பவரே உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.

5 வருடங்கள் எட்டு மாதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தக் கைதி தமக்கு பிணை வழங்கக் கோரியே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது. (ஒ-14)

# சொன்னதைச் செய்யுங்கள் புதிது புதிதாகக் குழப்பாதீர்!

## தீர்வு விடயத்தில் அரசிடம் வலியுறுத்தியது கூட்டமைப்பு

கொழும்பு, டிசெம்பர் 4

இலங்கையிலுள்ள எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கான முயற்சியில் அரசு - கூட்டமைப்பு ஆகிய இரு தரப்புகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட விடயங்களுக்கு மதிப்பளித்து அவற்றை அரசு செயற்படுத்த வேண்டும் என்று அரசிடம் வலியுறுத்தி உள்ளார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். அதைவிடுத்து புதிய விடயங்களை நடைமுறைப்படுத்தாதீர்கள் என்றும் அவர் அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளார். அதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குப் பெயர்களை வழங்க முடியாது என்ற தமது நிலைப்பாட்டை அரச தரப்பிடம் நேற்று மீண்டும் ஆணித்தரமாகத் தெரிவித்திருக்கிறது கூட்டமைப்பு.



அரசு - கூட்டமைப்பு இடையே கடந்த மாதம் நடைபெற்ற பேச்சில், இந்த மாதத்தில் 4 தடவைகள் சந்திப்பு நடத்த இரு தரப்புகளும் இணங்கி இருந்தன. 1, 6, 14, 15 ஆகிய திகதிகளில் அந்தப் பேச்சுக்களுக்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் திடீரென மேற்கொள்ளப்

பக் 18

## குடாநாட்டில் கடந்த ஒன்றரை வருடத்தில் 43 பேர் எச்.ஐ.வி. தொற்றால் பாதிப்பு

### வைத்திய நிபுணர் அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.3

கடந்த ஒன்றரை வருடகாலத்தில் மட்டும் யாழ் குடாநாட்டில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான43பேர் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 23 பேர் உயிரிழந்துள்ளனர். - இந்த அதிர்ச்சித் தகவலை யாழ்.போதனா வைத்தியசாலையின் பால்நிலை தொற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.கணேசலிங்கம் வெளியிட்டார்.

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.சிறைச்சாலையில் எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கையின் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான முதல் நோயாளி 1993 ஆம் ஆண்டு இனங்காணப்பட்டார். எனினும் அதன்பின்னர் எச்.ஐ.வியின் பரவுகையின் வேகம் அதிகரித்துள்ளது. இலங்கையில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானோரில் 16

பக் 19

## ஆஸிக்கு அடுத்தடுத்து வந்த இரு படகுகளில் 100 அகதிகள்

கன்பரா, டிசெ.4

சுமார் 100 வ்ரையான அகதிகளுடன்மேலும் இரண்டு அகதிகள் படகுகள் மேற்கு ஆஸ்திரேலியக் கடற்பரப்பில் அந்த நாட்டின் எல்லைக் காவல் படகுகளினால் இடை மறிக்கப்பட்டுள்ளன.

அஸ்மோர் தீவுக்கு வடகிழக்காக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் முதலாவது படகு இடைமறிக்கப்பட்டது. இதில் 19 அகதிகளும் 3 மாலுமிகளும் இருந்தனர்.

இதன்பின்னர், மற்றொரு அகதிகள் படகு கிறிஸ்மஸ் தீவுக்கு மேற்கே மீட்கப்பட்டது.

இந்தப் படகில் இருந்து உதவிகோரப்பட்டதைஅடுத்தே எல்லைக் காவல் படகுகள் அங்கு சென்று அதனை மீட்டனர்.

இந்தப் படகில் 75 அகதிகளும், 3 மாலுமிகளும் இருக்கின்றனர் என்று முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன

இந்தப் படகுகளில் இருந்த அகதிகள் பாதுகாப்பு, மருத்துவ சோதனைக

பக் 19

## சத்திரசிகிச்சை வெற்றி; நோயாளி மரணம் வரவு - செலவுத் திட்டமும் அதுபோன்றதே!

### அரியநேத்திரன் எம்.பி. நாடாளுமன்றில் கிண்டல்

கொழும்பு, டிசெ.4

அடுத்த வருடம் இலங்கையின் சுதந்திர தினத்தன்று அனுராதபுரம் சிறையில் அங்கவீனர்களாகவுள்ள தமிழ் சிறைக்கைதிகள் 100 பேரை அரசு விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நேற்று நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு - கிழக்கு முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. சத்திர சிகிச்சை வெற்றியளித்துள்ளது, ஆனால் நோயாளி மரணித்து விட்டார் என்று வைத்தியர் கூறுவதைப் போலவே இந்த வரவு - செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தில் பல நல்ல திட்டங்கள் உள்ளன என்று கூறப்பட்டாலும்

பக் 19

## பொன்சேகாவின் வழக்கை உன்னிப்பாக கவனித்து வருகின்றது அமெரிக்கா

கொழும்பு, டிசெ.4

சரத் பொன்சேகாவின் வழக்கு விசாரணைகள் தொடர்பாக அமெரிக்கா தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணிக்கும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

அமெரிக்கஇராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசிய விவகார பிரிவின் பேச்சாளரும், ஊடக ஆலோசகருமான எமிலி ஹோர்ன், கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள மின்னஞ்சல் செவ்வியிலேயே

பக் 19

## நெடுந்தீவுக் கடலில் கைதான மீனவர் எண்மரும் நாளைவரை மறியலில்

### அவர்களில் ஐவர் இந்தியர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.4

ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டார்கள் என்று கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் நெடுந்தீவுக் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்ட 5 இந்திய மீனவர்கள் உள்ளிட்ட 8 மீனவர்களையும் நாளை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் காங்கேசன்துறைப் பொலிஸாரால் இந்த மீனவர்கள் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்ட 5 இந்திய மீனவர்களும், 3 உள்ளூர் மீனவர்களும் நேற்று மதியம் யாழ்ப்பாணம் மத்திய சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இந்த எட்டு மீனவர்களும் கடந்த 28 ஆம் திகதி நள்ளிரவு வேளை நெடுந்தீவு கடற்படையினரால்

பக் 18

மிகக் குறைந்த கட்டணத்தில் அனைத்து நாடுகளுக்கான பயணச்சீட்டுகள் மற்றும் பயணக் காப்புறுதிகள் பெற்றுக் கொள்ள ...

CONTACT : 0777727617

AIRMARK Travels & Tours

IATA

புதுவருடத்தையொட்டி வாடிக்கையாளர்களுக்கு Granite விற்பனையில் மாபெரும் விலை தள்ளுபடி



நவீன் செரமிக் Naveen Ceramic

212, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 5, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

021 222 0033 / 021 222 0044 021 222 4777 / 021 222 4888

metro engineering (pvt) ltd

OPEN EVERY DAY

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மேகமூட்டத்துடனும் பிறமாவட்டங்களில் தெளிவான வானிலையும் நிலவும் சாத்தியம் உள்ளது.

# கோம்பாவிலில் மீள்குடியமர்ந்தோருக்கு மீன்பிடி வள்ளங்கள், உபகரணங்கள்

## புதுமாத்தளன் கடற்பரப்பில் தொழில் செய்யவும் அனுமதி

முல்லைத்தீவு, டிசெ.4

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கோம்பாவில் பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த மீனவ குடும்பங்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக மாவட்ட அரசாங்க அதிபர் மீன்பிடி வலைகளையும் அந்த மாவட்ட இராணுவத் தளபதி மீன்பிடி வள்ளங்களையும் வழங்கியதுடன் புதுமாத்தளன் கடற்பரப்பில் தொழில் செய்வதற்கும் அனுமதி வழங்கியுள்ளனர்.

யுத்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவிலுள்ள நலன்புரி முகாம்களிலும் அகதி முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டிருந்த மக்கள் கண்ணி வெடிகள் அகற்றப் பட்டதைத் தொடர்ந்து சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

முள்ளிவாய்க்காலில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா முகாமில் தங்கியிருந்த குடும்பங்கள் தங்களின் சொந்த இடங்களில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகள் அகற்றப்படுவதில் ஏற்பட்டுள்ள தாமதங்களினால் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள கோம்பாவில் பகுதியில் அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு குடியமர்த்தப்பட்ட 72 குடும்பங்க ளில் 26 மீனவ குடும் பங்களும் அடங்கு கின்றன. கடற்றொழிலையையே நம்பி வாழும் இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தொழில் செய்வதற்கு இடவசதியின்றியும் உபகரணங்கள் கிடைக்காததனாலும் தொழிலின்றி, வருமானமின்றிப் பல சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் குடும்பங்களின் நிலை குறித்து முல்லைத்தீவு அரச அதிபர், இராணுவத் தளபதி ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து வாழ்வாதார உதவியாக அரச அதிபர் மீன்பிடி வலைகளையும் இராணுவத் தளபதி மீன்பிடி வள்ளங்களையும் வழங்கியது டன் புதுமாத்தளன் கடற்பரப்பில் தொழில் செய்வதற்கும் அனுமதி வழங்கியுள்ளனர்.

புதுமாத்தளன் பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கடற்றொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் புதுக்குடியிருப்பு அரச அதிபர் உட்பட பல கலந்து கொண்டனர். மீனவர்கள் தொழில் செய்வதற்கு வசதியாக மிக விரைவில் வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-155)

அருட்சகோதரி கைதானதன் எதிரொலி

# அரச நிகழ்வுகளைப் புறக்கணிக்க கத்தோலிக்க திருச்சபை முடிவு

கொழும்பு, டிசெ.4

அரசின்நிகழ்வுகள் அனைத்தையும் புறக்கணிப்பது என்று கத்தோலிக்கத் திருச்சபை முடிவு செய்துள்ளதாக கத்தோலிக்கத் திருச்சபையின் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் நேற்று அறிவித்துள்ளார்.

நேற்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரிகளால் கடந்தவாரம் மொறட்டுவ அன்னை தெரேசா இல்லத்தில் நடத்தப்பட்ட தேடுதலின் பின்னர் ஏற்பட்டுள்ள தவறுகளை அரசாங்கம் திருத்திக் கொள்ளும் வரை இந்த முடிவு நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்திய அவர், அன்னை தெரேசா இல்லத்தில் இருந்த அருட்சகோதரி ஒருவர் கைது செய்யப்பட்டதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் கீழ் இயங்கும் இந்த தொண்டு நிறுவனம் தொடர்பாக பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அன்னை தெரேசா இல்லத்தில் குழந்தைகள் விற்பனை செய்யப்பட்டதாக குற்றம்சாட்டி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் தேடுதல் நடத்தியதுடன், அதற்குப் பொறுப்பாக இருந்த அருட்சகோதரியையும் கைதுசெய்துள்ளனர் என்பது தெரிந்ததே. (ஓ)

# படகுச் சேவை தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ.4

நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுச் சேவையில் உள்ள வடதாரகை படகு வழமையாக நெடுந்தீவிலிருந்து காலை 6.15 மணிக்கும், குறிகாட்டுவானில் இருந்து பி.ப.5 மணிக்கும் இடம்பெறும் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக நெடுந்தீவு உதவி அரச அதிபர் ஆ.சிறி அறிவித்துள்ளார். (த-7)

# பரீட்சைக் கட்டணங்கள் அறவிடும் முறையை வடக்குப் பாடசாலைகளில் உடனடியாக நிறுத்துக

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 4

நாட்டின் எந்தப் பாகத்திலும் மாணவர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணங்கள் அறவிடப்படுவதில்லை. இதற்கு மாறாக வட மாகாணப் பாடசாலைகளில் பரீட்சைக் கட்டணமாக மாணவர்களிடமிருந்து பெருந்தொகைப் பணம் அறவிடப்படுகிறது. இந்தச் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின்.

கல்வி அபிவிருத்தி மற்றும் 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் கடந்த மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்றது. வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண கல்வி வலயங்களைச் சேர்ந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், வட மாகாண இடமாற்ற சபையின் அங்கத்துவம் பெறும் இடமாற்ற சபை அங்கத்தவர்கள், இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போதே இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

* வன்னியில் கடமையாற்ற வேண்டிய ஆசிரியர்களில் பலர் 2 வருடங்களுக்கு மேலாக தற்காலிக இணைப்பு என்ற நிலையில் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றி வருகின்றனர். தற்காலிக இணைப்புப் பற்றிய முடிவுகள் இடமாற்ற சபைகள் ஊடாகத் தீர்மானிக்கப்பட வில்லை. எனவே தற்காலிக இணைப்பை உடன் இரத்துச் செய்து 01.01.2012 தொடக்கம் அவர்கள் வன்னியில் கடமையாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* யாழ். கல்விக் கோட்டத்திலுள்ள 23 பாடசாலைகளில் சுமார் 200 இற்கும் மேற்பட்ட மேலதிக ஆசிரியர்கள் கடமையிலுள்ளனர். எனவே மேலதிக ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவேண்டும்.
* சகல இடமாற்றங்களின் போது வெளிப்படைத் தன்மை கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
* இடமாற்றம் தொடர்பான இடமாற்றக் கடிதங்கள் ஆசிரியர்களுக்கு உரிய திகதியிலிருந்து ஒரு மாதத்துக்கு முன்னரே வழங்கப்படவேண்டும்.
* தேசிய ஆசிரியர் இடமாற்றச் சுற்றறிக்கை மற்றும் இதர இடமாற்ற சுற்றறிக்கைகள் மீறப்படுவதனை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. அதிபர்கள் இடமாற்ற சபையில் பங்கு பற்றுவது சுற்றறிக்கையை மீறும் செயலாகும். இது தவிர்க்கப்படவேண்டும்.
* கல்வி வலயங்கள், கோட்டங்களிலுள்ள பணிப்பாளர் தரத்திலான வெற்றிடங்கள் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் தேசியப் பத்திரிகைகளின் ஊடாக விளம்பரப்படுத்தி நிரப்பப்பட வேண்டும்.
* ஒரே பாடசாலையில் 5 வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் அதிபர்கள், பிரதி, உதவி அதிபர்கள், வலயக் கல்வி அலுவலகங்களிலுள்ள பணிப்பாளர் தரத்திலுள்ளவர்கள் 01.01.2012இல் இருந்து புதிய நிலையங்களுக்கு இடமாற்றப்பட வேண்டும்.
* அதிபர் தரத்துக்கு அமைவாக பாடசாலைகளுக்கு அதிபர் இடமாற்றங்கள் வழங்கப்பட வேண்டும்.
* பாட இணைப்பாளர்கள், தர இணைப்பாளர்களின் பதவிகள் வலயக் கல்வி அலுவலகத்தால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* அனைத்து மாணவர்களுக்கும் சேர்வு இலக்கம் வழங்கப்படவேண்டும். இதனை அதிபர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.
* கல்வி அமைச்சின் சகல சுற்றறிக்கைகளும் ஆசிரியர்களுக்கும் காண்பிக்கப்பட்டு அவர்களின் கையொப்பம் பெறப்பட வேண்டும். மாணவர்கள் தொடர்பான சுற்றறிக்கைகள் மாணவர்களது காலைக் கூட்டத்தில் வாசித்து அறிவிக்க வேண்டும்.
* 60 வயதுக்கு மேற்பட்ட கல்வி அதிகாரிகள் வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டும். என்று குறிப்பிட்டார். (த-14)

# நிகழ்வுகள் இன்று

**எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம்**

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளையின் பருத்தித்துறைப் பிரிவு நடத்தும் எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம் காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணி வரை பருத்தித்துறை மணியகாரன் சந்தி 'ஐ.எப்.ஆர்சி' இல்லத்தில் பருத்தித்துறைப் பிரிவுத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஓ-323)

**இசை ஆராதனை**

சங்கீதபூஷணம் லயனல் திலகநாயகம் போலின் ஈராண்டு நினைவை முன்னிட்டு இசை ஆராதனை நிகழ்வும் தமிழோடு இசைபாடல்' நூல் வெளியீடும் யாழ்.நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஓ-323)

**'தப்பு' இசை நிகழ்வு**

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம், செயல்திறன் அரங்க இயக்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தமிழனின் ஆதிக் கலைகளில் ஒன்றான 'தப்பு' இசை நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்த நாட்டார் கலைஞரான ஆடலரசு வேணு என்றழைக்கப்படும் வி.வேணுகோபாலுடன் யாழ்.மாணவர்களும் இணைந்து நிகழ்த்து கலையை மேடையேற்றவுள்ளனர். (323)

**கலைவிழா**

அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளியின் கலைவிழா பிற்பகல் 2 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது நிலையத்தலைவர் ஆதிரிலோகஈஸ்வரா தலைமையில் நடைபெறும். (ம-135)

**நூல் அறிமுக விழா**

கா.வைத்தீஸ்வரனின் 'மனநிறைவாக வாழ்வோம்' எனும் நூல் அறிமுக விழா மாலை 4 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் கல்யாண மண்டபத்தில் பி.கனகசபாபதி தலைமையில் இடம்பெறும். (த-311)

# நாடாளுமன்றத்தைக் கூட சீனாவுக்கு அரசு விற்றாலும் ஆச்சரியப்படமுடியாது

## சபையில் ஹர்ஸா டி.சில்வா

கொழும்பு, டிசெ.4

நாட்டின் சொத்துக்கள் அனைத்தையும் சீனாவுக்கு விற்றுவரும் அரசு இந்த நாடாளுமன்றத்தைக்கூட சீனாவுக்கு விற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. - இவ்வாறு ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஹர்ஸா டி. சில்வா நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அமைக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பொருளாதாரத்தைச் சீரழித்து விட்டது.

1980 முதல் 81 வரை தனிநபர் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டே நாட்டின் அபிவிருத்தி கணிப்பிடப்பட்டது. ஆனால், இப்போது இந்த நிலை மாறி பெறுமதிமிக்க வாகனங்களின் இறக்குமதியின் அடிப்படையிலேயே நாட்டின் அபிவிருத்தி கணிப்பிடப்படுகின்றது. இதுபிழை. மஹிந்த சிந்தனை மூலம் மதுவுக்கு முற்றுப்புள்ளி என்ற வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என அரசு கூறுகின்றது. ஆனால் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் முறையே 07 மற்றும் 7.5 கோடி லீற்றர் மதுபானம் நாட்டில் அருந்தப்பட்டுள்ளது.

அத்துடன் 2009 இல் 410 கோடி சிகரட்டுகளும் 2010 இல் 430 கோடி சிகரெட்டுகளும் புகைக்கப்பட்டுள்ளன. இது தான் மதுவுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் திட்டமா?.

நாட்டின் அபிவிருத்திக்கு முதலீடுகள் தேவை. ஆனால், அதற்கு அரசிடம் நிதியில்லை. அதனால்தான் நலன்புரி மற்றும் சமுர்த்திக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைந்துள்ளன.

சமுர்த்தி வேலைத்திட்டத்திற்கு 2011 இல் 1100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால், 2012 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் 990 கோடி ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.



நாட்டின் காணிகளை வெளிநாடுகளுக்கு விற்பதை முதலீடு செய்தல் என்று கூறமுடியாது. முதலீடு என்ற போர்வையில் நாடாளுமன்றத்தையும் இந்த அரசு சீனாவுக்கு விற்றால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த அரசு கடன்பாட்டே முதலீடு செய்கின்றது. இது ஒருபோதும் நாட்டை அபிவிருத்தி செய்ய உதவாது. இது நாட்டின் நிலைமையை மேலும் மோசமாக்கும். -என்றார். (ங-சி)

மக்கள் பயன்படுத்த வழங்கியிருந்த

# கீரிமலை மயானத்தை துப்புரவு செய்ய கடற்படையினர் நேற்று அனுமதி மறுப்பு

கீரிமலை மயானத்தை நேற்று முதல் மக்கள் பயன்படுத்த கடற்படையினர் முன்னர் அனுமதி வழங்கியிருந்த நிலையில் நேற்றையதினம் மயானத்தை துப்புரவு செய்யச் சென்றவர்களை அவர்கள் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கீரிமலை மயானத்தை மக்கள் பயன்படுத்து வதற்கு நேற்று சனிக்கிழமை முதல் அனுமதி வழங்குவதாககடற்படையினர்வலி.வடக்கு பிரதேச சபைக்கு முன்னர் உறுதியளித்திருந்தனர். மயானத்தைத் துப்புரவு செய்வதற்காக பொதுமக்கள் நேற்றைய தினம் அங்கு சென்றனர். ஆனால் கடற்படையினர் மயானத்துக்குச் செல்ல அனுமதி மறுத்து விட்டனர்.

இந்தவிடயம் தொடர்பில் வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:

எமக்கு அனுமதி வழங்கிய கடற்படை அதிகாரி இடமாற்றலாகிச் சென்றுள்ளார். இதனால் புதிய கடற்படை அதிகாரி மயானத்தை விடுவிப்பது தொடர்பில் எந்தவித அறிவுறுத்தல்களும் தங்களுக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கின்றார். இருப்பினும் கீரிமலை மயானத்தின் அமைவிடம் தொடர்பான வரைபடத்தைத் தருமாறு கேட்டுள்ளதாகத் தெரிவித்தார். (ஓ-15)

# ஹெரோயினுடன் யாழ். நகரில் இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 4

14 ஆயிரம் ரூபா பெறுமதியான 28 ஹெரோயின் பைக்கற்றக்களுடன் இரண்டு பேரை யாழ் நகரில் வைத்து பொலிஸார் நேற்றுப் பிற்பகல் கைது செய்தனர். அவ்விருவரையும் நீதிவான் முன்னிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆஜர் படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். யாழ். பொது நூலகத்திற்கு அண்மித்த பகுதியில் வைத்தே பொலிஸார் இந்த இருவரையும் கைது செய்துள்ளனர். 24 வயதுடைய அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தையும் மற்றையவர் புத்தளம் பகுதியையும் சேர்ந்தவர் எனவும் ஒவ்வொரு பக்கற்றுக்களும் 500 ரூபா பெறுமதியுடையவை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

# வழிமறித்த போக்குவரத்து பொலிஸார் மீது மோதிவிட்டுப் 'பறந்த' இளைஞர்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.4

கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞர்களை போக்குவரத்து பொலிஸார் மறித்தபோது பொலிஸாரை இடித்து வீழ்த்தி விட்டு மின்னல் வேகத்தில் பறந்து சென்றனர். இச்சம்பவம் நேற்று மதியம் யாழ்.நகரில் இடம்பெற்றது. இது தொடர்பாக தெரியவருவதாவது:

யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதியையும் கன்னாதிட்டி வீதியையும் இணைக்கும் மணிக்கூட்டு கோபுர வீதியூடாக நேற்றுப்பகல் 12 மணியளவில் இரு இளைஞர்கள் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்திக் கொண்டு வந்தனர்.

பிறிதொரு மோட்டார் சைக்கிளில் அந்தப் பகுதியூடாக வந்த வீதிப் போக்குவரத்து பொலிஸார் இதனைக் கண்டு குறித்த இளைஞர்களை வழிமறித்துள்ளனர். எனினும் அந்த இளைஞர்கள் தமது மோட்டார்சைக்களின் வேகத்தை அதிகரித்து அதே வேகத்தில் தம்மை வழிமறித்த பொலிஸார் மீது மோதினர். இந்தத் திடீர் தாக்குதலால் நிலைகுலைந்துபோன பொலிஸார் இருவரும் மோட்டார் சைக்கிளுடன் சறுக்கி நடுவீதியில் வீழ்ந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்ட இளைஞர்கள் மணிக்கூட்டு கோபுர வீதியால் தமது மோட்டார் சைக்கிளை மின்னல் வேகத்தில் செலுத்தி தலைமறைவாகிவிட்டனர்.

இதன்போது பொலிஸார் செலுத்திச் சென்ற 'பொலிஸ்'' என்ற மோட்டார் சைக்கிள் சேதமடைந்தது. குறித்த பொலிஸாரும் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள்.

தம்மீது மோதிவிட்டு மறைந்து சென்ற மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை குறித்துக் கொண்ட பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளரைக் கண்டுப்பிடிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இறுதிப்போரில் மனிதப் படுகொலைகளுக்கு உத்தரவிட்டவர் கோத்தபாய ராஜபக்ஷ தான்

## மற்றோர் இராணுவ அதிகாரியும் வாக்குமூலம்

கொழும்பு, டிசெ. 4

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் மற்றும் கொலைகள் என்பவற்றுக்கான உத்தரவுகளை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவே பிறப்பித்தார். இவ்வாறு இறுதிப்போரின் போது கடமையிலிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் த இன்ரநஷனல் என்ற ஊடகத்துக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்நாட்டுப் போர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணையின் ஒருபகுதியாக வழங்கப்பட்ட வாக்குமூலத்திலேயே குறிப்பிட்ட அதிகாரி இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். உள்நாட்டுப் போரின் போது பொதுமக்களுக்கு எதிராக பல போர்க் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அதனைத் தான் நேரடியாகப் பார்த்ததாகவும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த முன்னாள் இராணுவ அதிகாரி இறுதிக்கட்டப் போரின் போது இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் தர நிலையில் செயற்பட்டவர்.

இராணுவக் கட்டமைப்பின் பிரகாரம் உயர்மட்ட கட்டளைப் பீடத்தின் கட்டளைகளை ஏற்று இராணுவத்தினர் யுத்தத்தின் இறுதிப்பகுதியில் செயற்பட்டுள்ளனர்.

நியூயோர்க்கின் பொதுத்துறை அதிகாரி ஒருவரின் முன்னிலையில் சட்டவாளர் ஒருவரால் குறிப்பிட்ட முன்னாள் இலங்கை இராணுவ அதிகாரிகொடுத்த வாக்குமூலத்தின் போது, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கான கட்டளைகள் அந்த நாட்டின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவாலேயே வழங்கப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

சரணடைகின்ற விடுதலைப் புலி உறுப்பினர்களைப் படுகொலை செய்வதற்கான அறிவுறுத்தல்கள், பாதுகாப்புச் செயலரால் களத்தில் நின்றிருந்த கட்டளைத் தளபதி ஒருவருக்கு வழங்கப்பட்டது எனத் தன்னிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் இந்த இராணுவ அதிகாரி தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சரணடையும் புலிகளை மிகக் கொடூரமான முறையில் நடத்துவதற்கான கட்டளை யாருக்கு வழங்கப்பட்டிருக்கும்? என்று அவரிடம் வினவப்பட்டது. அதற்கு இலங்கை ஜனாதிபதியின் அனுமதியுடன் பாதுகாப்புச் செயலராலேயே இந்த உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். - என்றார். (ங-சி)

# 14 கிலோமீற்றர் தூரத்துக்கு நடந்து செல்லும் ஆசிரியர்கள்

## வேரவில் பஸ் சேவை சீரில்லை

பூநகரி, டிசெ.4

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வேரவில் பிரதேசத்துக்குச் சீரான பஸ் சேவை இல்லாததால் இந்தப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் சுமார் 14 கிலோமீற்றர் நடந்து செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள கிராஞ்சி அ.த.க.பாடசாலை, வேரவில் இந்து மகா வித்தியாலயம், வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை ஆகிய வற்றுக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து சுமார் 16 ஆசிரியர்கள் வரை கடமையாற்றுகின்றனர்.

இவர்கள் தினசரி காலை 8 மணியவில் பல்லவராயன் கட்டுச் சந்தியை வந்தடை கின்றபோதும் அங்கிருந்து பாடசாலைக்குச் செல்வதற்கு வாகன வசதி இல்லாமையால் பல்லவ ராயன் கட்டுச் சந்தியில் உணவு, தண்ணீர் வசதியின்றி பலமணி நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. அத்துடன் இவர்கள் பல்வேறு இயற்கை உபாதைகளுக்கும் முகம்கொடுக்க வேண்டியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பின்தங்கிய பிர தேசத்துக்கு யாழ்ப்பாணம், கிளி நொச்சி, வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் இருந்து பிற்பகல் 2 மணிக்குப் பின்னரே பஸ்கள் வந்தடைகின்றன. இவை அனைத்தும் மறுநாள் 8.30 மணியளவில் புறப்பட்டுச் சென்றுவிடுகின்றன.

இதனால் பாடசாலை முடிந்ததும் வீடு செல்ல முடியாதவாறு ஆசிரியர்கள் துன்பப்படுகின்றனர். இதனால் தாம் பெரிதும் மன-உளைச்சலுக்கு உள்ளாவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

அண்மையில் புதிதாக இந்தப் பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர் ஒருவர் பாடசாலைக்கு வருவதற்கு வாகனவசதியின்றி பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து லான்ட்மாஸ்ரரிலேயே வந்து பாடசாலைக் கடமைகளைப் பெறுப்பேற்றதாக அவரே தெரிவித்துள்ளார்.

முழங்காவிலில் இருந்து வேரவில் ஊடாக நண்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி நோக்கி செல்லும் தனியார் பஸ்களின் சேவைகள் சீரில்லாமையினாலேயே தாம் பெரிதும் அல்லல் படுவதாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவிடயத்தில் தலையிட்டு பஸ்சேவையைச் சீர் செய்யுமாறு ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-127)

# மழையால் விழிப்புலனற்றோர் அவதி

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ளோர் தற்போது பெய்து வரும் மழையினால் பெரும் அவலப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுகிறது.

தற்போது பெய்து வரும் கடும் மழையையடுத்து தொழிற் பூங்கா வளாகம் எங்கும் நுளம்பின் தொல்லை அதிகரித்திருப்பதாகவும், அத்தோடு ஆண்கள் தங்கும் விடுதியின் கூரை சேதடைந்த நிலையில் உள்ளமையினால் மழைநீர் உட்புகுந்து அங்கு தங்கியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாம்பின் தொல்லையும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வாரமும் விழிப்புலனற்ற பெண் ஒருவரின் கையில் பாம்பு ஒன்று ஏறிய சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

எனவே இந்த விழிப்புலனற்றோர் மீது அக்கறை கொண்டோர் இவர்களின் இத்தகைய அவசர தேவைகளைச் சீர் செய்ய முன் வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-288)

# ஆயுள்வேத மருந்தகம் பூட்டிய நிலையில்

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு உப அலுவலக ஆயுள்வேத மருந்தகம் வைத்தியர் இன்றி பல மாதங்களாக பூட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இந்த ஆயுள்வேத மருந்தகம் வைத்தியர் இல்லாததனால் பூட்டப்பட்டுள்ளதாக பிரதேச சபை அதிகாரிகள் தெரிவித்தனர். எனவே இந்த மருந்தகத்துக்கு ஆயுள்வேத மருத்துவர் ஒருவரை நியமிப்பதற்கு பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-127)

# நிதிச் செயற்பாடுகள் முடக்கப்பட்டதால் செயற்படா நிலையில் கற்சிலைமடு சங்கம்

முல்லைத்தீவு, டிசெ.4

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிதிச் செயற்பாடுகள் முடக்கி வைக்கப்பட்டிருப்பதால் சங்கத்தால் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளதாக அதன் நிர்வாகிகள் கவலையும், விசனமும் அடைந்துள்ளனர்.

மேலும் தமது சங்கத்தில் முறைகேடான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறாத நிலையில் அதன் நிதிச் செயற்பாடுகள் முடக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் சங்க நிதியைக் கொண்டு மக்களுக்கான அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதிலும், ஒப்பந்தகாரர்களின் கொடுப்பனவுகளை வழங்குவதிலும், புதிய ஒப்பந்தங்களைப் பெறுவதிலும் தடைகள் ஏற்பட்டுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் மக்களுக்குரிய நிதியைக் கொண்டு அவர்களுக்கான சேவைகளை மேற்கொள்வதில் தேவையற்ற தடங்கல்கள் காணப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தாம் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குப் பல தடவைகள் எடுத்துக் கூறியபோதும் பயன் கிட்டவில்லையென இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலை தொடருமேயானால் வடமாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வருவதைத் தவிர வேறு வழியேதும் இல்லையெனக் கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் இ.தனபாலசிங்கம் தெரிவித்தார். (க-500)

# புதிய கட்டட வேலைகள் இடைநிறுத்தம்

அக்கராயன், டிசெ.4

கட்டட வேலை ஒப்பந்தக்காரர்களின் இழுத்தடிப்பால் துணுக்காய் பிரதேச செயலகத்தின் புதிய கட்டட வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலகக் கட்டடப்பணிகள் கடந்த ஒரு வருடமாக இடம்பெற்று வருகின்றன. ஆனால் உரிய காலத்தில் ஒப்பந்தகாரர்கள் பணிகளை நிறைவு செய்யாத நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக அப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அப்பணிகள் எப்போது தொடங்கும் என்பது ஒரு கேள்விக்குறியாக உள்ளது. மீளவும் கட்டட ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. எமக்கு முக்கியம் எமது கட்டடம். நாம் பணியாற்றும் சிறிய கட்டடத்தில் இட நெருக்கடிகள் உருவாகியுள்ளன. துணுக்காயில் வீதி அபிவிருத்தியில் பிரதேச சபையின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியன. பிரதேச சபையினர் கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு கூடிய வேலைகளை மேற்கொள்கின்றனர். வரும் புதிய ஆண்டு மகிழ்ச்சிகரமாக மலரும் என்று எதிர்பார்க்கின்றோம். மக்களின் வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யலாம் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-410)

# சுத்திகரிப்பு வேலைகளில் அசமந்தம் சுகாதாரச் சீர்கேட்டுடன் ஒட்டுசுட்டான்

முல்லைத்தீவு, டிசெ.4

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பிரதேச சபையினர் சுத்திகரிப்பு வேலைகளை ஒழுங்காக மேற்கொள்ளாததால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுகின்றன.

குப்பை கூளங்களும், கால்நடைக் கழிவுகளும் தேங்கியுள்ளதால் இங்கு வசிக்கும் மக்கள் பெரும் இடையூறுகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

முக்கியமாக ஒட்டுசுட்டான் பிரதான சந்தியில் இந்த நிலையம் காணப்படுகின்றது.

இது தொடர்பாகப் பிரதேச சபையினரிடம் மக்கள் கேட்டபோது இவற்றை அகற்றுவதற்குரிய வேலையாள்கள் தம்மிடமில்லையெனப் பதிலளிக்கப்பட்டதாக மக்களால் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபையிடம் உழவு இயந்திரம் உள்ளபோதும் சுத்திகரிப்புப் பணியில் அக்கறை செலுத்துவதில்லையென மக்கள் குறை கூறுகின்றனர்.

ஏற்கனவே இடம்பெற்ற சர்வதேச சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளைக் கூட அவர்கள் கடைப்பிடிக்கத் தவறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தற்போது பருவ மழை காலம் என்பதால் பல்வேறு நோய்களும் பரவக் கூடிய சாத்தியமுள்ள நிலையில் பிரதேச சபையினர் இவ்வாறு அலட்சியப் போக்குடன் நடந்து கொள்கின்றமை பலருக்கும் வருத்தத்தை அளித்துள்ளது. (க-500)

# வெள்ளத்தில் வீதி

புதுக்குடியிருப்பு, டிசெ.4

தற்போது பெய்து வரும் மழை காரணமாக புதுக்குடியிருப்பு - பரந்தன் பிரதான வீதியில் மூங்கிலாற்றுப் பகுதியில் வீதியை மேவி வெள்ளம் பாய்வதனால் பெரும் போக்குவரத்து நெருக்கடி தோன்றியுள்ளது.

இதனால் இந்த வீதியூடாகப் பயணம் செய்பவர்கள் பெரும் அவலங்களுக்கு ஆளாகி வருகின்றனர். குறிப்பாகச் சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் செல்வோரின் நிலை பரிதாபமாகவுள்ளது. (க-555)

## கௌரவம்...



உரிய மரியாதை: மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் பன்னிருதிருமுறை முற்றோதலில் ஈடுபட்ட ஒருவருக்கு வவுனியா மாவட்ட இந்து மாமன்றத் தலைவர் தேவராசா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார். (431)

# பிரதேச சபையின் களஞ்சியம் உடைக்கப்படவில்லை பதுக்கி வைக்கப்பட்ட பொருள்களே அங்கிருந்தன

## நாமலின் மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ.4

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் களஞ்சிய அறை உடைக்கப்பட்டதாக வெளிவந்த செய்தியில் எந்தவிதமான உண்மையும் இல்லையென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் கே. கீதநாத் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றினை நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்குக் கிளிநொச்சியில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் ஏற்பாடு செய்திருந்த அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்;

கரைச்சிப் பிரதேச சபையினால் தமது களஞ்சியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டடமானது தனியார் ஒருவருக்குச் சொந்தமானது. அதனை அதன் உரிமையாளரிடம் இருந்து ஒப்பந்த அடிப்படையில் பெற்று நாம் எமது அலுவலகத்தை அமைத்து வரும் நிலையில், பிரதேச சபையினர் இதனைத் தமது களஞ்சிய அறை எனக் கூறுகின்றனர். ஆனால் இதற்குரிய எந்தவிதமான ஆவணங்களையும் இவர்கள் கொண்டிருக்கவில்லை.

இதேவேளை அரசினால் வழங்கப்பட்ட தும்புத்தடி, விளக்குமாறு, கையுறைகள் என்பன பயன்படுத்தப்படாத நிலையில் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டன. இதைவிட மண்வெட்டி, குப்பைத் தொட்டிகள் என்பனவும் காணப்பட்டன. இந்தப் பொருள்கள் யாவும் கூரையில்லாத பாழடைந்த மேற்படி கட்டடத்தினுள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

பிரதேச சபை நிர்வாகத்தினால் கூறப்படுகின்ற இக் களஞ்சியப் பகுதியில் நாம் பொலிஸ் உத்தியோகத்தருடன் சென்றுதான் முதலாவது துப்புரவுப் பணிகளை மேற்கொண்டிருந்தோம்.

அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த பொருள்களின் விவரம் யாவும் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டதுடன் அப்பொருள்களின் பதிவுகளை நாங்களும் வைத்துள்ளோம். பொருள்களும் பாதுகாப்பாக உள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)

# ஒட்டுசுட்டானில் தனிப் பிரதேச சபை; பிரதேச மக்கள் மீண்டும் கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ.4

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கென தனியானதொரு பிரதேச சபை அமைய வேண்டுமென இந்தப் பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

ஒட்டுசுட்டான் 27 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பரந்து விரிந்த பிரதேசமாகும். வடக்கே பேராறு, கிழக்கே நெடுங்கேணி ஒதியமலை, தெற்கே திருமுறிகண்டி, மேற்கே முத்து ஐயன்கட்டு என இதன் பிரதேசம் விரிவடைந்து காணப்படுகின்றது. அதிகளவான குடும்பங்களும் இங்கே வசிக்கின்றன. ஒட்டுசுட்டானில் ஏற்கனவே தனியானதொரு பிரதேசசபை செயற்பட்டு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் கடந்த பல வருடங்களாகப் புதுக்குடியிருப்புடன் ஒட்டுசுட்டான் இணைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள வரிகள் அறவீடு செய்யப்பட்டுப் புதுக்குடியிருப்பிலேயே அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் ஒட்டுசுட்டானில் பிரதேச சபையின் செயற்பாடுகள் எதுவும் நடைபெறுவதில்லை.

அத்துடன் இந்தப் பிரதேச சபை தனியாக இயங்குமாயின் பிரதேச மக்கள் அதிக பயன்களைப் பெறுவார்கள்.

மேலும் அண்மையில் இங்கு வருகை தந்த வடபிராந்திய ஆணையாளர் ஐ.எம்.எஸ். மொகைதீனின் கவனத்துக்கும் இந்த விடயம் மக்களால் கொண்டு வரப்பட்டது. (க-500)

# மாதிரிப் பாடசாலையாக தண்டுவான்

அக்கராயன், டிசெ.4

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள தண்டுவான் அ.த.க.பாடசாலை மாதிரிப் பாடசாலையாகத் தோற்றம் பெற்று வருகிறது.

மிகவும் பின்தங்கிய கிராமத்தில் உள்ள இந்தப் பாடசாலை புலம் பெயர்ந்த உறவுகளின் உதவியுடன் முன்மாதிரிப் பாடசாலையாக உருப்பெற்று வருகிறது. மாணவர்களின் விளையாட்டுப் பூங்கா, நூலக வசதிகள் என்பன உருவாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை துணுக்காய் கல்வி வலயத்தின் எல்லைப்புறப் பாடசாலையான ஒதியமலை அ.த.க.பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-410)

மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD, Vedios என்பன மிக விரைவாக அனுப்பிட DHL

நத்தார் புதுவருட விசேட சலுகை!!!

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு). கடலுணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும். வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

உலக நாடுகளுக்கு மிகக் குறைந்த கட்டணமாக 600 /=இருந்து அறவிடப்படுகின்றது

220க்கு மேற்பட்ட நாடுகளுக்கு மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு தேவையானஅனைத்து பொருட்களை அனுப்பிட

DHL WORLDWIDE EXPRESS

திருமுருகன் கொம் நெற்

இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.
2b நெல்சன் பிளேஸ், கொழும்பு - 6

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சித்த மருத்துவத்தின் சிறப்பை சீரழிக்க மனங்கொள்ளாதீர்!

சுதேச வைத்தியர்கள் மேற்கத்தைய (ஆங்கில) வைத்திய மருந்து வகைகளை நோயாளிகளுக்கு வழங்கிச் சிகிச்சை செய்வது சட்டவிரோதமானது. அவ்வாறு வைத்தியம் செய்வோர் தொடர்பாக சமூக நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகள் விழிப்புடன் செயற்பட்டு நோயாளரின் உரிமைகளைக் காப்பாற்ற உதவ வேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் வடமாகாண சுதேச வைத்தியத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சியாமளா துரைரத்தினம். அவருடைய வேண்டுகோள் நியாயமானது; சமூக நலன் கருதியது.

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த பதின்மூன்று வயது மாணவி ஒருவருக்கு சுதேச மருத்துவர் ஒருவர், ஆங்கில மருந்தை அளவுப் பரிமாணத்துக்குக்கு அதிகமாக வழங்கினார் என்றும், அதனால் அம்மாணவி மரணமானார் என்றும் எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து பணிப்பாளர் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார் என்று கொள்ளலாம்.

சுதேச வைத்தியராகத் தொழில் செய்யும் பலரின் தவறான சிகிச்சை முறையால், இதற்கு முன்னரும், நகரம் தொடக்கம் கிராமம் வரை பல நோயாளர்கள் பாதிக்கப்பட்டதாக பகிரங்கமற்ற முறையில் தகவல்கள் வெளிவந்திருந்தன. ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் அவை குறித்து முறைப்பாடு செய்வதில் ஆர்வம் காட்டியதில்லை. நாங்கள்தானே வைத்தியத்துக்குச் சென்றோம்; என்ன செய்வது என்ற நிலைப்பாட்டினால் பாதிப்புகளை வெளிக்கொணர மக்களில் அனேகர் விரும்புவதில்லை.

மேற்கத்தைய வைத்திய முறை இலங்கைக்கு அறிமுகமாவதற்கு முன்னர், தமிழ், சிங்கள, முஸ்லிம் பிரதேசங்களில் அந்தந்தப் பிரதேசங்களின் பரம்பரை வைத்திய முறைகளான சித்த, ஆயுள்வேத, யுனானி வைத்திய முறைகளே மக்களின் நோய்களைத் தீர்த்தன; அவர்களைச் சுகநலத்துடன் வாழ வழி செய்தன. ஆங்கில வைத்தியத்தில் உடனடி நிவாரணம் அதன் சிறப்பம்சமாகும். அதேபோன்று பக்க விளைவுகளும் உண்டு. முன்னர் குறிப்பிட்ட மூன்று சுதேச வைத்திய முறைகளில் நோயாளி குணமாவதற்கு ஒப்பீட்டளவில் கூடுதல் காலம் பிடிக்கும். பக்க விளைவுகளும் மிகமிகக் குறைவு. அதேவேளை, நோய்களைப் பரிபூரணமாகத் தீர்க்கும் சிறப்பு அவற்றிடம் உண்டு. இத்தகைய ஏற்ற, இறக்கங்களால் நாடு முழுவதிலும் ஆங்கில வைத்தியம் இப்போது மேலோங்கி நிற்கிறது.

மக்களும் அந்த நவீன வைத்தியத்தையே பெரிய அளவில் நாடுவது இயல்பாகவும் பொது மயப்பட்டதாகவும் மாறிவிட்டது. எனினும் ஒப்பீட்டளவில் ஆயுள்வேத வைத்தியம் சிங்கள மக்களின் அபிமானத்தை இன்னும் இழக்கவில்லை. அரசாங்கம் அதற்கு ஊட்டமளிக்கும் விதத்தில் ஆதரவும், நிதி உதவிகளும், அபிவிருத்தி வாய்ப்புகளும் வழங்கி வருவதால் அதன் மேன்மைத்துவம் பெரிய அளவில் குன்றிவிடவில்லை.

சித்த வைத்தியமோ அதன் வளர்ச்சிக்குரிய ஏதுக்களும் ஆதரவும் இல்லாததால், தனது முந்திய நிலையிலிருந்து தொய்ந்து தொங்கிக் கொண்டிருக்கும் கட்டத்தை அடைந்திருக்கிறது.

சித்த வைத்தியம் பரம்பரை வைத்தியமுறை என்று பெயர்பெற்றது. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் ஒவ்வொரு நோய்க்குரிய, வழிவழி வந்த வாகடங்களின் பிரகாரம் மருந்து வகைகளைத் தாமே உரிய வகையறாப்படுத்தி வழங்குவது முந்திய சித்த வைத்திய மரபாக விளங்கியதும் உண்டு.

நோய்க்குரிய மருந்துகளைத் தயாரிப்பதற்கான செய்முறைகள், அளவுகள், சேர்க்கைகள் சம்பந்தப்பட்ட ஒரு குடும்பத்தின் அல்லது இரண்டொரு குடும்பத்தினரின் ஏகபோகச் சொத்துகளாக விளங்கின.

அதன் காரணமாக மருந்துகளைத் தயாரிப்பதிலும் அவற்றைக் கொண்டு சிகிச்சை வழங்குவதிலும் சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் அல்லது குடும்பங்கள் அர்ப்பணிப்புடனும் செயல்திறனுடனும் தமது பெயர் கெட்டுவிடக்கூடாது என்ற பற்றுதியுடன் பணியாற்றினார்கள்.

அந்தப் பாரம்பரியம் மங்கி மறைந்து கொண்டு போனாலும், ஒவ்வொரு கிராமத்திலும், குறிச்சியிலும் வைத்திய மரபுகளைப் பேணிக் காத்தவர்களின் பெயர்கள் இன்னும் மங்காமல் உள்ளதைக் காணலாம்.

பரம்பரை வைத்திய மரபில், பெயர்பெற்ற, சிறப்பு வைத்தியர்களாகத் திகழ்ந்தவர்கள் தமது புதல்வர்கள், புதல்விகள் ஐம்பது வயதான பின்னரே வாகடங்களைப் பயிற்றுவிப்பர் என்று சொல்லக் கேட்டதுண்டு.

சித்த வைத்தியத்துறையில் பரம்பரை முறை தளர்ந்து, பொது முறை வந்ததால் வைத்தியர் குடும்பங்களைச் சேராதவர்களும் வைத்தியர்களாகும் வாய்ப்பு வந்துள்ளது. அது ஒரு வகை முன்னேற்றம் என்று கொள்ளும் போது -

அத்துறை சார்ந்தவர்கள் ஆங்கில மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்குவதும் அதனால் பல பாதகமான பக்கவிளைவுகள் உண்டாவதும் இப்போது சர்வசாதாரணமாகிவிட்டது.

வீட்டுக்கு வீடு வாசற்படி, என்பது போல சித்த வைத்தியம் தனது மதிப்பையும் மகத்துவத்தையும் இழக்கும் காலமாகிவருகிறது இப்போது.

சித்த வைத்தியர்கள் இது குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். கீர்த்தியுடன் விளங்கிய எங்கள் பாரம்பரிய வைத்தியம் நோயாளியின் உயிர் குடிக்கும் மருத்துவம் என்று பெயரெடுக்க இடம் கொடுக்கலாகாது. இது விடயத்தில் சித்த வைத்தியத்துறையினர் மனமூன்றி தடுப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த வேண்டும். சித்த வைத்தியர்கள் தங்கள் வைத்தியத்தின் முந்திய சிறப்பையும், மக்கள் அதன் மேல் வைத்திருந்த மதிப்பையும் மங்கவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

நோய் நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்.

# 2040 இல் மட்டக்களப்பு நகரின் பெரும்பகுதி கடலுக்குள் மூழ்கிவிடும் அபாயம் ஏற்படும்

## விஞ்ஞானிகள் எதிர்வு கூறல்

கொழும்பு, டிசெ.4

2040ஆம், 2050 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் கடல்மட்டம் உயருமானால் மட்டக்களப்பு நகரின் 20 சதவீதமும் நீர்கொழும்பு நகரின் 15 சதவீதமும் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளது. இவ்வாறு மொரட்டுவை பல்கலைக்கழகப் பேராசிரியர் பி.கே.எஸ் மகாநாம எதிர்வு கூறியுள்ளார்.

ஐ.நா.வின் மனித குடியிருப்புக்கான திட்டத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வறண்ட வலயம், ஈர வலயம் என்ற அடிப்படையில் முறையே மட்டக்களப்பு மற்றும் நீர்கொழும்பு ஆகிய கரையோர நகரங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வில் பங்குபற்றிய விஞ்ஞானிகளின் எதிர்வுகூறலுக்கு அமைவாக 2040, 2050ஆம் ஆண்டுகளில் கடல் நீர் மட்டம் உயருமானால் மட்டக்களப்பு நகரக் கரையோரத்தில் 20 சத வீதமும் நீர்கொழும்பு நகர கரையோரத்தில் 15 சத வீதமும் மூழ்கும் அபாயம் உள்ளது.

இருப்பினும் இந்த எதிர்வு கூறல் முற்றாகச் சாத்தியமாகும் என்றும் கூற முடியாது. கால நிலை மாற்றங்களின் தாக்கத்தால் ஏதாவது திருப்பங்கள் ஏற்படலாம். அல்லது ஏற்படாமலும் போகலாம்.

ஏனைய கரையோர நகரங்களிலும் இப்படியான தாக்கங்கள் இருக்கலாம். ஆனால், அங்கு இவ்வாறான ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறு மேற்கொள்ளப்படுமாயின் அவை பற்றிய திடுக்கிடும் உண்மைகளும் வெளிப்படுத்தப்படலாம்.

கடலுக்குள் கரையோரங்கள் மூழ்குவதை தடுப்பதற்குரிய செயல்திட்டமொன்று எங்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் நிதிப்பிரச்சினை அதற்குத் தடையாக இருக்கின்றது.

எனினும், இந்தத் திட்டத்துக்குத் தற்போது நோர்வே உதவ முன் வந்துள்ளது. இந்த நிதி கிடைக்குமானால் இந்த நகரங்களை கடல் மூழ்கடிப்பதை முற்றாகத் தடுக்க முடியா விட்டாலும் ஓரளவுக்கேனும் தக்க வைக்க முடியும். - என்றார். (ங- சி)

# சிறுபான்மையினருக்கு ஏற்படும் அநீதிக்கு இலங்கைத் தீவில் என்றுமே தீர்வில்லை

## யோகேஸ்வரன் எம்.பி. அறிக்கை

கொழும்பு, டிசெ.4

சிறுபான்மையினருக்கு ஏற்படும் அநீதிகளுக்கு இலங்கைத் தீவில் தீர்வில்லை என்பதையே அமைச்சர் கெஹலியவின் கருத்து தெளிவாக வெளிப்படுத்துகிறது. இது அமைச்சரின் கருத்து என்பதை விட பேரின வாதிகளின் மன நிலையும் இவ்வாறாகத் தான் உள்ளது. இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

போர் முடிந்துவிட்டது என்று மார் தட்டும் அரசு எதற்காக விடுதலைப்புலிகளை பற்றி இன்னமும் ஏப்பமிடுகிறது? அனுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் மீதான தாக்குதலை நியாயப்படுத்துவதற்காக அரசு விடுதலைப்புலிகளின் பெயரைப் பயன்படுத்துகிறது.

அத்துடன் சிறுபான்மையினருக்கு பெரும்பான்மை சமூகத்தினரால் அச்சுறுத்தல் உள்ளது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தாம் செய்யாத குற்றத்திற்காகத் தண்டனை அனுபவித்து வரும் எம் உடன்பிறப்புக்களை இன்னமும் துன்பப்படுத்துவதுடன், அதனை நியாயப்படுத்துவதற்காகச் சிறையில் உள்ளவர்கள் நினைக்காத விடயத்தைக் கூடக் கூறி நடந்த சம்பவத்துக்கு விசாரணையை இல்லாது செய்ய புனையும் கதை யாராலும் ஏற்கக் கூடியது ஒன்றல்ல.

இறந்தவர்களை நினைப்பது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட உரிமை அந்த வகையில் எம் சமூகத்தின் சார்பில் இறந்தவர்களை நினைப்பதற்கு உரிமை எம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. இதனை யாரும் தடுப்பதற்கு உரித்துடையவர்கள் அல்லர். சில செயற்பாடுகளை நாம் நினைக்க மறந்தாலும் சிங்கள தேசம் மறக்க விடாமல் செய்ய முனைகிறது - என்றுள்ளது. (ங-சி)

# 9 ஆயிரம் அரச வைத்தியர்கள் வெளிநாடுகளில் தங்கியிருப்பு

கொழும்பு, டிசெ.4

மேலதிக பயிற்சிநெறிகளுக்காக வெளிநாடு சென்றுள்ள அரச வைத்தியர்கள் 9 ஆயிரம் பேர் அந்த நாடுகளிலேயே நிரந்தரமாகக் கடமையாற்றுகின்றனர் என்று அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ள சுகாதார அமைச்சு, இதனால் அரச வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு மேலதிக பயிற்சித் திட்டங்களுக்கு வெளிநாடு செல்லும் வைத்தியர்கள் பயிற்சிநெறியை முடித்துக்கொண்டு அந்த நாடுகளிலேயே நிரந்தரமாகத் தங்கி, அதிக சம்பளத்திற்கு வேலை செய்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் தங்கியுள்ள 9 ஆயிரம் வைத்தியர்களுள் விசேட வைத்திய நிபுணர்களும் உள்ளடங்கியுள்ளனர். இலங்கை அரசின் நிதியில் கற்று மருத்துவர்களாக வெளியேறிய இவர்கள் இலங்கை மக்களுக்குச் சேவை புரியாமல் தம்முடைய சொந்த நலன்களையும், பொருளாதார மேம்பாட்டையும் மனதில் கொண்டு வெளிநாடுகளில் தங்கிவிடுகின்றனர். அதனால் இங்குள்ள மக்கள் போதிய மருத்துவர்கள் இன்மையால் அவதிப்படுகின்றனர். இதற்காக வெளிநாடுகளிலிருந்து மருத்துவர் குழுக்களின் உதவிகளைப் பெற வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்ட அபத்தமான நிலை ஏற்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ங-சி)

**நாளை**

கார்த்திகை 19 திங்கட்கிழமை 5.12.2011
திதி: தசமி மு.ப 11.22 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
காலை. 7.45 வரை
சுபநேரம்: 12.16-1.46 வரை, ராகு காலம்: 7.46-9.16 வரை

# மரண அறிவித்தல்



## திருமதி பரமு சரஸ்வதி

மலேசியாவைபிறப்பிடமாகவும்இடைப்பிட்டி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமு சரஸ்வதி 02.12.2011 (வெள்ளிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் திரு. திருமதி ஆறுமுகம் தம்பதியரின் அன்பு மருமகளும் பரமுவின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகதிலகர், விநாயகதிலகர் மற்றும் சுகந்திரலீலா, காந்திதிலகர், செங்காதிலகர் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்ப லோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைப்பிட்டி, காரைநகர். (11176)(3,6,9)

தகவல்: ப.காந்திதிலகர்(மகன்)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05.08.1935 மறைவு 15.12.2010

## திருமதி காந்தரூபி (அரியமலர்) சுப்பிரமணியம்

திதி: கார்த்திகை பூர்வபக்க தசமி(4.12.2011)

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறுமா எங்கள் துயரம்
கண்மூடித் திறக்கும் முன் காலன் உம்மை அணைத்தானோ
தினந்தோறும் உமது நினைவு, கண்ணீர் காவியமாகிறது
உமது பிரிவால் நிம்மதியை தொலைத்து விட்டோம்.

சித்தாவத்தை, உடுவில் வடக்கு. [11143][3,6,9]

உமது பிரிவால் வாடும்: குடும்பத்தினர்.

# 9 ஆயிரம் அரச வைத்தியர்கள் வெளிநாடுகளில் தங்கியிருப்பு

கொழும்பு, டிசெ.4

மேலதிக பயிற்சிநெறிகளுக்காக வெளிநாடு சென்றுள்ள அரச வைத்தியர்கள் 9 ஆயிரம் பேர் அந்த நாடுகளிலேயே நிரந்தரமாகக் கடமையாற்றுகின்றனர் என்று அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ள சுகாதார அமைச்சு, இதனால் அரச வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு மேலதிக பயிற்சித் திட்டங்களுக்கு வெளிநாடு செல்லும் வைத்தியர்கள் பயிற்சிநெறியை முடித்துக்கொண்டு அந்த நாடுகளிலேயே நிரந்தரமாகத் தங்கி, அதிக சம்பளத்திற்கு வேலை செய்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் தங்கியுள்ள 9 ஆயிரம் வைத்தியர்களுள் விசேட வைத்திய நிபுணர்களும் உள்ளடங்கியுள்ளனர் என சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# உபகரணங்கள் வழங்கல்

அச்சுவேலி,டிசெ.4

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான வாகனங்கள், கருவி சாதனங்கள், உபகரணங்கள், வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வங்கி முன்றிலில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக பொதுமுகாமையாளர் செல்வி எம்.எஸ்.நனிந்தா, மேலதிக பொது முகாமையாளர் கலாநிதி சாம் சமரசிங்க, பிரதிப் பொதுமுகாமையாளர்களான ஏச்.எம்.முதியான்சே, டி.எம்.குணசேகர, இலங்கைவங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி. சுமணசிறி ஆகியோர் கலந்து கொள்வர்.

அச்சுவேலி இலங்கை வங்கிக்கிளை முகாமையாளர் த.புவனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்கள் வாழ்வாதார உதவிக்கான வாகனங்கள், கருவி சாதனங்கள், உபகரணங்கள் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

(ம-11)

# அந்தியேட்டி சபிண்டீகரண நினைவுத்துளிகள்



மண்ணுலக மலராக
**15.01.1931**

விண்ணுலக விருட்சமாக
**04.11.2011**

திதி: தசமி **04.12.2011**

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் அரியாலை சாஸ்திரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரதீபம்

## அமரர் புண்ணியமூர்த்தி சேதுப்பிள்ளை

அன்புடனே எமைப்பேணி அனுதினமும் காத்தீரேயம்மா
இன்புடனே நாம் வாழ ஏற்றன எல்லாமும் செய்தீரேயம்மா
ஓடோடி நாங்கள் வர நீங்கள் ஓடோடிச் சென்றதெங்கே
நீங்கள் இல்லா வீடு இன்று வெறிச்சோடி விட்டதம்மா

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மலர் வளையம் வைத்து ஆறுதல் தெரிவித்த அன்புள்ளங்கள் அனைவர்க்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (04.12.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மாதமொன்று மறைந்ததம்மா
மனக்கவலை மறையவில்லையம்மா
என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காக
என்றும் இறைவனை வேண்டி நிற்கும்

19/1, சாஸ்திரியார் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(11185)(5,6)

# வேலையாள் தேவை

சங்கானை பட்டின சபை, சண்டிலிப்பாய் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்டவர்களின் விண்ணப்பங்கள் விரும்பத்தக்கது.

1. பைக்கிங் அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

2. பார ஊர்தி சாரதி [பஸ் உட்பட]
40 வயதுக்கு மேற்பட்ட 5 வருடத்துக்கு மேற்பட்ட வாகன ஓட்டும் அனுபவமுள்ளவர்கள் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
விளம்பர இல.4202, C/O, உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6499) (1,6,9)

# மரண அறிவித்தல்

## ஜெயகரன் ராதிகாநிதி



வட்டக்கச்சி, இல - 79, கட்சன் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயகரன் ராதிகாநிதி 02.12.2011 வெள்ளிக்கிழமை அன்று வவுனியாவில் அகால மரணமானார்.

அன்னார் பாலசிங்கம் ஜெயகரனின் (கயூரா ஐஸ்கிறீம் உரிமையாளர், 2ஆம் ஒழுங்கை, பண்டாரிக்குளம்) அன்பு மனைவியும், கயூரனின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சிவசிதம்பரம் (ஓவசியர்) மற்றும் மலர் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - லெட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகளும், புஸ்பாகரன் (இந்தியா), மனோகரன் (திருவையாறு), ஸ்ரீ கரன் (லண்டன்), கலாநிதி (ஜேர்மனி), தவநிதி (பிரான்ஸ்), சிவகரன்(லண்டன்), அம்பிகை நிதி (வட்டக்கச்சி) உமைபாகரன்( பிரான்ஸ்), கிருபாகரன்(பிரான்ஸ்), அருள்நிதி(கனடா), கிருசாநிதி (லண்டன்), தேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தங்கையும், வசந்தகுமாரி (விசுவமடு), லீலாவதி (ஜேர்மனி), ரஞ்சிதா (றியோ கூல்பார்- வவுனியா), சாந்தகுமாரி (புளியங்கூடல்), ஜெயந்தி (புளியங்கூடல்), முரளிதரன் (அனுரா ஐஸ்கிறீம் , உடையார்கட்டு) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2011) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் மம்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.79, கட்சன் றோட், வட்டக்கச்சி. (11148)(3,6,9)

தகவல்: கணவர்(பா.ஜெயகரன்-கரா, கயூரா ஐஸ்கிறீம்)

# முக்கிய அறிவித்தல்

## நகராட்சி மன்றம் – சாவகச்சேரி

- சாவகச்சேரி நகராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குள் வணிக நிறுவனங்களை நடத்துவோர் தங்களது வணிக நிறுவனங்களின் முகப்பில் - தங்களால் வியாபார உரிமம் பெறப்பட்ட வணிக நிறுவனத்தின் பெயர் மட்டும் பொறிக்கப்பட்ட ஒரு விளம்பரப் பலகையினை மட்டும் வரிச்செலுத்துகை எதுவுமின்றி காட்சிப்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட விளம்பரப் பலகைகள், வேறு நிறுவனங்களின் அனுசரணையுடனான விளம்பரப் பலகைகள், விளம்பரப் பதாகைகள், அரச மற்றும் தனியார் காணிகளில் அல்லது கட்டடங்களில் காட்சிப்படுத்தப்படும் பெரிய விளம்பரப் பலகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள் அனைத்தும் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் உரிய கட்டணங்களை செலுத்தி அனுமதியைப் பெற்றபின்பு - அந்த அனுமதி இலக்கத்தை உரிய விளம்பரக் காட்சிப்படுத்தலில் பொறித்தபின்பே காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
- அவ்வாறு அனுமதி பெறாமலும் அனுமதி இலக்கம் பொறிக்கப்படாமலும் காட்சிப்படுத்தப்படுபவை நகராட்சி மன்றத்தால் எதுவித முன்னறிவித்தலுமின்றி அகற்றப்படும். அவை அகற்றப்பட்ட திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் - உரிய ஆண்டுக்கான விளம்பரக்கட்டணம் மற்றும் தண்டப்பணம் ஆகியவற்றை செலுத்திய பின்பு மீளப் பெறமுடியும்.
- தற்போது இவ்வகையான விளம்பரங்களை அனுமதி பெறாது காட்சிப்படுத்தியுள்ளோர் - நகராட்சி மன்றத்தில் அவற்றுக்கான அனுமதியினை இன்றிலிருந்து 07 நாள்களுக்குள் பெற்றுக்கொண்டு அந்த அனுமதி இலக்கத்தை அவற்றில் பொறிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செய்யத் தவறுவோரது விளம்பரக் காட்சிப்படுத்தல்கள் யாவும் நகராட்சி மன்றத்தால் அகற்றப்படும்.
- நகராட்சி மன்ற அனுமதியுடன் பொருத்தப்பட்டுள்ள சுவரொட்டிப் பலகைகளில் தங்களது சுவரொட்டிகள், விளம்பரங்களை பொருத்த விரும்புவோர் நகராட்சி மன்றத்தின் அனுமதியைப் பெற்று காட்சிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

நகராட்சி மன்றம்
சாவகச்சேரி
02.12.2011

(சி-2878)(3,6,9)

இ.தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்

# இடைக்காடு கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியமர்வு உடன் சாத்தியமில்லை

## வலி.கிழக்கு பிரதேச செயலர் தெரிவிப்பு

அச்சுவேலி, டிசெ.4

வளலாய் - இடைக்காடு கிராம அலுவலர் பிரிவில் மக்களை மீள்குடியேற்றம் செய்வது உடனடியாக நடைபெறமாட்டாது. காலம் குறிப்பிடப்படாமல் பின்தள்ளிப் போடப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் பொது மக்கள் தமது உடல், உள ரீதியிலான பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு ஒத்துழைக்க வேண்டும் என கோப்பாய் பிரதீபன் பிரதேச செயலர் மீள்குடியேற்றத்துக்குத் தயார் நிலையில் காத்திருக்கும் மக்களுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலும் ஜே/284 வளலாய் கிராம அலுவலர் பிரிவிலும் ஜே/283 இடைக்காடு கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியேற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட மக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வளலாய் பிள்ளையார் கோயிலில் பூசை வழிபாட்டுக்குப் பின்னர் பிரதான வீதிகளில் நின்று வீடுகளைக் கண்ணால் பார்க்க மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.

இப் பகுதியில் மிதிவெடி அபாயம் தொடர்பாக மக்களுக்கு அங்கு விளக்கம் அளிக்கப்பட்டது. யாழ். மாவட்ட செயலக மிதிவெடி அகற்றும் பிரிவினர் மிதிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் வழங்கும்வரை மீள்குடியேற முடியாத நிலை உள்ளதாகவும் கோப்பாய் பிரதேச செயலரால் விளக்கமாகக் கூறப்பட்டது.

பொதுமக்கள் மீள்குடியேறுவதற்கு அவசரப்படும் நிலையில் மிதிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் இதுவரை வழங்கப்படாமையால் மீள்குடியேற்றத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

வளலாய் - இடைக்காட்டில் மீளக்குடியேற்றுவதற்குத் தயாராக இருக்கும் மக்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வளலாய் பிள்ளையார் கோயில் முன்றிலில் மீண்டும் நடைபெற்றது. மேற்படி கலந்துரையாடலில் கோப்பாய் பிரதேச செயலர் பொது மக்கள் முன்னிலையில் உரையாற்றும் போது,

மீள்குடியேற்றம் தொடர்பான சமகால நிலைப்பாட்டை பொது மக்களுக்கு எடுத்து விளக்கினார். இந்தப் பிரதேசத்தில் இருந்து எத்தகைய பொருளும் பொருத்தமான அனுமதி பெறாமல் வெளியே எடுத்துச் செல்லக்கூடாது. அவ்வாறு ஈடுபடுபவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுச் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

மீளக்குடியேறுவதற்கு அண்மையில் கையளிக்கப்பட்ட பிரதேசம் பாதுகாப்புத் தரப்பில் இருந்து பொதுமக்களின் சிவில் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டு விட்டது. நிச்சயம் மீள்குடியேற்றம் நடைபெறும் என அவர் தெரிவித்தார்.

பொது மக்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிஸங்கஜயரத்தின உரையாற்றும் போது,

இடைக்காடு - வளலாய் கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் மீளக்குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து யாரும் எந்தப் பொருளையும் வெளியே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். இவ்வாறு எடுத்துச் செல்பவர்கள் சட்டநடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள் - என்றார். (த-11)

# வதிரி தோல் உற்பத்திச் சங்கத்தின் செயற்பாடு விரைவில் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.4

வதிரி தோல் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிக் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் இந்தச் சங்கத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பல மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சங்கத்தின் செயற்பாடு அண்மைக் காலமாக முடங்கியுள்ளது.

இச் சங்கத்தை செயற்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கும் அதன் செயற்பாடுகளைத் துரிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக இந்தச் சங்கத்தை சிறந்த முறையில் செயற்படுத்தும் வகையில் புதிய இயக்குநர் சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் மற்றும் கூட்டுறவு அதிகாரிகள், கரவெட்டிப் பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-26)

# காத்திருக்க வைக்கும் கைத்தொலைபேசிகள்

யாழ்ப்பாணம், டிசெ.4

*அலுவலகங்களில் பணி புரிவோரின் கையடக்கத் தொலைபேசி பாவனையால் சேவைபெற வரும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.*

*கையடக்கத் தொலைபேசி வைத்திருப்பது தற்போது நாகரிகமாக உருவாகியுள்ளதால் கையடக்கத்தொலைபேசி உத்தியோகத்தர், ஊழியர்கள் என அனைவரிடமும் உள்ளது.*

*அலுவலக வேளைகளில் உத்தியோகத்தர் கையடக்கத் தொலைபேசியில் கதைத்து முடியும் வரை அவரிடம் சேவை பெற வரும் பொது மக்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. கூடுதலாகப் பொது மக்கள் அந்த உத்தியோகத்தரைத் தேடி வந்து விட்டால் அவர் எழுந்து வேறு இடத்துக்குச் சென்று விடுவார். எழுந்த உத்தியோகத்தர் வரும்வரை மக்கள் காத்திருக்க வேண்டிய நிலை உருவாகி உள்ளது.*

*சக உத்தியோகத்தரைக் கட்டுப்படுத்தக் கூடிய உயர் அதிகாரி கூட அலுவலகத் தொலைபேசியை விடக் கையடக்கத் தொலைபேசியையே பயன்படுத்துவதால் சக உத்தியோகத்தர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*பொது மக்களுக்குச் சேவையாற்ற அலுவலகங்களுக்கு வரும் உத்தியோகத்தர்கள் தமது சேவையை மறந்து தொலைபேசியில் உரையாடுவதில் அக்கறையுடன் செயற்படுவதைப் பொது மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.*

*இந்த நிலையில் உரிய அதிகாரிகள் அலுவலக நேரங்களில் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவது கட்டுப்படுத்தப்படுமா எனவும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.* (த-207)

# நல்லூர் வீதியின் அவல நிலை



நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகவுள்ள பருத்தித்துறை வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் இருப்பதனால் இவ்வீதியால் செல்வோர் பெரும் அவலங்களைச் சந்திப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த வீதி சீரற்ற நிலையில் குன்றுங்குழியுமாகக் காணப்படுவதனால் தற்போது பெய்து வரும் மழையால் அங்கு வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் இதனால் வீதியில் தினமும் விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் குறித்த வீதியால் பயணிப்போர் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இந்த வீதியின் அவல நிலை பற்றி வீதி அபிவிருத்தி அதிகார சபையோ, மாநகர சபையே இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே இந்த வீதியை உடன் திருத்த ஆவன செய்ய வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரியுள்ளனர். (த-288)

# தரிசு நிலங்களில் நெற் செய்கை

யாழ்ப்பாணம், டிசெ.4

கோப்பாய் தரவைப் பகுதியில் உள்ள தரிசு நிலங்களிலும் இம்முறை பெரும்போக நெற்செய்கை அமோகமாக உள்ளது.

இப்பகுதியில் உள்ள தரிசு நிலங்கள் சீர்செய்யப்பட்டு நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அவை நல்ல நிலையில் உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த போகத்தைவிட இம்முறை பெரும்பாலான தரிசு நிலங்கள் உழுது சீர்செய்யப்பட்டன. இதனையடுத்து இந்த நிலங்களில் நெல் விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த-26)

# கால்நடைகளை கட்டி வளர்க்க கோரிக்கை

நவாலி, டிசெ.4

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் கால்நடை வளர்ப்போர் அவற்றைக் கட்டி வைத்து வளர்க்குமாறு பிரதேச சபைத் தலைவர் அ.ஜெபநேசன் அறிவித்துள்ளார்.

இந்தக் கால்நடைகளைக் கட்டாக் காலியாகத் திரிய விடுவதால் அவை வயல்களுக்குச் சென்று நெற் பயிர்களை இரவு, பகலாக அழித்து வருவதாக நவாலி, ஆனைக்கோட்டை, கட்டுடைப் பகுதி விவசாயிகள் முறைபாடுகளைத் தெரிவித்து வருகின்றனர்.

இதனால் கால்நடை வளர்ப்போர் உடன் கவனமெடுக்குமாறும் தவறும் பட்சத்தில் இவை பிரதேச சபையால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் பிடிக்கப்பட்டு அதிக பட்ச குற்றப்பணம் அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயத்தில் விவசாய சம்மேளனங்களும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (த-100)

# பண்ணை வீதி தொடர்பாக உடனடி நடவடிக்கை தேவை

## நடமாடும் சேவையில் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.4

தீவகப் பகுதிக்கான பிரதான வீதியான பண்ணை வீதி தொடர்பாக உடன் நடவடிக்கை எடுத்து தீவுப்பகுதிப் போக்குவரத்தை சீரமைக்க வேண்டும் என கடந்த வியாழக்கிழமை புங்குடுதீவு சர்வோதய மண்டபத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையின் போது வலியுறுத்தப்பட்டது.

இந்த வீதி இதுவரை எதற்காகத் திருத்தப்படமால் உள்ளது என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற நடமாடும் சேவையின் போது கேள்வி எழுப்பப்பட்டது.

பண்ணை வீதி மிகவும் மோசமாக உள்ளது. இதனால் போக்குவரத்துச் செய்வதில் பலத்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே மக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு உடன் வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்குமாறு இதில் கோரிக்கை விடுக்கப்பட்டது. (த-7)

# தொலைபேசி இணைப்புகளை விஸ்தரிக்க இரு இடங்களில் பரிவர்த்தனை அலகுகள்

யாழ்ப்பாணம், டிசெ.4

கொழும்புத்துறை, அரியாலை பகுதிகளுக்கான தொலைபேசி இணைப்புக்களை விஸ்தரிப்பதற்கு ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கென இப் பகுதிகளில் தொலைத்தொடர்புப் பரிவத்தனை அலகுகளை அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்துக்கு அருகிலும், அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியிலும் இந்தப் பரிவர்த்தனை அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரிவர்த்தனை அலகுகள் மூலம் இப்பிரதேசங்களுக்கான கேபிள் தொலைபேசி வசதி மேலும் அதிகரிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து இப்பகுதியில் தொலைபேசி இணைப்புகள் புதிதாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-26)

# காரைநகரில் வெள்ளம் பாதித்த மக்களுக்கு உலர் உணவுப் பொருள்

காரைநகர், டிசெ.4

காரைநகர் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 87 குடும்பங்களுக்கு ஒரு வார காலத்துக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

தோப்புக்காடு, சயம்பு வீதி ஆகிய இடங்களில் தற்காலிக வீடுகள் அமைத்துத் தங்கியிருக்கும் குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களை நேரில் சென்று பார்வையிட்ட காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் நீ.கண்ணன் விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்தக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் உடனடியாக வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

சமூக சேவைத் திணைக்களத்தின் ஊடாக 40 குடும்பங்களுக்குக் கூரைத் தகடுகளும் தறப்பாள்களும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த- 250)

உதயன்
04 டிசெம்பர் 2011ஞாயிற்றுக்கிழமை

# ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை
மடியில்
24.03.1957



ஆண்டவன்
அடியில்
16.12.2010

திதி:-
பூர்வபக்க தசமி

## அமரர் செல்லத்துரை பஞ்சாட்சரம்

BA (Hons)Dip.in Ed.,MED

குடும்ப மென்ற விருட்சத்தின் ஆணிவேராய்
கொண்ட மனையாளுக்கு நற் கணவராய்
பெற்றெடுத்த மழலைகளுக்குப் பாசமிகு அப்பாவாய்
பண்பும், பாசமும் ஊட்டி எம்மை
வாழ்வில் உயரவைத்த எம் தெய்வமே
உம் பாசந்தனை ஆணிவேராய்க் கொண்டு
உருவெடுத்ததே இந்தக் குடும்பமெனும் ஆலமரம்
எமை விட்டு நீர் சென்று ஓராண்டு ஓடி மறைந்தாலும்
மறையாது உம் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு
உம் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
நயினை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.05, கச்சேரி ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(1155)(2-6-9)

## வீதி புனரமைப்பு பணிகள் பூர்த்தி

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் நெல்சிப் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்வயல் இராமலிங்கம் பழைய பாடசாலை இணைப்பு வீதி, மீசாலை கேணியடி வீதி ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இவ்வீதி தொடர்பான மக்கள் பங்களிப்பு விடயங்கள் மற்றும் வீதிப் பராமரிப்பு, பாதுகாப்பு விடயங்கள் போன்றவை பற்றி இவ்வீதியைப் பயன்படுத்தும் மக்களுடனான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை அந்தந்த இடங்களில் நடைபெறவுள்ளதாக நகரசபை நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.


# Metro Travels

## விசேட விமானக் கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | Rs.13800 |
| Colombo-Tiruchirapally-Colombo | Rs.13600 |
| Colombo-Doha | Rs.22500 |
| Colombo-London | Rs.38000 |
| Colombo-Toronto | Rs.82000 |
| Colombo-Singapore-Colombo | Rs.30800 |
| Colombo-Frankfurt | Rs.50000 |
| Colombo-Milan | Rs.38000 |
| Colombo-Rome | Rs.51500 |
| Colombo-Paris | Rs.50000 |
| Colombo-Zurich | Rs.39000 |



All Taxes included, Credit Card Accepted With a Surcharge & Travel insurance,
Above Fares Are Subject to Seat Availability
Terms & Conditions Apply

ஐயப்பன் பக்தர்களுக்கு இந்தியா சென்று வர விசேட விமானக் கட்டணங்கள்

மேலதிக தொடர்புகளுக்கு
METRO TRAVELS & TOURS PVT LTD
(Branch Office) No-62/33, Stanley Link Road, Jaffna.
Tel:-0212224647,0212220404, 0215673666,0215673555
Office Hours: Weekdays from 9.00 am to 5.00Pm
Saturday from 9.00 am to 1.30Pm

(சீ-6569)(1,6,9)



# கண்ணிவெடி அகற்றுநருக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரிட்டனைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 10 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.


ஹெலோ ரஸ்ட் இன் எதிர்கால வேலைக்கான மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது கண்ணிவெடியகற்றல் துப்புரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்கும் கடினமான வேலையாகும். எமது தரமான நடவடிக்கைகள் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்வதுடன், முற்றாக நீக்கமுடியாது. எனவே கருத்தில் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்கள் மற்றும் அனுபவமுள்ளவர்கள் விவரங்களை சமர்ப்பிக்கவும்.

***ஹெலோரஸ்ட், 12, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.***

அனைத்து விண்ணப்பங்களும் 19 மார்கழி 2011 திங்கட்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(11137)(3,6,9)

சங்கானை இலுப்பைத்தாழ்வு
முருகமூர்த்தி தேவஸ்தான பிரதமகுரு
சிவாகமகிரியா ரத்தினம்
சிவாகமஞானி கலாநிதி சிவப்பிரம்மஶ்ரீ

# சிவானந்த நித்தியானந்த
## சிவாச்சாரியார்
### அவர்களின்

# ஓராண்டு நிறைவும்
# ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

எமது குடும்பத் தலைவரும் இலுப்பைத் தாழ்வு ஆதீன குருவுமாகிய சிவப்பிரம்மஶ்ரீ சிவா நித்தியானந்த சிவாச்சாரியார் அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி பூஜை வழிபாடுகளும் குலதெய்வம் முருகன் சந்நிதியில் நிகழும் கரவருஷம் கார்த்திகை மாதம் திங்கட்கிழமை (05.12.2011) மு.ப.10 மணியளவில் விசேட அபிஷேக பூஜையுடன் நடைபெறும். தொடர்ந்து ஆத்ம சாந்தி வேண்டி பஜனைக் கச்சேரியும், மோட்சதீபம் ஏற்றுதலும், மகேஸ்வர பூஜையும் இடம்பெறவுள்ளன. அத்தருணம் குருக்கள் ஐயாவின் அன்பு கலந்த நெஞ்சங்கள் யாவரும் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டி நிற்கின்றோம்.



சுபமஸ்து

சிவா.நித்தியானந்த சிவாச்சாரியார் குடும்பம்

சங்கானை

(சீ-6478)(1,6,9)

# மரண அறிவித்தல்கள்

## தளையசிங்கம் செல்லம்மா



தாவடியைப் பிறப்பிட மாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தளையசிங்கம் செல்லம்மா 2.12.2011 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைரவன் - கண்ணாத்தா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தளையசிங்கத்தின் அன்பு மனைவியும் யோகமங்களம், சிவலிங்கம், யோகராணி, யோகரத்தினம்,தெய்வேந்திரம்(பிரான்ஸ்), யோகம்மா, காலஞ்சென்ற யோகலட்சுமி மற்றும் பத்மஸ்ரீ (நோர்வே), சிறிதரன் குடும்பம்(நோர்வே), சிறிமதன் ஆகியோரின் அன்புத்தாயும் தேவி, தர்மலிங்கம், தர்மராசா, லதா, குணசிங்கம், மகேந்திரன், வனிதா, பொன்ராசா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

உடுவில் கிழக்கு,
அண்ணா சனசமூக நிலையம்,
இணுவில். (11163)(3,6,9)

தகவல்:
குடும்பத்தினர்.

## செல்லப்பா வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு



காரைநகர், சின்னாலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய செல்லப்பா வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு 30.11.2011 புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-நாகேஸ்வரி தம்பதியரின் (செல்லப்பா ஸ்ரோர்ஸ் - கிரான்பாஸ், காரைநகர்) அன்பு மகனும் காலஞ்சென்ற மிருதங்கம் வைத்திலிங்கம் மற்றும் சௌந்தராம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாம்பாளின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருக்கமலன் (லண்டன்) மற்றும் கவிதா (கனடா), செல்லப்பா (கனடா), முகுந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுவர்ணா (லண்டன்), மணிவண்ணன் (கனடா), சர்மிளா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற ஆனந்தராசா, நாகலட்சுமி, யோகலட்சுமி, மங்கையர்க்கரசி, திலகவதி, காலஞ்சென்ற இராலட்சுமி, கதிர்காமநாதன், காலஞ்சென்ற நவரட்ணராசா, தேவகி, சிற்சபேசன், சந்திரவதனா ஆகியோரின் அன்பு சகோதரனும் கைலா, கஜன், வர்சா, சினேகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ( 05.12.2011) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னாலடி,
காரைநகர். (11179)(1,6,9)

தகவல்:
வே. சிற்சபேசன் (சகோதரன்)

## திருமதி தியாகராஜா மகேஸ்வரி

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், இருபாலையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி தியாகராஜா மகேஸ்வரி நேற்று(03.12.2011) சனிக்கிழமை காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காரைநகர், கருங்காலியை பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான சிவகுரு-பார்வதி தம்பதியரின் இரண்டாவது மகளும், கந்தசாமி, பாக்கியம், காலஞ் சென்றவர்களான பரமேஸ்வரி, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவகுருநாதபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சைவம் தியாகராஜாவின் (Rtd.CTB driver) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நிலாய தாட்சாயினி அம்மாவின் அன்பு மைத்துனியும், சோமசேகரம், கெங்காதரன், சுபத்திராதேவி, குமுதவல்லி, சற்குணராஜா, சிவ ராஜா, சித்ரா, கமலா ஆகியோரின் அன்புத் தாயும், வைத்தீஸ் வரனின் அன்புச் சிறியதாயும், தயாநிதி, சந்திரா, கிருபானந்தன், துரைராஜா, சரோஜினிதேவி, நிர்மலா, விஜயலிங்கம், பராபரன், ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் டச்சு வீதி, இருபாலையில் அமைந்துள்ள அவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
அன்னாரின் அன்புப் பிள்ளைகள்.
(11164)(6/9/8)

## வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ் வார் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு மகாபாரதம் தொடர்சொற்பொழிவு இடம்பெறும்.

இந்தச் சொற்பொழிவை பண்டிதர், சைவப்புலவர் பொன். சுகந்தன் நிகழ்த்து வார். (ம-236)

## காணி விற்பனைக்கு

கொக்குவில், நந்தாவில் அம்மன் கோயில் வீதியில் 2 ½ பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: 0779907052 (பார்வையிடும் நேரம் 9 மணி முதல் 5 மணி வரை)

## விற்பனைக்கு

XA-xxxx இலக்க TVS XL Heavy Duty மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. 800 கி.மீ மட்டுமே ஓடியது.
தொடர்பு: 0776538060

## தேவை

பண்ணை ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 0771518354

## வீடு விற்பனைக்கு

யாழ். 120, ஆஸ்பத்திரி வீதியில் சிவன் பண்ணை வீதிச் சந்திக்கு அருகில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. வர்த்தகப் பாவனைக்கும் உகந்தது.
0722234434

## நாய்க் குட்டிகள் விற்பனைக்கு

Pure Breed Black German Shepherd குட்டிகளும் Harlequein (ஹலீகுயூன்) நிறமுடைய Great dane குட்டிகளும் Certificate களுடன் விற்பனைக்குண்டு. நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம். தொ.பே: 0212226944, Facebook id: Nallur Farm Centre

## கணிதம் (தரம் - 9, 10- &O/L)

2012 ஆம் ஆண்டுக்கான தமிழ், ஆங்கில மொழி மூலமான பிரத்தியேக, குழு வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
தொடர்பு - 0776139307
குறிப்பு- கல்வி நிலையங்கள் தொடர்பு கொள்ளலாம்.

## மலிவு விற்பனை

யாழ் நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் Sony 21", 25", 29" TV கள், அம்பிளிபயர், Box DVD, குளிர்சாதனப் பெட்டிகள், ரேடியோக்கள் என்பன பெருந் தொகையில் விற்பனைக் குண்டு.தொடர்பு: 0770440570, 0771393670
சொனி ரேட் சென்ரர், (கொமர்சல் வங்கி எதிரில்), இல. 56, KKS வீதி, சுன்னாகம். (10730)(6-7-8)

## கோழிப்பண்ணை விற்பனை

நவாலி வடக்கு, மானிப்பாய் நவீன 3 பண்ணைக் கட்டடம் உட்பட அலுவலகம், செக்குறுட்டிக் கட்டடம், 5 ½ பரப்புடன் சகல வசதிகளுடன் நல்ல விலையில் விற்பனைக் குண்டு. தொலைபேசி : 0778350478
0776704364

## வீடு வாடகைக்குத் தேவை

அரசாங்க தொழில் புரியும் 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. 1¼ -1½ பரப்பு காணி விலைக்கு தேவை. (தரகர் தேவையில்லை)
தொடர்பு: 0777272582, 0776589565

## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் U.K.P.R உள்ள விசாகம் -1978, 1980-திருவாதிரை, 1986-அத்தம், 1988-மகம், உள்ளூர் 1983-ஆயிலியம், 1985-ரேவதி (கொம்பியூட்டர் இஞ்சினியர்) மணமக்கள் தேவை. தொடர்பு: வாணி-0778501013, 0774494764

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அத்தியடி, அம்பலவாணர் வீதியில் அமைந்துள்ள 2 பரப்புக் காணி விற்பனைக் குண்டு.
தொடர்பு: 0779239334

## காணி விற்பனைக்கு

இல . 37, இராமநாதன் வீதியில் அமைந்துள்ள (மிலேனியத்திற்கு அண்மையில்) 11 பரப்பு 9 குழி காணி ஒரு கிணற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு.பகுதியாக பிரித்துக் கொடுக்கப்படும். (தரகர் தேவை இல்லை)
தொடர்பு: 0112591720, 0771331784


## மிகக்குறைந்த விமானக் கட்டணங்கள்

மாதாந்த கொடுப்பனவு முறை



For monthly Installment

HNB
Special Offer for Credit Card holders!

| | | |
|---|---|---|
| கொழும்பு | -சென்னை | 1,600/=Rtn |
| கொழும்பு | -திருச்சி | 1,450/=Rtn |
| கொழும்பு | -மாலைதீவு | 2,600/=Rtn |
| கொழும்பு | -சிங்கப்பூர் | 3,000/=Rtn |
| கொழும்பு | -மலேசியா | 3,350/=Rtn |
| கொழும்பு | -லண்டன் | 4,550/=Ow |
| கொழும்பு | -பிரான்ஸ் | 7,550/=Rtn |
| கொழும்பு | -ஜேர்மனி | 9,650/=Rtn |
| கொழும்பு | -கனடா | 14,600/=Rtn |



இந்தியா சுற்றுலா
விமானப் பற்றுச்சீட்டு, தங்குமிடவசதி, போக்குவரத்து வசதி உள்ளடக்கப்பட்டுள்ளது
4days 3nights
LKR 2500/=
Prices are subject to change without prior notice

airtel
ஏயாடெல் சிம் இலவசம்
இந்தியா செல்லும் பயணிகளுக்கு

அரச உத்தியோகத்தர்களுக்கு 10days 9nights LKR 2500/=
சிங்கப்பூர்,மலேசியா,இந்தியா,மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு சுற்றுலா

NATION POPULAR TRAVELS & TOURS VISA
Head office #16 ½, E.S. Fernando Mawatha, Colombo - 06
Mobile :+94 773 08 38 20 Tel : +94 114 65 1199 Fax : +94 114 50 55 32
Branch: #82 பிறவுன்வீதி யாழ்ப்பாணம் www.nationtravels.com
(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக)
Hotline: 0214 920 920 Tel : +94 214 920 505


## இலவச மருத்துவ முகாம் இன்று

சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கைப் பேரவை (SLCRP) இன் மனிதாபிமானச் செயற்பாடுகள் இலங்கையின் பல மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில் யாழ். மாவட்டப் பிரிவு இலவச மருத்துவ முகாம் ஒன்றை இன்று [04.12.2011] ஞாயிற்றுக்கிழமை அரியாலை, மணியந் தோட்டம் ஆகிய இடங்களில் நடத்தவுள்ளது.

மு.ப. 9 - 12 உதயநிலா பாலர் பாடசாலை, நாவலடி, அரியாலை.

பி.ப. 2 - 4 கிராம முன்னேற்றச்சங்க மண்டபம், மணியந்தோட்டம்.

(11174)(1,6,9)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு. செல்வராஜா சுகேந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

### சி. செல்வராஜா

அவர்களின் மரணச்செய்தி கேட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யாழ். இந்து மகளிர் கல்லூரி.
(11168)(6-8-9)

# மரண அறிவித்தல்

## மகாலிங்க ரெட்டியார் வையப்பரெட்டியார்

இந்தியாவைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்க ரெட்டியார் வையப்பரெட்டியார் (02.12.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கரெட்டியார் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் எல்லப்பரெட்டியார் - உன்னாமலை தம்பதியரின் மருமகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் லோகநாதன் (பிரான்ஸ்), மகாலட்சுமி (இந்தியா), வரதராஜன் (இந்தியா), ஜெயமுருகன் (பிலிப்பைன்ஸ்), சிவகுமார் (மு.உ.வவுனியா வடக்கு பிரதேச சபை - நெடுங்கேணி), சிவபாலன் (புள்ளி விவரத் திணைக்களம், மாவட்ட செயலகம், திருகோணமலை), கணேஸ்வரி, உமாசச்திரன் (பொது சுகாதார பரிசோதகர், பயிலுநர் - 2010, 2012) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வகுமாரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற எல்லப்ப ரெட்டியார் மற்றும் சண்முகலட்சுமி (இந்தியா), அன்புமதி (பிலிப்பைன்ஸ்), தர்சினி, கிருபா (வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம் - பரந்தன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பெருமாள் ரெட்டியார், வள்ளியம்மையின் சகோதரனும், கரிகரன், தனுசியா, பொன்கதிர்காமநாதன், வைத்தீஸ்வரன், உதயசங்கர், வள்ளியம்மை, கோகுலன், மதுசனா, திவ்வியன் (யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி), புரதானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

85/19, அன்பு வைத்தியர் லேன்,
ஆனந்தன் வடலி வீதி, அரியாலை. (11169)(2,6,8)

தகவல்:
வை. சிவகுமார்.
(மகன்)

## வீடு விற்பனைக்கு

மீசாலை, அல்லாரை வீதியில் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0779711972

## மணமகள் தேவை

உயர் கௌரவ குடும்பம் சமயம் R.C, 32 வயதுடைய கனடா பிரஜாவுரிமை உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: 0114873687

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து (புறோயிலர் 450/= மட்டும்) காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

## தேவை

டாக்டர் குடும்பத்திலுள்ள இரு சிறு பிள்ளைகளைப் பராமரிக்கக் கூடிய ஒரு பெண் தேவை. கடந்த கால நிகழ்வுகளினால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற நிலையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை. நேரில் வந்து சந்திக்கவும்.

Dr. தெய்வேந்திரன், 350, பலாலி வீதி,
திருநெல்வேலி.

## Spoken English & Grammar

(வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்)
By. Mr. B. Ruban(A/L Eng.Teacher & BBA)
More Details: 0779785749

## கார் விற்பனைக்கு

DOCTOR NISSAN SUNNY (FB -13)
கார் 19 - xxxx for 9.25/=
T.P.0772516160 (11096)(2-6-9)

## Bottle Cooler விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள நான்கு தட்டுகள் உடைய Haier ரக Bottle Cooler விற்பனைக்குண்டு. (350 லீற்றர் கொள்ளளவு)
தொடர்பு: 0214925102

## வீடு விற்பனைக்கு உண்டு

பிறவுண் வீதியில் நரியன்குன்றுக்கு அருகில் அம்மன் வீதியில் அமைந்துள்ள 2 ½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: இ. சிவானந்தம், 0779172953

## விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டு இருக்கும் ஐஸ் கட்டி உற்பத்தி செய்யும் இயந்திரம் (முழுமையாக) விற்பனைக்கு உண்டு. உத்தரவாதத்துடன் பொருத்தித் தரப்படும்.
தொடர்பு: இல.34, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
0777726874,0777209686

## அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்க அறிவுறுத்து

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களிடம் 2012 ஆம் ஆண்டுக்குரிய வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாத ஓய்வூதிய வவுச்சருடன் வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரமும் பிரதேச செயலகத்தால் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தப் படிவத்தை 2012 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் சமர்ப்பித்து உறுதிப்படுத்திய பின்னர் ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையில் சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வேறு பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
(ம-207)

## கண்பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளுக்கான வாழ்வக அனுமதி - 2012

வாழ்வகத்தில், தமது பார்வையற்ற, பார்வைக்குறைபாடுடைய பிள்ளைகளை இணைத்து அவர்களுக்கு நல்ல தொரு கல்விவாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்க விரும்பும் பெற்றோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எழுத்துக்களை வாசிப்பதில் பெருமளவு சிரமப்படுகின்ற பிள்ளைகளும் சேர்த்துக் கொள்ளப்படுவர். கல்வி பயிலும் காலத்தில் உணவு, தங்குமிடம், கல்விச் செலவுகள் யாவும் இலவசமாக வழங்கப்படும்.
பிள்ளை தொடர்பான சுய விவரங்கள்

தலைவர், வாழ்வகம்
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்,
என்ற முகவரிக்கு 31.12.2011 இற்கு முன்
கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்.

வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.

ஆ.ரவீந்திரன்,
தலைவர்.

(சி/6157) (2-6-9)

## X'Mas Grand Sale

Christmas is around the corner and enjoy your festive season. You can buy all your requirements under one roof. We have Christmas trees (5',6'&7') decorations, running bulbs, musical instruments etc. Please visit us at the following address.

### கிறிஸ்மஸ் மலிவு விற்பனை

நத்தார் பண்டிகை காலத்தை நீங்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடவும் உங்களுக்கு தேவையான சோடனை வகைகள், கிறிஸ்மஸ் மரம் (5',6'&7') தன்னியக்க பல்ப் செற்கள், இன்னிசைக் கருவிகள், இன்னும் பலவற்றையும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய முகவரி

ILE SUPPLY CHAIN CENTRE
259, MAIN STREET, JAFFNA.
(IN FRONT OF THIRUMARAI KALAMANRAM)
TEL: 0214590807/0214922395 (11102)(8,6,9)

## Capital TRUST Securities

Capital TRUST Securities, the number ONE Stock Brokering Company in Sri Lanka in terms of Transaction Turnover, Brokerage Turnover, Trades in 2010 and Financial Year 2010/2011, is in the search for ideal candidates for the following vacancy.

### Post of Investment Advisor (Jaffna Branch)

The ideal candidates should be energetic and goal oriented young professionals with a positive attitude, excellent interpersonal, time management and analytical skills.

You should be a fully qualified AAT/ HND or hold a Degree in Finance.

You will be responsible for relationship building - client / investor relations, market analysis and new business development.

You must have excellent communication skills in English and Tamil. You will use an online trading system and must be able to work under pressure to meet strict timelines.

If you are able to fill this bill, Please forward your resume indicating the position applied for by 10th December 2011

capitaltrust
Capital TRUST Securities (Pvt) Ltd.
A Capital TRUST Group Company

Group Manager - Human Resources
Capital TRUST Securities (Pvt) Ltd
42, Sir Mohammed Macan Marker Mawatha,
Colombo 03.
ghrm@capitaltrust.lk

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1980.09.08 திகதி, மகம் நட்சத்திரம், சிங்கராசி, பாவம் 26 ½, உயரம் 5'6'', வெள்ளை எவ்வித தீய பழக்கமில்லாத PR உள்ள பிரான்ஸ் மணமகனுக்கு பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், கனடா ஆகிய நாடுகளில் அழகிய மணமகளை எதிர் பார்க்கிறோம்.
தொடர்பு: 0212226055, 0778704872

## விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு, இராச வீதியில் 5 பரப்பிலமைந்த வீடும் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0773101371

## காணி விற்பனைக்கு

நெல்லியடி, யாழ்ப்பாண வீதியில் உள்ள திருமகள் சோதி வீதியில் 500 மீற்றர் தூரமளவில் 3½ பரப்பு 2 குளி காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0778022853

## வாடகைக்கு

யாழ்.நகரிலிருந்து 1 ½km தொலைவில் பலாலி வீதிக்கும் பருத்தித்துறை வீதிக்குமிடையில் 3000 ச.அடி களஞ்சியம் (Store) வாடகைக்குண்டு. பெரிய லொறிகள் தரித்து நிற்கமுடியும். 10 வாகனங்கள் நிறுத்திவைக்கவும் வசதியுண்டு.
தொடர்பு: 0770833339 (11116)(2,6,9)

## வீடு வாடகைக்கு


கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் இருந்து ஆனைக்கோட்டை செல்லும் வீதியில் 7 பரப்புக் காணியில் விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் / அலுவலகங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0217900205, 0776944105

## புதிய வீடு வாடகைக்கு

இல. 28, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை, கண்டி வீதியில் இருந்து ½m, கொழும்புத்துறை வீதியில் இருந்து 200m தூரத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி, கச்சேரிக்கு மிக அண்மையில் 4 அறைகள், hall, குசினி, Porch, கராஜ் அத்துடன் மேலதிக வாகனத் தரிப்பிட வசதிகள் கொண்ட விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. வங்கிகள், நிறுவனங்கள், அலுவலகங்கள் நடத்துவதற்கு உகந்தது. தொடர்பு: 0776566820, 0779426506

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

### இரங்கநாதன் பிரபாசங்கர் (குஞ்சு பபி)



திதி:- தசமி
மலர்வு:- 16.03.1967
மறைவு:- 30.11.2006

அன்புடன் எமை வளர்த்து
அறிவினை எமக்கூட்டி
காவல் தெய்வமாய் இருந்து
எமைக் காத்து வளர்த்த எம் அன்பு அப்பாவே
ஆண்டுகள் ஆறு என்ன?
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
மறவோம் உங்களை நாம் என்றும்.

உசன் தெற்கு,
மிருசுவில்.

- குடும்பத்தினர்.
(சி/6435)(2-6-25)

## காணிகள் விற்பனைக்கு

கைதடி வடக்கு ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்துக்கு வடக்குப் பக்கமாக நான்கு காணிகள் விற்பனைக்கு உண்டு.

1. எட்டுப் பரப்பு கிணறு, மதில், தண்ணீர்த் தாங்கி
2. எட்டுப் பரப்பு, மதில் கிணறு வீடு ஒரு பகுதி
3. இரண்டு பரப்பு, வீடு வளவு
4. ஐந்து பரப்பு, வீடு வளவு

தொடர்பு: 0750402302 (10938)(6/9/8)

## மரண அறிவித்தல்

### திருமதி அருள் ரஞ்சிதாதேவி



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்டதிருமதி அருள் றஞ்சிதாதேவி (30.11.2011) புதன் கிழமை காலமானார்.

அன்னார் அருளின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளைய தம்பி - நாகம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அரியரத்தினம் தம்பதியரின் மருமகளும் உதயகுமாரி, வசந்தகுமாரி, சாந்தகுமாரி, விஜயகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயும், கமலானந்தன்,சுதன், சிவநேசன், திலீபன் ஆகியோரின் மாமியும் சிவசரண்,சிவஷகாணன், தேனுகன், போகிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்கு வீதி,
கல்வியங்காடு.
(11114)(3,6,9)

தகவல்:
குடும்பத்தினர்.




மல்லாவி, யோகபுரம் பாரதிநகர் 3 ஆம் யுனிற்றைச் சேர்ந்த முன்னாள் பனங்காமம் பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கொள்வனவு உத்தியோகத்தரும் வலம்புரி பல்பொருள் வாணிப உரிமையாளருமான வசந்தராஜன் விஜிதா மண இணையரின் புத்திரர்களான

**வ.சாரங்கன், வ.பிரியங்கன், வ.கயூரங்கன்**

இவர்கள் யோகபுரம் மகாவித்தியாலய மாணவர்கள். இம் மும்மணிகளும் முறையே கடந்த 2008 ஆம் ஆண்டு, 2010 ஆம் ஆண்டு, 2011 ஆம் ஆண்டு நடந்து முடிந்த புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்கள். புள்ளிகள் முறையே 146 புள்ளிகளைப் பெற்ற வ.சாரங்கனையும், 171 புள்ளிகளைப் பெற்ற வ.பிரியங்கனையும், 157 புள்ளிகளைப் பெற்ற வ.கயூரங்கனையும் மேன்மேலும் பல கல்விச் சாதனைகள் படைக்க வேண்டுமெனவும் இம் மூன்று செல்வங்களுக்கும் கல்வி புகட்டிய யோகபுரம் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் குறிப்பாக இச் செல்வங்களின் அன்புத் தாயாருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் கூறிக் கொண்டு இம் மும் மணிகளின் கல்வி சிறக்க யோகாம்பிகை சமேத யோகபுரநாதனின் அருட்கடாட்சம் கிட்ட வேண்டுமென்று மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
அப்பம்மா, சித்தப்பாமார், அத்தைமார்,
மச்சான்மார், மாமா வரதன், அத்தை ஆனந்தி.

தகவல்:
**வரதன் - ஆனந்தி.**
அம்மை பல்பொருள்
வாணிபம், மல்லாவி.

(11091)(2-6-9)

## பணிநிலை வெற்றிடம்

Elephant House ஐஸ்கிறீம் வியாபாரம் செய்வதற்கு முச்சக்கர வண்டிச் சாரதிகள் மற்றும் கணக்காளர், நிர்வாக முகாமையாளர் (ஆண், பெண் இருபாலாரும்) தேவை. தகைமையுடையோர் உடன் சமுகமளிக்கவும்.

தொடர்பு: இல.56, மணிக்கூட்டு லேன்,
(நீராவியடி), யாழ்ப்பாணம்.
T.P. 0779910154

## தேவை

யாழ் நகரை அண்டிய பிரதான வீதிகளில் நிறுவனம் ஒன்றுக்கு வீடு தேவை. முற்பணம் எதுவும் வழங்கப்படமாட்டாது.
0773663986

## வான் விற்பனைக்கு

டொயாட்டா டொல்பின் 58XXXX தொடர் இலக்கம் கொண்ட 4 கதவுகள் (102) கட்டை மொடல் வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0775840154

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## 2012 ஆம் ஆண்டுக்கான மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றை 2012.01.01 தொடக்கம் 2012.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்கு வதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| தொ.இல | சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடை கள் விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வற்வரிதவிர) | மாத வாடகை (வற்வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| சுன்னாகம் உப அலுவலகம் | | | | | |
| 01. | சுன்னாகம் மத்திய சந்தை( துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் உட்பட) | 2000 | 30000 | 8100000 | - |
| 02. | கருவாட்டுக்கடை இல 3 | 750 | 7500 | 44550 | 250 |
| 03. | கருவாட்டுக் கடை இல 4 | 750 | 7500 | 44550 | 250 |
| உடுவில் உப அலுவலகம் | | | | | |
| 02 | மல்வம் சந்தை | 500 | 5000 | 49500 | - |

01. கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் : 2011.12.05 - 2011.12.08 பி.ப 2.00 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் 2011.12.09 நண்பகல் 12.00 மணிவரை
03. கேள்விப்பத்திரம் திறக்கப்படுதல் 2011.12.09 பி.ப 2.00 மணிக்கு
04. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை 2011.11.10 ஆம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரி பத்திரிகையிலும் எமது தலைமை அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2011.12.02

தி.பிரகாஷ்,
தவிசாளர்,
வலி.தெற்கு பிரதேச சபை சுன்னாகம்.

[சி/6486][3,6,9]

# JAFFNA ELECTRICAL நிறுவனத்தின்
## (Show Room)

LG No 1 Dealer in SriLanka

விசேட விலைக்கழிவும் (10% முதல் 30% வரை)
இலவச கொடுப்பனவுகளும்
01.12.2011 முதல் கையிருப்பு
உள்ளவரை மட்டுமே!




# LG JAFFNA ELECTRICAL
## (Show Room)

141, Power House Road, Jaffna.
T.P: 021 222 8378, 5766.

No.135, A-9 Road, Kilinochchi.
T.P: 021 228 0008

Authorized Dealer for **Abans**

## PRINTING MACHANE FOR SALE

Heidle berg KORS Black Colour Sort box and Heidle berg cylinder 21.25"x 28.25" ni good Working Condition Imported from GREECE

**Inspection at**

No - 1 ANANDA BALIKA MAWATHA
Pagoda Road, Pittakotte.
**Cont No: 0777767976, 0773155072**

(11139)(3,6,9)

## மலேசியா

தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு



மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 28,000

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் - முற்றும் இலவசம்

Labour Licence No. 2516
**GOODLINE MANPOWER SERVICES**
38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592

## கடை வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இல.644 கடை வாடகைக்குண்டு.
0772689442

## தேவை

பாவித்த நல்ல நிலையிலுள்ள சுருக்கு கேற் உயரம் 7 அடி அகலம் 10 அடி (7'X10') கொண்ட சுருக்கு கேற் தேவை.
தொடர்பு: 0212221052

## வீடு வாடகைக்கு உண்டு

10இற்கும் மேற்பட்ட வாகனத் தரிப்பிடத்துடனும் தண்ணீர், மின்சாரம் போன்ற வசதிகளுடன் விசாலமான வீடு யாழ் மாநகரசபை எல்லைக்குள் உள்ளது. கல்வி நிலையங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மட்டும் அழைக்கவும். 0750421969

## மணமகள்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1973 ஆம் ஆண்டு பிறந்து முகாமைத்துவம் கற்று வியாபாரம் செய்யும் மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை. நட்சத்திரம் பூரட்டாதி, கிரகபாவம் 18

★ ★ ★

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1975 ஆம் ஆண்டு முற்பகுதியில் பிறந்த லண்டன் PR உள்ள மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை. மணமகன் விரைவில் வரவுள்ளார். நட்சத்திரம் பூசம். கிரகபாவம் 9.

★ ★ ★

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1983 ஆம் ஆண்டு பிறந்த கனடாPR உள்ள மண மகனுக்கு அசைவ போசன மணமகள் தேவை. மணமகன் விரைவில் வர உள்ளார். நட்சத்திரம் திருவோணம், கிரகபாவம் 35.

தொடர்பு: 021 321 2961, 0783017290, 0779401092

## நம்ப முடியவில்லையா??? அதிசயம் ஆனால் உண்மை !!!



* நீங்கள் கருமை நிறம் உடையவரா? or சற்று நிறம் குறைந்தவர்களா?
* உங்கள் கன்னங்கள் குழிவிழுந்தவையா? or கரு வளையம், பருக்கள் நீண்ட கால தழும்புகள், கரும்புள்ளிகள், பாலுண்ணிகள் உடையவரா?
* உங்கள் உடல் பருமனாக அமைப்பில்லாமல் இருக்கின்றதா? or மெலிவான தோற்றமா? கவலையை விடுங்கள்!!!
* முடி உதிர்வு, பொடுகு, பேன், செம்படை போன்றவற்றால் அவஸ்தைப்படுகிறீர்களா? மற்றும் அழகிய முக அமைப்பை பெற விரும்புகிறீர்களா?

10 நாட்களில் தீர்வு நிச்சயம் முதற் பதிவு அவசியம் அழையுங்கள் - 0774011129

இவற்றிற்காக நீங்கள் பல இடங்களில் சிகிச்சை பெற்றும்
தீர்வு இல்லாமல் பணத்தையும் நேரத்தையும் வீண்செய்தீர்களா? கவலையை விடுங்கள்
"எம்மை நாடுங்கள்"
முற்றிலும் ஆயுள்வேத சிகிச்சைகள் பக்கவிளைவுகளற்றவை

We care Always
சானியா கேபல் கெயர்
262, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை
நல்லூர், யாழ்ப்பாணம்.


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 - 01 - 1928



மறைவு 19 - 11 - 2007

துன்னையூர் சங்கம உடையார் வழித்தோன்றல்
அமரர் **வைத்திலிங்கம் சரஸ்வதி** (பாப்பீ ரீச்சர்))
திதி:- பூர்வபக்க தசமி 04.12.2011


ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவலைகள் எம்மனதை விட்டகலாது அன்புத் தெய்வமே!
நான்காவது ஆண்டென்ன ஓராயிரம் ஆண்டு ஆண்டானாலும்
எங்கள் நெஞ்சில் என்றும் நீங்கள் வாழ்வீர்கள் அன்புத் தெய்வமே அம்மா.
*உங்கள் ஆத்மா ஆண்டவனின் பாதமடைய*
*இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.*

உங்கள் பிரிவால் துயறுரும்:
அருமை மகன் பிரதாபன் (லண்டன்),
இ.திலகேஸ்வரி (பெறாமகள்)

நாம்பலத்தனை,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(சி/6158) (2,6,9)

# நெஞ்சகலா நினைவு அஞ்சலி



*அமரர்*
*சிவசம்பு செல்வராசா*
(மாம்பழம் மாமா)

எம் கண் முன்னே நிழலாடுது
உங்கள் நினைவுகள்
நிழலை நிஜமாக்க நீங்கள்
மீண்டும் வருவீரோ மாம்பழம் மாமா
அணைந்த தீபமாய் ஆகிப்
போனீர்களே மாமா
நம் அனைவரையும் அழவைத்து
அகன்றதேனோ
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சோடிருக்கும்

தாங்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு
ஆழ்ந்த கவலையடைவதுடன் தங்களின்
பிரிவால் துயர் அடைந்துள்ள குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

பாசமுள்ள மருமக்கள்:
சுஜி, சூட்டி, விஜி, பெற்றி, நித்தி.

*இல.10, பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(11099)(1,6,9)

Baby Cheramy

# அன்பும் பரிசும்













## அன்புடன் பொழியும் பரிசுகள் உங்களுக்காகவே !

### எப்பொழுதுமே தூய அன்பை மட்டும் வாரி வழங்கும் பேபி ஷெரமியிடமிருந்து உங்கள் வாழ்வை மெருகூட்டும் பரிசு மழை

ஒவ்வொரு மாதமும் குலுக்கலில் கீழ்வரும் பரிசுகளைப் பெற்று கொள்ளுங்கள்

❶வது பரிசு - சுசுகி அல்டோ கார் ❷வது பரிசு - ஸ்கூட்டி பெப் 2

❸வது பரிசு - தங்க மாலைகள் 20 ❹வது பரிசு - கையடக்கத் தொலைபேசிகள் 20

**போட்டி விதிமுறைகள்**

❶ குலுக்கலில் வெல்லப்படும் பரிசுகளுக்கு பதிலாக எந்தவொரு பணப்பரிசும் கிடைக்கப்பெறமாட்டாது.

❷ பரிசினது வடிவம், நிறம் என்பன கையிருப்புக்கு ஏற்ப வேறுபடலாம்.

❸ பரிசுகள் வழங்கப்பட்ட பின், பரிசுகளின் உத்தரவாதத்தை ஹெமாஸ் நிறுவனம் பொறுப்பேற்காது

இப்போட்டியில் ஹேமாஸ் நிறுவனம், சர்வா இன்டிகிரேட், பீனிக்ஸ் O&M ஊழியர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களும் பங்கு பெற முடியாது. இவர்களை தவிர்த்து ஏனைய இலங்கை பிரஜைகள் பங்கு பெறலாம்.

**குலுக்கல் நடைபெறும் திகதிகள்**

முதலாவது குலுக்கல் 2011 டிசம்பர் 15

இரண்டாம் குலுக்கல் 2012 ஜனவரி 15

மூன்றாவது குலுக்கல் 2012 பெப்ரவரி 15

**போட்டியில் கலந்துகொள்ளும் முறை**

பேபி ஷெரமி சவர்க்கார உறைகள் 2 ம் கிறீம் லேபில் 1ம் உங்கள் பெயரையும், முகவரியையும் எழுதி கீழ்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

"பேபி ஷெரமி, அன்பும் பரிசும்"

த.பெ. இல. 2285, கொழும்பு




Baby Cheramy
தூய அன்பு

WP / GT/ 3408

# மரண அறிவித்தல்

## ஜோஜ் பிறின்ஸ் சுவேந்திரகுமார்



கற்கோவளம், பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோஜ் பிறின்ஸ் சுவேந்திரகுமார் (01.12.2011) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானமுத்து ஜோஜ் (இளைப்பாறிய கூட்டுறவுப் பிரதம பரிசோதகர்) மற்றும் மேரி றோசலின் ஜெயராணி ஆகியோரின் இளைய மகனும், பேதுருப்பிள்ளை பெனடிக்ற் (இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் மன்னார்)- பிரான்சிஸ்கா தம்பதியரின் அன்பு மருமகனும், வலன்ரினா (விஜி)யின் அன்புக் கணவரும், ஜெரோமி, ஜோடன், ஜெனலின் ஆகியோரின் அன்புத் தந்தையும், செபஸ் மகேந்திரகுமார் (கனடா), ஜெசி சாந்தகுமாரி, கிங்ஸ்லி ரவீந்திரகுமார் (கனடா), இராசகுமாரி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானானந்தம் (நோர்வே), அற்புதகுமார் (மதுவரி சார்ஜன்ட் மேஜர், மல்லாகம்), வசந்தி, கௌரி, ஜக்லின், ஜெராட் (கனடா), யூட் (நோர்வே) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் எதிர்வரும் (09.12.2011) வெள்ளிக் கிழமை கனடாவில் நடைபெறும்.

30, சுவாட்ஸ் லேன்,
சுண்டுக்குளி.

(11156)(2,6,8)

தகவல்:
பொ.அற்புதகுமார்.

# The Royal College of Jaffna

சுலபமாக ஆங்கிலத்தில் எழுத வாசிக்க கதைக்கப் பயில By. ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426, கே.கே. எஸ் வீதி யாழ்ப்பாணம், பிரதான வீதி, சண்டிலிப்பாய். TP. 0776751649

# சேவிஸ்ஸ் ரேசனுக்கு வேலையாள்கள் தேவை

சங்கீதன் சேவிஸ்ஸ்ரேசன்,
பருத்தித்துறை வீதி, புத்தூர்.

வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு அனுபவம் வாய்ந்தவர்கள் மற்றும் பழக விரும்புவர்கள் உடன் தேவை.

தொடர்புகளுக்கு :
உரிமையாளர், மா. ஜெயக்குமார் ,
0214900031

# வீடுகள் விற்பனைக்கு

தெகிவளையில் 20, 2nd Lane இல் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Apartment இல் 1300 Sqft 3 B/R, 750 Sqft 2B/R, 550sqft 1 B/R வீடுகள் விற்பனைக்குண்டு. உடனே உங்களுக்குரிய வீடொன்றை முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு : 0777368764

# Red Mo

## Net Cafe

# 73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

Internet Browsing மணித்தியாலயத்துக்கு 40/-

Skype Calls மணித்தியாலயத்துக்கு ரூபா 40/-

மேலும் எம்மிடம் கிடைக்கக்கூடிய பிற சேவைகளாவன



- ★ Printing (Color/ Black)
- ★ Type Setting
- ★ Binding
- ★ Scanning
- ★ Photo copy

(சி-6496)(1,6,9)

# இலங்கை சின்மயா மிஷன் யாழ்ப்பாண நிலையம்

கொழும்பில் உதவித்தாதிமார் பயிற்சியும் வேலைவாய்ப்பும்

## (Nursing Assistant)

18 - 30 வயதிற்கிடைப்பட்ட கா.பொ.த சாதரண தர பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு (ஆங்கிலம் உட்பட) உதவித்தாதிமார் பயிற்சி ஆரம்பமாக உள்ளது. பிரபல வைத்தியர்கள், தாதிமார்களின் வழிகாட்டலின் கீழ் விரிவுரைகள், செய்முறைப்பயிற்சிகள் நடைபெற உள்ளன.

ஆறுமாதகாலத்திற்கு இப்பயிற்சியினைப் பெற விரும்பும் பயிலுனர்கள் தமது சுயவிபரக் கோவை அடங்கிய விண்ணப்பங்களுடன் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு 09.12.2011 இற்கு முன்னர் காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணிக்கிடையில் நேரில் வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- பயிற்சி முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- தங்குமிடம், உணவு இலவசம்.

மேலதிக விபரங்களுக்கு :- 0777730708,0779355085
22, செம்பாட்டு ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,
மின்னஞ்சல் : info@cordsrilanka.org

# கனடா, இத்தாலி, நாடுகளிற்கான Work Permits

- Schengen நாடுகளிற்கான Business, Tourist Visas and Resident Permits.
- UK Student Visa

அனைத்து நாடுகளிற்குமான, அனைத்து வகையான விசாக்களுக்குமான பண வைப்புக்கள் சிறந்த வங்கிகளுனூடாக செய்து கொடுக்கப்படும்.


மேலதிக விபரங்களிற்கு :

## Euro Profile

16B, E.S. Fernando Mawatha, Colombo - 06
நாதன் - 0779874333 நிஷ்மினா - 0778885903

# Nallai

## Essence & Multi Trades



எசன்ஸ் கலர் பவுடர் வகைகள்
கேக் தயாரிப்புப் பொருள்கள்
கேக் ஐசிங், ஐசிங் சோடனைப் பொருள்கள் அனைத்தும்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்.

நல்லை எசன்ஸ் அன்ட் மல்ரி ரேட்ஸ்
இல.398 A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.பஸ் நிலையம் முன்பாக

# ஆத்மசாந்தி வேண்டி பிரார்த்திக்கின்றோம்



சங்கானை இலுப்பைத்தாழ்வு ஸ்ரீ முருகமூர்த்தி
ஆதீன குருமுதல்வர் சிவப்பிரம்மஸ்ரீ

## சிவானந்த நித்தியானந்த சிவாச்சாரியார்

எமது பிரதேச மக்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காக சமயப் பணிபுரிந்த ஈழத்தின் சிவாச்சாரிய குல மரபிலே தனக்கென தனியிடம் பெற்றுக்கொண்ட பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய எங்கள் நித்தி ஐயாவின் ஆத்மா சாந்திபெற


இலுப்பைத்தாழ்வு முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேவாலய வீதி, சங்கானை.

(சி-6601)(1,6,9)

நா.சந்திரமோகன்
குடும்பத்தினர்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



முள்ளிவாய்க்கால் மேற்கைச் சேர்ந்த
**சின்னத்துரை - கிருஷ்ணானந்தம் சசிக்குமாரி**
தம்பதியினரின்
செல்வப் புதல்வி கி.கிருஷாளினி

மு/புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாலயம் 2011 தரம் 4 இல் நடைபெற்ற மாகாண மட்ட "திருக்குறள்" மனனப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றமையினையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அவரைப் பாராட்டுவதுடன் அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய வித்தியாலய அதிபர், ஆசிரியர்களுக்கும் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"அகத்தியர்" வீதி,
மகாறம்பைக்குளம், வவுனியா.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.
T.P:0770889564

[சி/6489][2-6-9]

# வீடு வாடகைக்கு விடப்படும்

இல. 104, 1ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
நிறுவனங்கள்விரும்பத்தக்கது. (மூன்று பெரிய அறைகள் கொண்ட பெரியவீடு)
TP. 0779008361

# WANTED

Sales Rep below 30 unmaried Residence of Jaffna to Work Jaffna district. Apex Pharmaceuticals, Mt.Lavinia, E.mail- apexpharma @sltnet.lk, 0777906430/0773544840

# கார் விற்பனைக்கு

11 sri xxxx தொடர் இலக்கமுடைய Hillman கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0774576881

# வாடகைக்கு

யாழ்ப்பாணம் (Jaffna) கச்சேரிக்கு அருகில் 5 Rooms , 2 Toilet, Hall, Kitchen கீழ் வீடு உள்ளது. Parking Place available Bank Staff தங்குமிடம் Office பாவனைக்கும் உகந்தது.
0757131027

# 26 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1924.12.14

மறைவு
1985.12.04



## அமரர் E.K. சண்முகநாதன்

அன்பின் திருவுருவாய்
பாசத்தின் முகவரியாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
எங்களை வழிநடத்தி
வாழ வைத்த தெய்வமே
கண்ணீர்ப் பூக்களால்
உம் பாதங்களை அர்ச்சித்து
இறைஞ்சி நிற்கின்றோம்

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
(லண்டன்)


137, பலாலிவீதி,
திருநெல்வேலி.

(11136)(3,6,9)

## காணி விற்பனைக்கு

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியில் யூனியன் பேக்கரிக்குச் சமீபமாக - யாழ்ப்பாணப் பக்கமாக - ஏ9 வீதியில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0718008251

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை இராஜரட்ணம்

யாழ்ப்பாணம், தொல்புரத்தை சேர்ந்தவரும் கொழும்பு, பம்பலப்பிட்டி இல.5 ஜெயா வீதியை வதிவிடமாகவும் கொண்ட வே. இராஜரட்ணம் 02.12.2011 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான (தொல்புரம்) வேலுப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான டாக்டர் மூர்த்தி (மலேசியா) தம்பதியரின் மருமகனும், ராஜலக்ஷ்மி (ராசா) யின் அன்புக் கணவரும், நிரஞ்சன் (மலேசியா), சித்திரஞ்சன் (லண்டன்), மித்திரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ் (மலேசியா), பாமினி (லண்டன்), அனுஷ்யா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான நடராஜா, தர்மபாலன், திருமதி நாகரட்ணம் (மலேசியா), நவரட்ணம் (கனடா), வில்வம் காசிப்பிள்ளை (லண்டன்), நாகரட்ணம் நடராஜா (சுன்னாகம்), Dr.பொன்னம்பலம் (கொழும்பு) மற்றும் செல்வரட்ணம் ராஜரட்ணம் (தொல்புரம்), நேசரட்ணம் செல்லத்துரை (மலேசியா), மகாலஷ்மி ராமசாமி (லண்டன்), தனலக்ஷ்மி பாலசுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி (லண்டன்) மற்றும் கிருஷ்ணமூர்த்தி (அமெரிக்கா), Dr. சிவமூர்த்தி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், மனிஷா, சரண்யா, சனோஜன், பிரணவன், திலக்ஷன், சஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (07.12.2011) புதன்கிழமை பி.ப. 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு பி.ப. 3 மணி அளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.5, ஜெயா வீதி,
கொழும்பு (சி-6361)(1,6)

தகவல்:
திருமதி ஆர்.இராஜரட்ணம்
(மனைவி)

## கடை வாடகைக்கு உண்டு

சிறிய தொழில் செய்வதற்கு சகல வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு: 0776081693

## காணி விற்பனைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில் கே.கே.எஸ். வீதி நீலாம்பரி உணவகத்துக்கு முன் ஒழுங்கையில் 1¾ நிலப் பரப்பளவுள்ள காணி தண்ணீர்த் தாங்கியும், மலகூடமும் வீட்டுக்கான அத்திபாரத்துடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0774927359, 021 2225649
மு.ப. 6.00 - 8.00 பி.ப. 2.00 - 8.00

## VACANCY

STP Computer World Pvt.Ltd a Authorized dealer for Toshiba and DeLL is in the lookout for customer oriented, loyal and hard working candidates to fill the following vacancy.

1. Hardware Technician- 1 years Experience
2. Receptionist

Interested candidates who possess the required skills and aspire to be a part of our growing team, are invited to send in their resumes to the address provided below on or before 11th of Dec, 2011.

Director,
STP Computer World Pvt, Ltd.
P.O. BOX 158
Jaffna

## பெயர் மாற்றம்

இதுவரை காலமும்
தேவசகாயம் தவம் என்ற
பெயரில் அழைக்கப்பட்ட எனது
பெயரை 02.12.2011 இல் இருந்து
**தேவசகாயம் செபமாலை**
என பெயர் மாற்றம் செய்துள்ளேன்
என்பதை அனைவருக்கும் இத்தால்
அறியத் தருகின்றேன்.
தேவசகாயம் செபமாலை

## சேவை

ஒரு நாளில் அல்லது ஒரு கிழமையில், இருபாலாருக்கும் Driving Licence சம்பந்தப்பட்ட சகல வேலைகளும் செய்து தரப்படும். (உங்களிடம் பழைய Licence இருப்பின் புதிய சிம்காட் Licence ஒரே நாளில் செய்து தரப்படும்.) 0775821521, 0775472468 (கொழும்பு)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கலைவாணி வீதியில் 6 பரப்பு 5 குளி காணி உடன் விற்பனைக்குண்டு. விலை பரப்பு 10 லட்சம்
தொடர்பு: 0773658485



## வாழும் கலைப் பயிற்சி பாகம் I

அறிமுகவுரை: 05.12.2011 திங்கட்கிழமை
மாலை 5 மணிக்கு
இடம்: மகேஸ்வரன் மணி மண்டபம்
நல்லூர்.

திகதி:- 06.12.2011-11.12.2011
நேரம்:- பி.ப. 2.00-4.30, பி.ப. 5.00-7.30
முன்பதிவுக்கு 0770474757 (11149) (8-6-9)

## Canada VISA

Study in Canada / Australia / New Zealand / USA / UK




Canadian Society of immigration consultants
CSIC Membership Lower. #M105850

- IELTS Require for PR
- Minimum 5 Years work or business experience


- Special Occasions
- Family & Friends Visit
- Medical Visit / Work VISA
- Tourist / Business Visits
- Study Visa
- Permanant Resident Visa (PR)

**Royal International VISA Consulting (RIC)**

257/1/1, Galle Road,
Colombo 06,
Sri Lanka.

Mobile: +94 77 248 4403
Tel: +94 11 455 2378 , +94 11 236 3880
E-mail: canadianvisa2010@yahoo.com
skype : dilanravi
Web: www.ricvisa.com

FLEX Graphic




# ESWARRAN EXPRESS

Genuine Passenger Services

## இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முதல் தர அதிசொகுசு போக்குவரத்து சேவை

புறப்படும் நேரம்

1. பி.ப.7.வெள்ளவத்தை (தனியார் பேரூந்து தரிப்பிடம்)
2. பி.ப.7.30 புறக்கோட்டை
3. 8.00 கொட்டாஞ்சேனை



குறிப்பு:
எமது சேவை வெகுவிரைவில்
கொழும்பு- காரைநகர்,
கொழும்பு - காங்கேசன்துறை,
கொழும்பு - பருத்தித்துறை ஆகிய
இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.
குறிப்பிட்ட பகுதிகளில் ஆசனப் பதிவை
மேற்கொள்ள முகவர்கள் தேவை.
விரும்பியவர்கள் ஈஸ்வரன் - தலைமை
காரியாலயத்துடன்
தொடர்புகொள்ளவும்.

தெரிவுசெய்யப்படும் முகவர்களுக்கு இலங்கைப் போக்குவரத்து ஆணைக்குழு ஆசனப் பதிவு அனுமதிப் பத்திரம் பெற்றுத் தரப்படும்.

**எமது சேவைக்கு போக்குவரத்து ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஆசனப்பதிவு முகவர்கள்**

1. **சென்.றோசா நெற் கபே**
   457, காலி வீதி, கொழும்பு - 06.
   011232277
2. **றொலக்ஸ் ஹொட்டல்**
   366, காலி வீதி, கொழும்பு 06.
   0112360462

**ஈஸ்வரன் ரேடிங் கம்பனி**
இல.201/B டாம் வீதி, கொழும்பு 12.
2433889, 0115232331

Hotline:
0773865439 (யாழ்),
0777674119,
0776136911

**ஈஸ்வரன் ரேடர்ஸ்**

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:
021 222 2813

இல.01, கண்டி வீதி,
(சேலான் வங்கிக்கு அருகில்)
கரடிப்போக்கு, கிளிநொச்சி)
தொ.பே: 021 228 5306/7

உதயன்
4 டிசெம்பர் 2011 ஞாயிற்றுக்கிழமை

# வதிரி டயமன்ஸ் வி.கவுக்கு எதிராக கோல் மழை பொழிந்தது பாடும் மீன்

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையான சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது லீக் சுற்றின் ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் உத்வேகத்துடன் மோதிக் கொண்டனர். இதனால் ஆட்டம் சூடு பிடித்தது.

எனினும் முதலாம் பாதி ஆட்டத்தின் போது இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பெறவில்லை.

இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் ஆட்டத்தை வேகப்படுத்திக் கொண்டனர்.

அதன்போது பாடும் மீன் அணியானது அபாரமான ஆட்டத்தின் மூலம் கோல்களைப் பொழிந்தது. அடுத்தடுத்து 5 கோல்களைப் பாடும் மீன் போட்டது.

வதிரி டயமன் அணியினர் தமது அணிக்காகக் கோல்களைப் பெற எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை.

ஆட்டம் முடிவில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

# ரக்பி பயிற்சி முகாம் துரையப்பா அரங்கில்



யாழ்ப்பாணம், டிசெ.4

ரக்பி பயிற்றுனர், மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி முகாம் நேற்று சனிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் பயிற்றுநர் களால் ரக்பி பயிற்சிகள் வழங் கப்பட்டன. ரக்பி விதிகள் தொடர்பான விளக்கம் யாழ். நகரில் அமைந்துள்ள சிவில் காரியலயத்தில் இடம்பெற் றது.

ரக்பி பயிற்சிகள் மற்றும் விதிகள் தொடர்பான விளக்கங்களை இலங்கை ரக்பி உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் உபதலைவர் அனில் ஜெயசிங்க, சர்வதேச ரக்பி சபையின் கல்வியிலாளர் நிகால் குணரெட்ண, கண்டி ரக்பி அணியின் தலைவர் மொறிஸ் யோக்கிம் ஆகியோர் வழங்கினர். (த-23)

# லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதே இலக்கு

''பீஜிங்கில் வென்ற பதக்கத்தை மறந்து விட்டேன். தற்போது, எனது கவனம் முழுவதும் லண்டன் ஒலிம்பிக் மீது உள்ளது,'' என, இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர் அபினவ் பிந்த்ரா கூறியுள்ளார்.

கடந்த 2008 இல் பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக்கில், துப்பாக்கி சுடுதலில் அபினவ் பிந்த்ரா தங்கம் வென்றார். சமீபத்தில் புனேவில் நடந்த தேசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் 10 மீ., ''ரைபிள்' பிரிவில் பட்டம் வென்றார். இவரது அடுத்த இலக்கு, வரும் 2012 இல் நடக்க உள்ள லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வது தான்.

இது குறித்து பிந்த்ரா கூறியது:

கடந்த முறை வென்ற பதக்கத்தை பற்றி தற்போது, நினைக்கவில்லை. அது முடிந்து போன விஷயம். பீஜிங்கில் வென்றது போல, லண்டன் ஒலிம்பிக்கிலும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் தான் உள்ளது. இது எனது நீண்ட நாள் கனவு. பதட்டமான சூழ்நிலையில், அமைதியாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் சிறப்பான ஆட்டத்தை கொடுக்க முடியும்.



இல்லை யென்றால், ஏமாற்றம் தான் மிஞ்சும்.

கடந்த ஒலிம்பிக்கில் பங்கேற்ற போது, ஏதென்ஸ் போட்டியில் அடைந்த தோல்வி, என் மனதில் தோன்றியது. அதனை பற்றி நினைக்காமல், போட்டியில் மட்டும் கவனம் செலுத்தியதால், வரலாறு படைக்க முடிந்தது. விளையாட்டு வீரர்கள் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல், போட்டியில் மட்டும் கவனம் செலுத்தினால் உறுதியாக சாதிக்க முடியும்.

இந்தியாவில் திறமைமிக்க விளையாட்டு வீரர்கள் நிறைய பேர் உள்ளனர். ஆனால் அவர்கள் பயிற்சி மேற்கொள்வ தற்கு போதுமான வசதி இல் லாமல் இருக்கின்றனர். இது வருத்தமாக உள்ளது.

இவ்வாறு அபினவ் பிந்த்ரா கூறினார்.



யாழ்.மாவட்டச் செயலக நலன்புரி கழகம் நடத்திய அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ்.மவட்டச் செயலக அணித் தலைவர் பிரதீப் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மவட்ட செயலக பிரதம கணக்காளர் சண்முகரட்ணத்திடம் இருந்து கிண்ணத்தைப் பெறுகிறார். (த-23)

# லயனல் மேஸியைவிட நைய்வர் சிறந்த உதைபந்தாட்ட வீரரா?

## பீலேயின் கருத்துக்கு மரடோனா எதிர்ப்பு



பீலே



லயனல் மேசி



நைய்மர்

***உறங்குவதற்கு முன்பு குடிக்கவேண்டிய மருந்துகளை காலையில் சாப்பட்டுவிட்டு கண்டபடி உளறுகிறார் பீலே.***

ஆர்ஜென்ரீனாவின் லயனல் மேசியைவிட பிரேஸிலின் நைய்மர் சிறந்த வீரர் என்று சமீபத்தில் ஒரு பேட்டியில் பீலே கூறியதற்கு மரடோனா பதிலடி கொடுத்துள்ளார்.

''பீலே நல்ல மனோதத்துவ நிபுணரிடம் சிகிச்சை பெறுவது நல்லது என்றும் சாடியுள்ளார்.

உதைபந்தாட்ட உலகின் இந்த இரு ஜாம்பவான்களும் அடிக்கடி கருத்து மோதலில் ஈடுபடுவது வழமை.

அவ்வப்போது ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கிப் பேசிக்கொள்வர்.

சமீபத்தில் பிரேஸில் ஜாம்பவான் பீலே ஒரு பேட்டியளித்தார்.

அதில், 23 வயதான ஆர்ஜென்ரீனாவின் லயனல் மேசியைவிட 19 வயதான பிரேஸிலின் நைய்மர் சிறந்த வீரர் என்று கருத்துத் தெரிவித்திருந்தார்.

அத்துடன், இதற்கு முன்னர் கூட, தலையால் முட்டி கோல் அடிக்கும் உதைபந்தாட்ட வீரர்களே சிறந்தவர்கள். மேசி தலையைப் பயன்படுத்தி கோல் அடிப்பதில் வல்லவர் இல்லை. எனவே, அவர் உதைபந்தாட்டத்தில் இன்னமும் முழுமையடையவில்லை என்றும் கூறியிருந்தார்.





மரடோனா

இந்நிலையில் மேசியைவிட நைய்மர் சிறந்த வீரர் என்று கூறியிருப்பது மரடோனாவுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் பதிலளித்த மரடோனா,

''பீலே ஒரு நல்ல மனோதத்துவ வைத்தியரைப் பார்த்து சிகிச்சை பெறுது நல்லது. ஏனென்றால், அவருக்கு தாம் என்ன பேசுகிறார் என்பதையே தெரியவில்லை.

''உறங்குவதற்கு முன்பு குடிக்கவேண்டிய மருந்துகளை காலையில் சாப்பட்டுவிட்டு கண்டபடி உளறு கி றார்'' என்று போட்டுத் தாக்கி யுள்ளார் மரடோனா.

2010ஆம் ஆண்டு கோபா லிபிரேட்டர்ஸ் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்ட நடுவரைத் திருடன் என்று விமர்சித்தமைக்காக அண்மையில் நைய்மருக்கு 6 ஆயிரம் யூரோ அபராதம் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சதுரங்கத்தில் குப்தா வெற்றி




விசாக் ஓபன் சதுரங்க தொடரின் எட்டாவது சுற்றில், இந்தியாவின் குப்தா அபிஜித் வெற்றி பெற்றார்.

சர்வதேச விசாக் ஓபன் சதுரங்க தொடர், ஆந்திராவின் விசாகப் பட்டினத்தில் நடக்கிறது. இதன் எட்டாவது சுற்றில் இந்தியாவின் குப்தா, உக்ரைனின் சுமட்ஸ் ஆன்ட்ரேவை வீழ்த்தினார். மற்றொரு போட்டியில், இந்தியாவின் ராஜ்பாரா, பிலிப்பைன்சின் ரொனால்டோவை சந்தித்தார். இதில் ரொனால்டோ வெற்றி பெற்றார்.

# இறுதியாட்டம்

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத் திய 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதி யாட்டம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளது. இதில் குருநகர் பாடும் மீன் வி.க.எதிர் யாங்கென்றிஸ் வி.க. மோதவுள்ளது. (23)



நேற்று நடைபெற்ற பங்களாதேஷ் - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்திய உமர் குல்லைப் பாராட்டும் பாகிஸ்தான் வீரர்கள்.

# தொடரை வென்றெடுத்தது பாகிஸ்தான்

**பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 76 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி வெற்றியை பெற்றுக் கொண்டுள்ளது. இதனால் பங்களாதேஷின் நஸார் ஹூஸைனின் கன்னிச் சதமும் வீணானது.**



நேற்றைய ஆட்டத்தில் தனது கன்னிச் சதத்தை பூர்த்தி செய்த பங்களாதேஷ் வீரர் நஸார் ஹூஸைன். இவர் 131 பந்துகளில் தனது முதலாவது சதத்தை பெற்றுக் கொண்டார். நேற்றைய ஆட்டத்தின் நாயகனும் இவரே.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் செய்து பாகிஸ்தான் அணி விளையாடி வருகின்றது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரில் முதலாவது ஆட்டத்தில் வெற்றி பெற்ற நிலையில் பாகிஸ்தான் அணி களமிறங்கியது. சொந்த மண்ணில் தொடரை தக்க வைக்க, நேற்றைய ஆட்டத்தில் வெற்றி பெறவேண்டிய நிலையில் பங்களாதேஷ் அணி களமிறங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மொஹமட் ஹபீஸ், இம்ரான் பர்கத் களமிறங்கினர். பர்கத் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். அதன் பின்னர் சிறப்பாக ஆடிய ஹபீஸ், யுனிஸ்கான் ஜோடி பாகிஸ்தான் அணிக்கு வலுவான அடித்தளத்தை அமைத்தது. ஹபீஸ் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற அணித்தலைவர் மிஷ்பா களம்புகுந்தார். மிஷ்பா - யுனிஸ் ஜோடி சிறிது நேரம் நிலைத்து ஆடியது. யுனிஸ்கான் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

மிஷ்பா உல் ஹக் - உமர் அக்மல் ஜோடி சிறப்பாக ஆட பாகிஸ்தான் அணி 100 ஓட்டங்களைக் கடந்தது. உமர் அக்கமல் அதிரடியாய் ஆடி ஓட்டங்களைக் குவித்தார். சிறப்பாக ஆடிய அக்மல் 49 பந்துகளில் தனது 12 ஆவது அரைச் சதத்தை கடந்தார். நான்காவது இலக்குக்காக 83 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் 54 பந்துகளில் 55 ஓட்டங்களுடன் உமர் அக்மல் ஆட்டமிழந்தார். தொடர்ந்து மிஷ்பா 37, மலிக் 12 என்று வரிசையாய் வெளியேறினர். ஆட்டத்தின் இறுதிக் கட்டத்தில் களம்புகுந்த அப்ரிடி பங்களாதேஷின் பந்து வீச்சை திணறடித்தார். அப்ரிடியின் அதிரடியில் ஆட்டத்தின் போக்கே மாற்றம் கண்டது. பங்களாதேஷ் பந்து வீச்சாளர்களை துவம்சம் செய்து அணியை 250 ஓட்டங்களை தாண்ட வைத்தார். இறுதியில் 27 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 42 ஓட்டங்களுடன் அப்ரிடி ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகள் நஷ்டத்துக்கு 262 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் சகிபுல் இஸ்லாம், ரூபல் ஹூஸைன் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு விரட்டத் தொடங்கிய பங்களாதேஷ் அணி ஆரம்பத்திலிருந்தே சறுக்கியது. ரமிம் இக்பால் 4, இம்ரு கைஸ் 6, ஷாரியா நவீஸ் 7, அணித்தலைவர் முஷ்பிகுர் ரகீம் 1 ஓட்டங்களுடன் வெளியேற பங்களாதேஷ் அணி 19 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து வழமை போன்று தடுமாறியது.

இலகுவாக பங்களாதேஷின் ஆட்டத்தை முடிக்க கணக்குப் போட்ட பாகிஸ்தானுக்கு சகிப் அல் ஹசன் - நஸார் ஹூஸைன் ஜோடி நல்ல பாடம் புகட்டியது. பாகிஸ்தானுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கி ஓட்டங்களைக் குவித்தார் நஸார் ஹூஸைன். இவர்களது இணைப்பில் பங்களாதேஷ் மெதுவாய் 100 ஓட்டங்களைத் தாண்டியது. 5 ஆவது இலக்குக்காக 106 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் சகிப் அல் ஹசன் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் சிறப்பாக ஆடிய நஸார் ஹூஸைன் 131 பந்துகளில் தனது கன்னிச் சதத்தை பூர்த்தி செய்தார். இருப்பினும் சதம் கடந்த சிறிது நேரத்திலேயே ஆட்டமிழந்தார். அப்துர் ரஷாக் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். மகமதுல்லா 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது பெற்றுக் கொடுத்தார். 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் பங்களாதேஷ் அணி 7 இலக்குகளை இழந்து 187 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 76 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது. பந்து வீச்சில் பாகிஸ்தாக் சார்பில் உமர் குல் 4 இலக்குகளை சரித்தார். ஆட்ட நாயகனாக பங்களாதேஷின் கன்னிச் சதம் அடித்த நஸார் ஹூஸைன் தெரிவானார்.

(15)

# பதானுக்கு மீண்டும் வாய்ப்பு

ஆஸ்திரேலிய சுற்றுப் பயணத்துக்கான இந்தியக் கிரிக்கெட் அணியில் இடம் பெற்றிருந்த பிரவீன்குமார் விலா எலும்பு முறிவு காரணமாக விலகியுள்ளமையால், அவரது இடத்துக்கு இர்பான் பதான் இடம்பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் 3 ஒரு நாள் ஆட்டத்துக்கான அணியில் பிரவீன்குமாருக்குப் பதிலாக அபிமன்யூ மிதுன் சேர்க்கப்பட்டார். ஆஸ்திரேலியத் தொடரில் பிரவீன்குமாருக்குப் பதிலாக மாற்று வீரர் நாளை மறுதினம் தெரிவுசெய்யப்படவுள்ளார்.

இந்தியாவின் உள்ளூர் கிரிக்கெட் தொடரான ரஞ்சிக் கிண்ணப் போட்டியில் இர்பான் பதான் சிறப்பாகப் பந்து வீசி வருவதால் அவருக்கு வாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. 27 வயதான இர்பான் பதான், கடைசியாக 2008 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடினார். அதே போல, ஒருநாள் போட்டியில் 2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைக்கு எதிராக விளையாடினார்.

(15)

# தோல்வியைத் தடுப்பதற்காக போராடுகிறது நியூஸிலாந்து

**ஆஸ்திரேலிய அணி மைக்கல் கிளார்கின் சதத்தின் உதவியுடன் முதலாவது இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 427 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதன் மூலம் நியூஸிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸிற்காக பெற்றுக் கொண்ட ஓட்ட எண்ணிக்கையை விட 132 ஓட்டங்கள் அதிகமாகப் பெற்றது. பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸைத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த நியூஸிலாந்து அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் ஒரு இலக்கு நஷ்டத்துக்கு 10 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.**



நடைபெற்று வரும் நியூஸிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர் மைக்கல் கிளார்க் 166 பந்துகளில் தனது சதத்தைப் பூர்த்தி செய்தார். இது இவரது 17 ஆவது சதமாகும்.

ஆஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் 2 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் வியாழக்கிழமை பிரிஸ்பேன் மைதானத்தில் ஆரம்பமாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி பிராத் வைட் - வெற்றோரியின் இணைப்பில் சகல இலக்குகளையும் இழந்து 295 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. வெற்றோரி 96 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். பிராத் வைட் 77 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது பெற்றுக் கொடுத்தார். ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில் லியோன் 4, ஸ்ரார்க், சிடில் தலா 2 இலக்குகளையும் பர்ரின்சன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினார்.

பின்னர் தனது இன்னிங்ஸை ஆட ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் 3 இலக்குகள் இழப்புக்கு 154 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. முன்னாள் அணித்தலைவர் பொன்டிங் 67 ஓட்டங்களு டனும், அணித்தலைவர் கிளார்க் 28 ஓட்டங் களுடனும் களத்தில் இருந்தனர்.

ஆஸ்திரேலிய அணி வலுவான நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தை தொடர்ந்தது. பொன்டிங் மேலதிகமாக 11 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த ஹஸி 15 ஓட்டங்களுடன் வெளியேற ஆஸி. அணி 237 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது. அதன் பின்னர் அணித்தலைவர் கிளார்க்- ஹடின் ஜோடி சிறப்பாக ஆடியது. மிகவும் நிதான மாக ஆடிய அணித்தலைவர் கிளார்க் 166 பந்துகளில் தனது 17 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். ஆறாவது இலக்கு இணைப்பாட்டமாக 108 ஓட்டங்கள் பெறப்பட்ட நிலையில் கிளார்க் 139 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் ஆடிய ஹடின் 109 பந்துகளில் 10 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். அரைச்சதம் அடித்த ஹடின் 80 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஒன்பதாவது இலக்காக வீழ்த்தப்பட்டார். பின்வரிசையில் ஸ்ரார்க் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க ஆஸ்திரேலிய அணி சகல இலக்குகளையும் இழந்து 427 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் நியூஸிலாந்து அணி சார்பில் மார்ரின் 3, வெற் றோரி, சவுத்தீ தலா 2 இலக்குகளையும் கைப் பற்றினர்.

132 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய நியூஸிலாந்து அணிக்கு பர்ரின்சன் ஆரம்பத்திலேயே பந்து வீச்சில் அசத்தி அதிர்ச்சியளித்தார். நியூஸியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய மக்கலம் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இறுதியில் நேற்றைய ஆட்டநேர முடிவில் ஒரு இலக்கு நஷ்டத்துக்கு பத்து ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் குப்தில் 7, பிராத் வைட் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் களத்தில் உள்ளனர். இன்று ஆட்டத்தின் நான்காம் நாளாகும். (15)

## சாதனை படைத்த ராம்போல்




மேற்கிந்திய அணி வீரர் ரவி ராம்போல், ஒரு நாள் சர்வதேச போட்டியில் நேற்றுமுன்தினம் புதிய உலக சாதனையொன்றை படைத்துள்ளார்.

விசாகப்பட்டிணத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்திய அணியுடனான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் 10 ஆவது வரிசை வீரராக களமிறங்கி ஆட்டமிழக்காமல் 86 ஓட்டங்களைப் பெற்றமையே இந்தச் சாதனையாகும்.

2009 ஆம் ஆண்டு அபுதாபியில் நடைபெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் வீரர் மொஹமட் அமீர் ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களைப் பெற்றமையே இதுவரை ஒருநாள் சர்வதேச போட்டியில் 10 ஆவது வரிசை வீரர் ஒருவர் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக இருந்தது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வேகப்பந்து வீச்சாளரான ராம்போல், 66 பந்துகளில் 86 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றில் 7 ஆறு ஓட்டங்கள், 6 நான்கு ஓட்டங்கள் அடங்கும்.

இது ஒருநாள் சர்வதேச போட்டியில் 10 ஆவது இலக்குக்கான 3 ஆவது அதிகூடிய இணைப்பாட்ட ஓட்டங்களாகும். (15)



குதூகலிக்கும் ஜேம்ஸ் பீற்றர்ஸனும் ஆட்டமிழந்து வெளியேறும் பிரண்டன் மெக்கலமும்..

(நியூஸிலாந்து -ஆஸ்திரேலிய முதலாவது டெஸ்ட் ஆட்டம்)

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதபிள்ளை ரகுநாதன்

(இளைப்பாறிய வைத்தியர் -R.M.P)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை ரகுநாதன் 02.12.2011 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் சொர்ணத்தினம்(கனடா) தம்பதியரின் மகனும் சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராமசாமி-சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் நாகேஸ்வரியின் (லண்டன்) அன்புக் கணவரும் செல்வச்சந்திரன் (லண்டன்), சிவநிதா(லண்டன்),சிவசுதா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரங்கநாதன்(கொழும்பு), சூரியகுமார் (ஜேர்மனி), ஜெயக்குமார்(பிரான்ஸ்),ஜெகநாதன்(கனடா),சந்திரகுமாரி (கனடா), சூரியகுமாரி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற Dr -ஜெயராசசிங்கம் மற்றும் ஈஸ்வரநேசன்(லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் லண்டனில் வசிப்பவர்களான செலன், வசீகரன், கரிகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிநாத், சமியாஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (5.12.2011) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

| | | |
|---|---|---|
| சுழிபுரம் மத்தி, சுழிபுரம். | செல்வச்சந்திரன் (லண்டன்)00441707708588 | (மைத்துனர்) ஈஸ்வரநேசன் குடும்பம். |

## திருமதி கடம்பேஸ்வரி கனகரெத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கடம்பேஸ்வரி கனகரெத்தினம் 02.12.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை- தையல்நாயகி தம்பியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-நாகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கனகரெத்தினத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மனைவியும், வானதி(மீரா- ஆசிரியர், யா/ மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை), ஜெயதேவன்(தேவா- கண்ணன்), சிவகுமாரன்(விஜி), அரவிந்தன் (கோபி) ஆகியோரின் அன்புத் தாயும், வசந்தி, வாசுகி, விபுஷானந்தி ஆகியோரின் மாமியும், ஆதித்தியன், அஸ்வினி, அபிஷனன், அபிஷணவி ஆகியோரின் பேர்த்தியும், பாஸ்கரன், ரகுநாதன் ஆகியோரின் சகோதரியும், விமலாம்பிகை, சந்திராதேவி, காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம், பரிமளம் மற்றும் நாகரெத்தினம், செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும், Dr.சர்வானந்தா, யோகேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், சுந்தரகுமாரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2 மணிக்கு நவாலி ஆரியம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிருந்தாவனம்,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி அன்னப்பிள்ளை குலசேகரம்



விடத்தற்பளை, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னப்பிள்ளை குலசேகரம் நேற்று (03.12.2011) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற குலசேகரம் அவர்களின் அன்பு மனைவியும், கந்தையா, செல்லாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமணிதேவி(சுவிஸ்), குணபாலசிங்கம்(கனடா), பரசக்தி, சிவஞானம், வெற்றிவேல், நவமணிதேவி (ஆசிரியர், யா/ மீசாலை வீரசிங்கம் ம.வி), கணேசலிங்கம் (சுவிஸ்), ஞானவடிவேல்(சுவிஸ்), காலஞ்சென்ற மகாஇலக்குமி மற்றும் ஞானாம்பிகை (ஆசிரியர், யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை) காலஞ்சென்ற சச்சிதானந்தம் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற உமாமகேஸ்வரன் மற்றும் கமலாதேவி (கனடா), பத்மநாதன், யோகேஸ்வரி, மீனாட்சி, சிவஞானலிங்கம், பிறேமாயினி(சுவிஸ்), வாணிஸ்ரீ (சுவிஸ்), தேவபாலன் ஆகியோரின் பாசமிகு மாமியும், துஷ்யந்தன்(சுவிஸ்), நந்தினி(சுவிஸ்), சாதனா (கனடா), பத்மயா, பவித்திரா, இராகுலன், ரவிசங்கர், வர்சிகா, பிரவீணன், தர்சிகா, யுமேஸ்யதுசங்கர், யதுட்ஷா, யாதவன், ஓவியா (சுவிஸ்), வைஸ்ணவி(சுவிஸ்), லக்ஸீ(சுவிஸ்), கயானி, கிஸ்ணாயினி, கஜவதனன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், யஸ்மினி (சுவிஸ்), ஜெவ்றி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(03.12.2011) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைலாயபிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

# நடமாடும் சேவை

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவை நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையின் போது காலங்கடந்த பிறப்பு, இறப்பு திருமணப்பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இந்தியாவில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், குடியுரிமை பெற்றுக் கொள்ளல் மற்றும் காணி தொடர்பான விடயங்களும் சட்ட ஆலோசனைகளும் இந்த நடமாடும் சேவையில் பெற்றுக்கொள்ளமுடியும். (ம)

# மழலைகளின் கலைவிழா

அச்சுவேலி, டிசெ.4

அச்சுவேலி தெற்கு கஜமுகன் பாலர் முன்பள்ளியின் கலைவிழா நிகழ்வு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலிகிழக்கு பிரதேச சபை அச்சுவேலி உப அலுவலக பொறுப்பதிகாரி எஸ்.புவனேந்திரன் ரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும். பிரதமவிருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார் கலந்து கொள்வார். (ம-11)

# சொன்னதைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட ஒழுங்குகளின் அடிப் படையில் நேற்று இரு தரப்புகளுக்கும் இடையில் அவசரமான பேச்சு நடந்தது.

அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்த அறிக்கையில், தீர்வு தொடர்பில் அரசு இணங்கிய விடயங்களுக்கு முதலில் மதிப்பளிக்கு மாறும் புதிய விடயங்களைத் திடீரெனச் சேர்க்க வேண்டாம் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அரசியல் தீர்வு தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான பிரதிநிதிகளை நியமிப்பதில் நேற்றைய பேச்சில் எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்தே கூட்டமைப்பின் இந்த அறிக்கை வெளியாகி இருக்கிறது.

இரு தரப்புப் பேச்சில், அரசியல் தீர்வு தொடர்பில் இணக்கம் காணப்பட்ட பின்பே தெரிவுக்குழுவில் சேர்வது குறித்து தாம் முடிவு செய்வர் என்று கூட்டமைப்பு முன்னரே அறிவித்திருந்தது. ஆனால், நேற்றைய பேச்சின் போது, தெரிவுக்குழுவுக்கான தமது உறுப்பினர்களின் பெயர்களைக் கூட்டமைப்பினர் தரவேண்டும் என்று அரச தரப்பில் வலியுறுத்தப்பட்டது. அதனை ஏற்க கூட்டமைப்பினர் மறுத்து விட்டனர்.

முதலில் தீர்வு பற்றிய இரு தரப்பு இணக்கம்; பின்னரே தெரிவுக்குழு என்ற தமது நிலைப்பாட்டில் மாற்றம் ஏதுமில்லை என்று அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டனர். ''நேற்றைய சந்திப்பு திடீரென மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கின் அடிப்படையில் நடந்தது. ஏற்கனவே செய்யப்பட்ட ஒழுங்கின்படி எதிர்வரும் 6ஆம் திகதி நடக்க இருக்கும் பேச்சில் கலந்து கொள்வதற்கு கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது'' என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உதயனுக்குத் தெரிவித்தார். (உ)

# நெடுந்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப் பட்டனர்.

இந்த மீனவர்களிடம் இருந்து ஒரு கிலோ 750 கிராம் நிறையுடைய ஹெரோயின் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது என்றும் அவர்களின் இரு விசைப் படகுகளும் மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட எண்மரும் பின்னர் காங்கேசன் துறைப்பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். (ஒ-14)


## சேவை

பணத்தினை கொடுத்து ஏமாறாதீர்கள்!
கவலை வேண்டாம் IELTS தேவையில்லை........!

UK, France, Spain, Hungary, Lithuania, New Zealand
ஆகிய நாடுகளிற்கு IELTS தேவையில்லை. Jan, Feb கான மாணவ அனுமதிகள் இப்பொழுது பரபரப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

நாட்டின் பெயரை மட்டும் சொல்லுங்கள் அரசாங்க சட்ட விதிகளுக்கு அமைவாக எவ்வாறு அந்நாட்டிற்கு செல்ல வேண்டும் என்பதை நாம் சொல்வோம்...

- Student Visa
- Tourist Visa
- Dependent Visa
- Special for Refused Visas
- Visit Visa
- Business Visa
- Settlement Visa

அனுபவமுள்ள ஆலோசகர்கள், சட்டத்தரணிகளால் ஆலோசனைகள் வழங்கப்படும்.
மாணவர்கள் இயலுமானவரை பெற்றோர்களுடன் வாருங்கள்.
முற்றிலும் சேவை நோக்கமே......!

Worldwide Educational Consultants
No. 527, Galle Road, Colombo - 06, Sri Lanka
Worldwide Educational Consultants Mobile : 0778 526 178 | 0771 953 366 Tel : 0112 361 951


# ஆசிரியர்கள் தேவை

மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்துக்கு 2012 ஆம் ஆண்டு கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல பின்வரும் துறைசார்ந்த இளம் பட்டதாரிகள் அல்லது தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வேலையின்றி இருக்கும் இளைய தலைமுறையினர் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் அனைத்தும் பதிவுத்தபால் மூலம் வயது, கல்வித்தகைமை, அனுபவம், பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் போன்ற விவரங்களுடன் அனுப்பிவைக்குமாறு கோரப்படுகின்றனர்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

(14027)(5,6)

துறைகள்: கணிதம், விஞ்ஞானம், தமிழ், வரலாறு, சங்கீதம், நடனம், ஆங்கிலம் ஆகும்.

குறிப்பு: தெரிவு செய்யப்படுபவர்கள் இல்லத்தின் ஆசிரியர்கள் விடுதியிலிருந்து கல்வி கற்பிக்க வேண்டும். சனி, ஞாயிறு தினம் கூடுதலாகக் கல்வி கற்பிக்க வேண்டும். தங்கியிருந்து கல்வி கற்பிக்க விரும்புபவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும், நடனம், சங்கீதம் ஆகிய துறைகளுக்கு பெண்களுக்கு ஏனையவற்றுக்கு ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: **10.12.2011** ஆகும்.

# கண்ணீர் அஞ்சலி



யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய ஆசிரியர் திருமதி நவமணிதேவி சிவஞானலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி அன்னப்பிள்ளை குலசேகரம்**

அவர்கள் மறைவு குறித்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச்சமூகம்**
**யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.**

# மரண அறிவித்தல்

## வீரகத்தி கதிர்காமு (வீ.கே.)



பேராலை, பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி கதிர்காமு (வீ.கே) 02.12.2011 வெள்ளிக்கிழமை சிவபத மடைந்துவிட்டார்.

அன்னார் தங்கம்மாவின் அருமைக் கணவரும், சிவபாக்கியம், இராசதுரை (கனடா), செல்வரத்தினம் (கனடா), இராஜேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் சண்முகநாதன் (கனடா), ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகராத்தினம்,காலஞ்சென்ற இராசமனோகரன், இராசலட்சுமி (கனடா), றஞ்சி (கனடா), லலிதா (கனடா) விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2011) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பேராலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பேராலை,
பளை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியர் திருமதி
**ஞானம்பிகை தேவபாலன்**
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
**அன்னப்பிள்ளை குலசேகரம்**

அவர்கள் மறைவு குறித்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதமானோர் 15 வயதுக்குட்பட்டவர்களாகவும், 42 வீதமானோர் 15-24 வயது வரையானோர் ஆகவும் மிகுதி 42 வீதமானோர் 25 வயதுக்கு மேற்பட்டவராகவும் உள்ளனர்.

கடந்த ஒன்றரை வருடகாலத்தில் மட்டும் - அதாவது 2010 ஆம் ஆண்டில் இருந்து 2011 ஜூலை மாதம் வரையில் - யாழ் குடா நாட்டில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான43பேர் இனங்காணப் பட்டுள்ளனர். அவர்களில் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

2008 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிவரங் களின் அடிப்படையில் எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட் டவர்கள் உள்ள இடங்களில் கொழும்பு மாவட்டம் முன்னிலை யில் உள்ளது. கம்பஹா, கண்டி ஆகியன முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களில் உள்ளன. இவ்வாறு எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின் றமைக்கு இடப்பெயர்வுகள், வெளிநாட்டவர்களின் வருகை, தவறான பாலியல் நடத்தைகள் என்பனவே காரணங்களாகும். எனவே எய்ட்ஸ் என்ற நோயை இலங்கையில் கட்டுப்படுத்த சகல மட்டங்களில் உள்ளவர்களும் விழிப்புணர்வுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் செயற்பட வேண்டும். - என்றார்.

இந்த நிகழ்வின் போது யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள இணைப்பாளர் எஸ்.தவக்குமார், யாழ்.சிறைச் சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் சிறைக்கைதிகளிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி யில் வெற்றியீட்டி யோருக்கு பரிசில் களும் வழங்கப் பட்டன. (ங - 311)

**கண்ணீர்க் காணிக்கை**

*03.12.2011 உதயனின் 30 பக்கத்தில் பிர சுரமான மேற்படி விளம்பரம் பிரசுரித்தவர் கள் பேக்கரி உரிமையாளர் சங்கம் என்பதனை சேர்த்து வாசிக்கவும்.*

## சத்திரசிகிச்சை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவை எதுவும் வடக்கு -கிழக்குக்கு இல்லை.

இது ஒரு பக்கச் சார்பான வரவு - செலவுத் திட்டம். யுத்தத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்காக எந்தவொரு வேலைத் திட்டமும் இந்த வரவு- செலவுத்திட்டத் தில் இல்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலை யில்லாப் பட்டதாரிகள் வேலை வாய்ப் புக் கோரி 21 தடவைகள் போராட்டம் நடத்தியுள்ளனர். ஆனால் அவர்களின் போராட்டம் எதற்கும் எந்தவொரு நடவ டிக்கையும் இந்த வரவு- செலவுத்திட்டம் ஊடாக எடுக்கப்படவில்லை.

இந்தப் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக நடவ டிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நாம் கடந்த வாரம் அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்றோம். பொது வான சிறைக்கைதிகளும் அங்கவீனர் களும் ஒன்றாக அடைத்து வைக்கப் பட்டுள்ள ஒரேயொரு நாடு இலங்கை மட்டும்தான்.

அரச தரப்பு அரசியல் வாதிகள் மஹிந்த சிந்தனையில் இருந்து விடு பட்டு தங்களின் சிந்தனையில் இருந்து இதைப் பார்க்க வேண்டும். 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம்திகதி இலங்கையின் சுதந்திர தினமாகும். அன்றைய தினம் அங்கவீனமுற்ற தமிழ் சிறைக்கைதிகள் 100 பேரை அரசு விடுதலை செய்ய வேண்டும்.

50 பெண்கள் இன்றும் சிறையில் வாடுகின்றனர். இவர்களைப் பற்றித் தான் அடிக்கடி பேசி வருகின்றேன். இந்த வரவு - செலவுத்திட்டத்தில் பெண் உரிமை பாதுகாப்புப் பற்றிப் பேசப்பட்டுள்ளது.ஆனால் எமது பெண்களுக்கு விடுதலை இல்லை.

இவ்வாறான வேதனைகளில் இருந்து நாம் விடுபட்டால் தான் நாட்டின் பொரு ளாதாரம் உண்மையான வெற்றியை அடையும்.

தற்போது தமிழ் தேசியக் கூட்ட மைப்பு அரசுடன் 15 ஆவது சுற்றுப் பேச்சை ஆரம்பித்துள்ள இந்த நிலை யில் பேச்சில் கலந்து கொண்டுள்ள கூட்டமைப்பு உறுப்பினர்களை நாடா ளுமன்றத் தெரிவுக்குழுவிலும் கலந்து கொள்ளுமாறு அரசு வலியுறுத்துகின்றது - என்றார்.

(ங-சி)

## பொன்சேகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரி வித்துள்ளார்.

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் முடிந்து குறுகிய காலத் தில், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் சரத் பொன்சே காவை முதல்முறையாக சிறையில் அடைத்ததில் இருந்து அவர் பற்றிய வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து மிக நெருக்கமாக அவதானித்து வருகி றோம்.

சரத் பொன்சேகாவின் வழக்குத் தொடர்பாகவும், பேச்சுச் சுதந்திரம், சட்டத்தின் ஆட்சி தொடர்பாகவும் நீண்டகாலமாக அமெரிக்கா கரிசனை எடுத்து, கவனித்து வந்துள்ளது.

பொன்சேகா வழக்கை தொடர்ந்தும் அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கை அரசாங்கம் அனைத்துக் குடிமக்களுக்கும் உரிய உரிமைகளை மதித்து நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதாகவும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் தின் தெற்கு, மத்திய ஆசிய விவகார பிரிவின் பேச்சாளரும், ஊடக ஆலோசக ருமான எமிலி ஹோர்ன், தெரி வித்துள்ளார்.

(ஒ-ங)

## ஆஸிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளின் பின்னர் கிறிஸ்மஸ்தீவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

வியாழக்கிழமை இரண்டு படகுகளில் சுமார் 200 அகதிகள் ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற நிலையில் நேற்றும் 100 வரையான அகதிகள் அங்கு சென்றுள்ளது ஆஸ்திரேலிய அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்தமாதம் மட்டும் ஆஸ்திரேலியாவில் 800 வரையி லான அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.

ஆனால் இந்த வாரத்தில் இரண்டு நாட்களிலேயே 300 இற்கும் அதிகமான அகதிகள் அங்கு சென்றுள்ளனர். ஆபத் தான மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையிலும் நான்கு படகுகள் சென்றுள்ளதும் அடுத்தடுத்த படகுகளில் நூற்றுக்கணக்கானோர் வரத் தொடங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-ங)


## கண்ணீர் அஞ்சலி



*திருமதி அருள் ரஞ்சிதாதேவி*

*அவரின் திடீர் மறைவினால் அதிர்ச்சியுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருடன் நாமும் பங்கு கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேம்படி சித்திவிநாயகரைப் பிரார்த்திப்பதுடன் அவர் தம் குடும்பத்தினருக்கும் ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

பிறவுண் வீதி, 1ஆம் ஒழுங்கை,
அன்னசத்திர ஒழுங்கை. **அயலவர்கள்.**

## மரண அறிவித்தல்கள்



*கந்தையா கணபதிப்பிள்ளை*

கொக்குவில், நந்தாவிலைச் சேர்ந்த கந்தையா கண பதிப்பிள்ளை நேற்று(03.12.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பவளம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோகேஸ் வரி(சந்திரா) மற்றும் தவமணிதேவி ஆகியோரின் அன்புக் கணவரும் பாஹினி ஜெயரெட்ணம்(ஜேர்மனி), பாமினி விஜயகுமார்(பிரான்ஸ்), பாலினி, பாதினி, தரோபரன் ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகத்தம்பி, பொன்னு குழந்தைவேலு, இரத்தினம் குகதாஸ்(சிங்கப்பூர்) காலஞ் சென்றவர்களான மகேஸ்வரி குமாரசாமி, பரமேஸ்வரி, Dr.அகிலாண் டேஸ்வரி மற்றும் சிவஞானம், தில்லையம்பலம் காலஞ்சென்ற நவநீதம், மற்றும் விஜயரெத்தினா(UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெனித்திரா, (ஜேர்மனி) திலீபன்(ஜேர்மனி), அர்ஜீன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (05.12.2011) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
774, நந்தாவில் லேன், கொக்குவில். **குடும்பத்தினர்.**

*ஞானப்பிரகாசம் நேசமலர் (நேசம்)*

நீர்வேலி பரலோகமாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் நேசமலர் நேற்று (03.12.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பரலோகமாதா கோயிலடி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. தகவல்: **குடும்பத்தினர்.**

*பொன்னுத்துரை சூரியபிரகாஷ்*

(ஆசிரியர் வவுனியா கிடாச்சூரி அ.த.க.பாடசாலை)



அச்சுவேலிவடக்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சூரியபிரகாஷ் கடந்த 01.12.2011 வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாராது இறுதிக்கிரியைகள் இன்று (4.12.2011)ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. தகவல்: குடும்பத்தினர்.



*செல்வி செல்லமுத்து சிவஞானம்*

போதல மடம், துன்னாலை வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாக் கொண்ட செல்வி செல்லமுத்து சிவஞானம் நேற்று (03.12.2011) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லமுத்து-கற்பகம் தம்பதியரின் பாசமிகு மகளும் ஸ்ரீநிவாசன் (பதில் அரசாங்க அதிபர், கிளிநொச்சி), ஜெகநாதன், இராஜேஸ்வரி, இராஜயோகானந்தம், விவேகானந் தம்(கனடா), மனோன்மணி, இந்து, இரகுநாதன்(கனடா), சிவயோகம், சிவலிங்கம், லலிதா(சுருக்கெழுத்தாளர்,பருத்தித்துறை நீதிமன்றம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

போதல மடம்,
துன்னாலை வடக்கு, கரவெட்டி. தகவல்: **செ.ஸ்ரீநிவாசன்.**

LANKATILES

LANKA TILES SHOWROOM - JAFFNA

எமது காட்சியறையானது இல- 469, K.K.S வீதி, யாழ்ப்பாணம் (யாழ். சிவன் கோயிலுக்கு அருகில்) தற்போது இயங்கிவருகிறது.

T.Phone: 0212228157



கலைமகள் அழகு நிலா
Beauty Acadamy

2011 ஆம் ஆண்டின் நிறைவை முன்னிட்டு கலைமகள் அழகு நிலா Beauty Acadamy நடத்தும் மகளிருக்கான வீட்டில் இருந்தவாறே தம்மை அழகுபடுத்தக் கூடிய பயனுள்ள விசேட ஒரு நாள் கருத்தரங்கு இடம்பெறும். மதிய உணவு வழங்கப்படும்.

சான்றிதழ் வழங்கப்படும்.

- Facial 2வகை (அனைத்து சருமத்துக்கும் உகந்தது)
- Bleach 3 வகை
- Hair Straighteing
- Pimple Treatment
- Face Cleaning
- Bridal Make- up (முழுமையாக அலங்கரிக்கப்படும்)

இடம்: வீரசிங்கம் மண்டபம் (1ஆம் மாடி)
திகதி: 10.12.2011
நேரம்: 9.30-5.00

கலைமகள் அழகு நிலா
Beauty Acadamy. 0773719071

பயிற்சிக் கட்டணம்- 2500/-

1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



பிரான்ஸை வசிப்பிடமாகக் கொண்ட தினேஸ் - ஹம்சா தம்பதியரின் செல்வப்புதல்வி

திஷானி

தனது முதலாவது பிறந்த நாளை பிரான்ஸில் 4.12.2011 ஞாயிற்றுக்கிழமை வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்.

இவரை சகல செல்வங்களும் பெற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்.

இலங்கையில் வசிக்கும் அம்மப்பா,அம்மம்மா, அப்பப்பா,அப்பம்மா, மாமாமார்(நிக்கோலா,தயானிஷன்), மாமி(துஷாரா)மற்றும் பூட்டிமார்,கோபிநாத் குடும்பத்தினர் (சிவாஜினி,அக்சயா)

51,B.Aதம்பிலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்





கடந்த அக்டோபர் மாதம் முதல் எமது நிறுவனத்தில் விற்பனைப் பிரதிநிதியாக வேலை பார்த்த சண்டிலிப்பாயை சேர்ந்த சண்முகம் ரஜிகாந்தன், மற்றும் கோப்பாயை சேர்ந்த மகேந்திரா சத்யேந்திரா என்பவர்கள் இருவரும், தொடர்ந்தும் இப்பதவியில் இல்லை என்பதையும் இவர்களை பணிநீக்கம் செய்யப்பட்டதையும் அவர்களுடன் எமது நிறுவனத்தின் சார்பாக எந்த விதமான கொடுக்கல் வாங்கல்களையும் செய்ய வேண்டாம் என்றும் இனிவரும் காலங்களில் ஏதாவது கொடுக்கல் வாங்கல்கள் செய்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் இத்தால் அறியத் தருகிறோம்.

நிர்வாகம்

நவீன் செரமிக்
Naveen Ceramic

212, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 0033 / 021 222 0044

5, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4777 / 021 222 4888

metro engineering

# STUDY IN UK
Spot Admission!

லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

- GCE(O/L) தகமை போதுமானது
- 20 மணித்தியாலம் வேலை (per week)
- 4 வருட visa உத்தரவாதம்
- இலவச IELTS வகுப்புகள்

**Jaffna**

| | |
|---|---|
| காலம் | 3rd & 4th December 2011: 10.30 a.m. - 3.00 p.m. |
| வழங்குபவர் | Mr.S.Srinimal |
| இடம் | Exponet -Jaffna Branch<br>No:197,Arasady Road,Jaffna (Between Kantharmadam Junction & Jaffna hindu Ladies College) |

icp

International College of Portsmouth(ICP) இல் இருந்து வருகை தரவிருக்கும் College Representative உடன் நேரடியாக கலந்துரையாடி உயர்கல்வி கற்பது தொடர்பாக இலவச ஆலோசனைகளையும் உடனடி அனுமதிகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**Colombo**

| | |
|---|---|
| காலம் | 05th December 2011: 1.30 p.m. - 4.30 p.m. |
| வழங்குபவர் | Mr. Charlie Meggy (International Marketing Officer) |
| இடம் | தலைமைக் காரியாலயம்-Exponet- Colombo<br>No:379 1/2,Galle Road,Colombo-06 |

எமது சேவை முற்றிலும் இலவசமானது* * Condition Apply

பதிவுகளுக்கு | Jaffna - 021 222 7230,021 753 8395
Colombo - 0117 555511,Fax - 0117 555517

EXPONET Overseas Consultants
Head Office : 379 - 1/2, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197,Arasady Road, Jaffna.
London Branch : 56, The Gradens Harrow Middlessex, HA1 4EY, UK.
Web: www.expogroup.lk | Email: nimal@expogroup.lk


## டெங்குக்கு இலக்காகி 167 பேர் சாவு

இந்தவருடத்தில் இதுவரையில் 167 பேர் டெங்கு நோயினால் மரணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இந்த மாதத்தில் மாத்திரம் 1917 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கிடையில் டெங்கு நோயினால் இடம்பெற்ற 167 மரணங்களுள், 74 மரணங்கள் கொழும்பு மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மழையுடன் கூடிய கால நிலையின் காரணமாக, டெங்கு நோய் மீண்டும் பரவக்கூடிய அச்சம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


**மார்ஷல் அக்கடமி**
கல்வியாண்டு - 2012
தரம் 4, தரம் 5
புலமைப்பரிசில்
வகுப்புகள்
ஆரம்பம்:- 06.12.2011
ஆசிரியர் -
திரு.நா.கீ.தபொன்கலன்
(B.A.Spl.Tr.,Sci., PGDE)
இடம்: 5B மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (பெரியகோயிலடி)
T.P: 0772850795
0213219124

# NALRAVI SPOKEN ENGLISH



பயிற்சி நெறியைப் பற்றி:
- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

**ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்**

யாருக்காக:
- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:
- BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்

NALBON INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond

| Head Office | Jaffna Branch |
|---|---|
| 527 2nd Floor | 62/20 3rd Floor |
| Galle Road Colombo 6 | Stanley Road Jaffna |
| Tel 0112 363656 Fax 2360004 | Tel 021 221 9 221 |

Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com
(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**
கோண்டாவில் மேற்கில் 8 பரப்புக் காணி வீடு வளவு 4 அறை, குசினி, 2 கோல், குளியல் அறை, தனிக்கிணறு போன்ற வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. (முத்தட்டு மடலேன், K.K.S வீதி, கோண் டாவில் மேற்கு)
தொடர்பு: 0771120823, 0213219122

**காணி விற்பனைக்கு**
நல்லூர் சுற்றாடலில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகள் மாலை 4 மணி முதல் 8 மணி வரை.
தொடர்புகளுக்கு: 0726803408

**மலிவு விற்பனை**
பாடசாலை உபகரணங்கள், அப்பியாச கொப்பிகள் மலிவு விலையில் (Disney, Pen 10 Richard, Bady girl)
Richard 3 கட்டு - 29/=, 4 கட்டு -38/=
5 கட்டு - 48/=, பேனாக்கள்- 8/=
மேலும் பல
Global Multi Trade Centre
கஸ்தூரியார் வீதி, இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக, வண்ணார்பண்ணை.

**கட்டட வேலை**
கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்ட சிறந்த வேலையாள்கள் மூலம் மேசன் வேலை, தச்சுவேலை, மாபிள் பதித்தல், Plumbing, Pantry cupboard, Electric work, Colour washing. மிகத் தரமான முறையில் குறித்த கால எல்லைக்குள் மலிவாகச் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு கொள்ள:0777556244

**வீடு விற்பனைக்கு**
2½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடுவில், அம்பலவாணர் வீதி, காளிகோயிலடி வடக்கு என்னும் முகவரியில் விற்பனைக் குண்டு.
தொடர்பு: 0212221982

**நத்தார் விலை கழிவு + 10 வரப்பிரசாதங்களுடன் ஐஸ்கிரீம் இயந்திரம்**



50,000/- மேல் மாத வருமானம்
- சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
- இலவச பயிற்சி
- விற்பனையின் பின் சேவை

ஒரு வருட உத்தரவாதம்
விலை ரூ 99,000/- இல் இருந்து | புத்தம் புதியது
WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.
தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 106 6902

**பாடசாலை அதிபர்களுக்கு**
தரம் 01 முதல் தரம் 13 வரையான 2012ஆம் ஆண்டுக்கான பாடப் பதிவுப் புத்தகங்கள் ஆசிரியர்களுக்கான பாட முன்னாயத்தப் புத்தகங்கள் நாளைய தினம் முதல் பெற்றுக் கொள்ளலாம்.
**ஷாம்பவி பதிப்பகம்**
276, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 4143, 0776184425
(C/6494)(2,6,9)

யாழ்ப்பாணத்தில்...
**IELTS** BRITISH COUNCIL
பரீட்சைகள் February 18th
IELTS FOR UK STUDENT VISA APPLICANTS
புதிய பிரிவுகள்
ஆரம்பம் :05.12.2011
பரீட்சை நாள்கள் வரை விசேட வகுப்புகள் நடைபெறும்

| | |
|---|---|
| Course Schedule | Mon.,Tues, |
| Duration | Wed.,Thu., Fri. |
| Time | 4.00- 5.30 |

**CITY COLLEGE OF ENGLISH**
No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 222 0384
077 8803887

**YOGI'S** (Academy of Beauty Tharapy, Hair Dressing & Home Science)
பண்டிகைக் கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 3 நாள்கள் மட்டும்.
2011 December 17 , 18 , 19 ஆம் திகதிகளில் மு.ப 10 மணி முதல் இலகுவாகவும், வித்தியாசமாகவும் விரைவாகவும் செய்யும் 6 கேக் கலவைகள், 6 பேஸ்ரி வகைகள் (Pastries), 6 Sweets வகைகள்.
வகுப்புகளில் சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.
T.P: 0212222796, 0777164923. 75,அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
(C/6498)(2,6,9)


நேரடியாக கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பொருட்களை யாழ் விலையில் சாவகச்சேரி நகரில் பெற்றுக்கொள்ள....
பாடப்புத்தகங்கள் விசேட கழிவு விலையில்
Diary 2012
2012ம் ஆண்டு கலண்டர்கள், டயரிகள்...
வாரீர் வந்து பெறுவீர்... தனங்கிளப்பு வீதியில்
**பொதிகை**
கொம்பியூட்டர் கிராபிக்ஸ்
புத்தகசாலை & போன்சொப்
வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை புரியும்
இல. 03, தனங்கிளப்பு வீதி (நவீனசந்தை அருகாமை), சாவகச்சேரி.
T.P :0212270447
email : phothigai@gmail.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
01

உதயன் | 04 டிசெம்பர் 2011 | ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள்: பதினாறு



# வேட்டையாடு! விளையாடு!

■ ஓரண்யன்

பேரினவாதத்தின் ஏவலாளிகளுக்கு நிர்வாணத் தண்டனைகள் மீது அலாதி பிரியம் போலும். இறுதிப் போரின் போதும் தம்மிடம் சரணடைந்தவர்களை அரசின் ஏவலாளிகள் அந்த அப்பாவிகளை நிர்வாணமாக்கினர். நீரும், செங்குருதியும் கசிந்து கொண்டிருந்த சேற்றுப் பகுதிக்குள் குந்த வைக்கப்பட்டு, அவர்களின் தலைகள் சிதறடிக்கப்பட்டன.

"மழையில் நனைவதை நான் அதிகம் விரும்புவேன். ஏனெனில் அப்போதுதான் என்னுடைய கண்ணீரை மற்றவர்கள் கண்டுகொள்ளமுடியாது''

உலகையெல்லாம் சிரிப்பலைக்குள் மூழ்கடித்த நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளின் உச்சரித்த வார்த்தைகள் இவை. ஒரு மழை நாளில் வெளியுலகத் தொடர்புகள் கத்தரிக்கப்பட்ட ஒரு சூனியப் பகுதியில் 56 தமிழர்கள் தங்களுடைய கண்ணீரை மழையோடு கரைக்கவேண்டிய நிலை. கடைசியில் அவர்களின் கண்ணீர், மழையை விடவும் அதிகமாகி, இவர்களின் கண்ணீரில் மழை மறைந்துபோனது.

**2011 நவம்பர்27.**

போர் முடிவுற்ற பின்னர் வருகின்ற மூன்றாவது மாவீரர் நாள். முதலிரண்டு வருடங்களை விடவும் இந்தமுறை மாவீரர் நாளை அனுஷ்டிக்க வேண்டும் என்ற மனோநிலை தமிழ் மக்களிடையே அதிகளவில் ஏற்பட்டிருந்தது.

வழமையாகவே சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதுண்டு. இம்முறையும் மாவீரர் நாளை நினைவுகொள்வதற் குரிய ஏற்பாடுகள் இரகசியமாக நடைபெறத் தொடங்கின. ஆனாலும் சிறை அதிகாரிகளின் கழுகு மூக்குகள் இந்த விடயத்தை எப்படியோ மோப்பம் பிடித்திருந்தன. ஆனாலும் அதை வெளிக்காட்டவில்லை. மாவீரர் நாளன்று அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் திடீர்சோதனை. கண்களில் வெறியுடன் உட்புகுந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கைதிகளின் உடமைகளை அக்குவேறு ஆணிவேறாகப் பரிசோதிக்கத் தொடங்கினார்கள். இதன்போது மாவீரர் நாளுக்குரிய சுவரொட்டிகள் சிலவும், கைத்தொலை பேசிகளும் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படுகின்றது. (எனினும் கைதிகள் இதனை மறுக்கிறார்கள்)

அதன்பின்னர் அதிகாரத்தின் ஏவலாளிகளுக்கு இன்னும் ஆவேசம் கூடியது. வெளியே மழை கொட்டிக்கொண்டிருந்தது. ஆனாலும் அநுராதபுரத்தில் சிறைகளுக்குள் சிக்குண்டிருந்த 56 கைதிகளும் சிறைச்சாலை வளாகத்தினுள் இழுத்துவரப்பட்டனர்.

''மாவீரர் நாளுக்காக நாங்கள் உங்களுக்கு பெரிய விருந்தொன்று தரப்போகின்றோம்'' எக்காளச் சிரிப்போடு சொல்லப்பட்ட இந்த வார்த்தைகள் சிறைச் சுவர்களில் மோதி எதிரொலித்தன. அந்த எதிரொலி அடங்குவதற்கிடையில் கைதிகளின் உடல்களில் சிறைக்காவலர்களின் கைகளில் இருந்த தடிகள் விளையாடத் தொடங்கின. சுற்றிவரச் சுவர். வெளியேறவே முடியாது. எவ்வளவு தான் ஓடினாலும் செக்கு மாடுகள் போல அந்தச் சிறிய வளாகத்துக்குள் மட்டுமே அவர்களின் நகர்வுகள் இருக்கமுடியும். எனவே ஓட ஓட கைதிகள் அந்தச் சதுர வளாகத்துக்குள் வேட்டையாடப்பட்டார்கள். அவர்களின் உடைகள் களையப்பட்டன. பல கைதிகள் நிர்வாணமாக்கப்பட்டார்கள்.

அந்த நிர்வாணக் கொலைகளுக்கு ஆணையிட்ட அதிகாரத்தின் இன்னொரு பகுதி ஏவலாளிகள் இங்கும் தம் கைவரிசையை காட்டத் தவறவில்லை. உடலை மறைக்க சிறு துணி கூட இல்லாமல் காட்டு விலங்குகள் போல கதறிக் கொண்டோடினார்கள் கைதிகள். அவர்களின் கதறல்கள் சுவருக்குள்ளேயே அடங்கிப் போனது. தங்கள் கைகள் வலிக்கும் மட்டும் ' மாவீரர் நாள் விருந்தை' கொடுத்துவிட்டு ஏவலாளிகள் ஓய்வெடுகக்கச் சென்றுவிட்டார்கள். தாங்கள் சிந்திய கண்ணீர் வெள்ளத்துக்குள் வலிகளோடு கைதிகளின் அன்றைய இரவு கழிந்தது.

அடைக்கப்பட்ட நான்கு சுவர்களுக்குள் தன் வெறிகொண்ட நாக்குகளுக்கு தீனி தேடுவது அதிகார வர்க்கத்துக்கு இதுவொன்றும் புதிதல்ல. 1983 ஆம் ஆண்டு ஜூலையில் வெலிக்கடைச் சிறையில் நிகழ்த்தப்பட்ட கொடூரங்கள் அவ்வளவு எளிதில் மறக்கக் கூடியவை அல்ல. அங்கே அரங்கேற்றப்பட்ட மனித வேள்வியின் உச்சக் கட்டமாக, தமிழ் மக்களுக்காக போராடப் புறப்பட்ட தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் கண்கள் தோண்டப்பட்டன. ஏனெனில் ''தமிழீழம் உருவாவதை எம் கண்களால் பார்க்கவேண்டும்'' என அவர்கள் ஒருமுறை சொல்லியிருந்தார்கள். ஆகவே அதிகாரத்துக்கு தமிழீழத்தைப் பார்க்க விரும்பிய கண்களை அழிப்பது அவசரமானதாக இருந்தது. கண்கள் உயிருடன் இருக்கையிலேயே தோண்டி எடுக்கப்பட்ட பின்னரும் அவர்களின் இரத்த தாகம் அடங்கவில்லை. குட்டிமணி, தங்கத்துரை இருவரினதும் உடல்களில் இருந்த தலைகள் கொய்யப்பட்டன. அவை ஒரு ஜீப்பின் முன்புறத்தில் ஒரு தேசிக்காய் போல குத்தப்பட்டன. அவர்களின் தலைகள் குத்தப்பட்ட ஜீப் வெலிக்கடை வெளிப்புறத்திலும் பவனி வந்தது. தங்களின் கடவாய்ப் பற்களில் குருதி வழிந்துகொண்டிருக்க, சிறைக்குள் நடந்தேறிய வெறியாட்டத்தின் வெற்றியை எங்கும் பிரகடனம் செய்தார்கள் ஏவலாளிகள்.

இதே பாணியில் 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 25ஆம் திகதி பண்டாரவளையிலும் சிறைப்படுகொலைகள் கனகச்சிதமாக நடத்திமுடிக்கப்பட்டன. 25 இற்கும் அதிகமான தமிழ் கைதிகள் பண்டாரவளைச் சிறைக்குள் தப்பிக்க வழி தெரியாமல் பேரினவாதிகளின் கத்திகளுக்கு தங்கள் கழுத்துகளை பலி கொடுக்கவேண்டியிருந்தது. இன்னும் சில கைதிகள் எரிந்து கொண்டிருந்த நெருப்பின் மீது உயிரோடு தூக்கியெறியப்பட்டார்கள். தீயின் சுவையை அனுபவித்தபடியே, துடிதுடித்து, ஓலமிட்டு, கடைசியில் கருகிப்போனார்கள் அவர்கள்.


இதைவிட புலிகளின் தாக்குதல்கள் வெற்றிபெறும் கணங்களில் எல்லாம் கைதிகளின் மீது மோசமான சித்திரவதைகள் பிரயோகிக்கப்படும். இதனால் ''புலிகள் தாக்குதல்கள் எதனையும் இன்று நடத்தக் கூடாது'' என்பது கைதிகளின் தினசரிப் பிரார்த்தனைகளில் ஒன்றாக இருப்பதுண்டு. தப்பித்தவறி நடந்தால் இவர்களுக்கு அன்றைய இரவு வலிகளோடுதான் கழியும். இப்போது இத்தகைய சிறைச்சாலைத் தாக்குதல்களின் பட்டியலில் அநுராதபுரச் சம்பவம் இணைந்திருக்கின்றது.

நாடெங்கிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஏராளமான தமிழ் இளைஞர்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் அனேகர் எந்தவித விசாரணைகளும் இன்றி வருடக் கணக்காக சிறைக் கம்பிகளுக்குப் பின்னாலேயே வாடவேண்டிக்கிறது. ''விடுதலை செய்யுங்கள் அல்லது விசாரணை செய்யுங்கள்'' என்பது தமிழ் அரசியல் கைதிகளின் நீண்டகாலக் கோரிக்கையாக இருக்கின்றது. தம்மை விடுதலை செய்யாவிட்டாலும் பரவாயில்லை விசாரணை செய்து தண்டனையைத் தந்தால் அதை அனுபவித்து விட்டு எப்போதாவது வெளியே சென்றுவிடலாம் என்ற மனப் பாங்குக்கு பல கைதிகள் வந்துவிட்டார்கள். சிறைச் சாலையின் நரக வாழ்வும், எந்தவித அர்த்தங்களும் இன்றி அச்சத்தோடு நீண்டுகொண்டே செல்கின்ற காலமும் குற்றம் செய்யாதவர்களையும் கூட இந்த நிலைக்கு இட்டு வந்திருக்கின்றது. எனவே விடுதலை செய்யாவிட்டாலும் விசாரணையாவது செய்யுங்கள் என்று கோரி பலமுறை கைதிகள் போராடி இருக்கிறார்கள். ஆனாலும் அந்தப் போராட்டங்களும் நீர்த்துப் போனதுதான் மிச்சம். உருப்படியான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவேயில்லை. எதற்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதே தெரியாதவர்களாக, விசாரணைகள் இன்றி இவர்களின் இரவுகளும் பகல்களும் நகர்ந்துகொண்டே செல்கின்றன.

சிறைக் கைதிகளைப் பராமரிப்பதற்கு பெருந்தொகையான நிதி தேவைப்படும். ஏற்கனவே நிதிப் பற்றாக்குறையால் தள்ளாடுகின்ற அரசு கைதிகளை விரைவாக விசாரித்து தண்டனை அளித்து விடுதலை செய்தால் பராமரிப்புச் செலவாவது மிஞ்சும். ஆனாலும் அரசு அப்படிச் செய்யப்போவதில்லை. காசு போனாலும் பரவாயில்லை கைதிகளை வைத்திருக்கவே அது தொடர்ந்தும் விரும்புகின்றது. தினவெடுக்கும் தன் ஏவலாளிகளின் கைகளுக்கு விருந்தளிக்க கைதிகள் என்ற பலி ஆடுகள் அரசுக்குத் தேவைப்படுகின்றன போலும்.

'போர் ஓய்ந்துவிட்டது துப்பாக்கிகள் உறங்கத் தொடங்கிவிட்டன. மக்கள் தம் பழைய இருப்பிடங்களுக்கு திரும்புகின்றனர். இயல்பு வாழ்வு மலரத்தொடங்கிவிட்டது' என்று அரசு திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தாலும், சத்தமின்றி இரும்புக் கூண்டுகளுக்குள் இன்னமும் பிரகடனப்படுத்தப்படாத கொடிய போர் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. எதிர்காலத்தில் கேள்விக் குறிகளோடும், அச்சத்தோடும் பார்க்கின்ற விழிகளைக் கொண்டவர்களாக கைதிகள் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் நின்றுகொண்டிருக்கிறார்கள். தம்மை மீட்க எல்லாக் கடவுளர்களுக்கும் விண்ணப்பங்கள் போட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். கடவுளர்களும் அதனை கசக்கி எறிந்தபடியேயிருக்கிறார்கள். நடந்து முடிந்த படுகொலைகள் பற்றி அதிகமாகக் அலட்டிக்கொள்ளும் மனித உரிமை அமைப்புக்கள் கூட தங்களைப்பற்றி அடக்கி வாசிப்பதாகவே கைதிகள் கருதுகிறார்கள். மனித உரிமை அமைப்புகளும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வல்லமை கொண்ட நாடுகளும் கைதிகளின் விடுதலை தொடர்பாக நல்லமுடிவை எடுக்க இலங்கை அரசை நெருக்கவேண்டும். அப்போதாவது ஏதேனும் சாதகமான நகர்வுகள் ஏற்படலாம். போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதும் அவசியம்தான். அதே அளவுக்கு நிகழ்காலப் பிரச்சினையான கைதிகள் விடுதலையும் அவசியமாகின்றது. இறந்துபோன ஒருவரின் சடலத்தை பிரேத பரிசோதனை செய்வதைவிடவும், பக்கத்தில் உயிருக்குப் போராடிக்கொண்டிப்பவருக்கு சிகிச்சை கொடுப்பதே முதன்மையானது. சர்வதேசம் கைதிகளின் விடுதலைக்காகவும் குரல் கொடுக்குமா? ✸

# கண்ணீரால் காரியம் சாதிக்கும் பெண்கள்



கண்ணீரை ஆயுதமாகப் பயன்படுத்துவதில் பெண்கள் வல்லவர்கள்என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

ஒரு மனிதன் மீது அடக்கு முறைகள் பிரயோகிக்கப்படும்போது இயலாமை என்னும் உணர்வானது ஒருவனிடத்தில் வரு கின்ற போது தான் கண்ணீர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் அதிலும் பெண்களின் அழுகை கொஞ்சம் வித்தியாசமானது.

சில பெண்கள் அழுகை மூலம் தமக்குரிய காரியங்களைச் சாதகமாக நிறைவேற்றவும் அழுகையை ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர்.

பெண்களும் ஆண்களும் சரிசமனாக வேலை செய்யப் பழகினாலும் கணவனிடம் அடிப்பட்டு அழுகை மூலம் சாதிப்பதில் ஒரு சுகம் இருப்பதாகப் பெண்கள் உணர்கிறார்கள் போலும். கண்ணீரை ஆயுதமாக்கிப் பெண்கள் வார்த்தைகளைக் கொட்டுகின்றபோது கண்ணீருக்குக் கட்டுப்படுகின்றனர். இது எதனால் என்பது புரியாத விசயமாக இருக்கிறது.

அலுவலகங்களிலும் சரி, பாடசாலைகளிலும் சரி சக நண்பர் யாருடனாவது சண்டையென்றால் தம்மால் முடிந்தவரை வாய் வீரத்தைப் பெண்கள் நிலை நாட்டப் பார்ப்பார்கள். இல்லையேல் இறுதி அஸ்திரமான கண்ணீரை ஆயுதமாக்கி சில வார்த்தைகள் சொன்னாலே போதும் எதிர்த்தரப்பினர் மௌனமாகி விடுவார்கள்.

சில ஆய்வாளர்கள் பெண்களின் அழுகையானது ஆண்களை இரசிக்க வைக்கிறது என்றும் கூறுகிறார்கள்.

இந்தக் கண்ணீரானது ஆண்களைத் தம் வசப்படுத்தவும் தம்பக்கக் கருத்துக்களை நியாயப்படுத்தவும் பெண்களுக்கு உதவுகிறது என ஆய்வுகள் கூறுகின்றன.

சுரபி.

# எட்டுப் பருவம்.....



ஏழு பருவம்
கண்டான் கவிஞன்
உன்னில்
எட்டுப் பருவம்
கண்டது சமூகம்...
விதவையோடு....
இறைவா.....!
உன்னிடம் வேண்டுவது
பெண்ணை
"மலடி" என்றும்
"விதவை" என்றும்
"விபச்சாரி" என்றும்
அவதூறு கூறும்
சமூகம்....
ஊமையாய் போகாதா...?
சற்று சிந்தனைசெய்
உன் பிறப்பிலிருந்து
இன்றுவரை- சமூகம்
எதை செய்தது என்று....!

ரி.அகிலா
கஸ்தூரியார் வீதி.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# இன்னொரு பெண்ணின் வாழ்வை விமர்சிக்காதீர்கள்



வாழ்க்கையில் அன்பு என்பது ஒரு மகா சக்தி. ஆனால் அது முழுமை பெறுவது தூய அன்பை வைத்திருக்கும் போது தான். இவ்வாறான அன்பு பெண்களிடமிருந்து குறைந்து வருகின்றது.

பெண் என்றால் மென்மையும் மேன்மையும் நிறைந்தவள். தற்போது மென்மையான அவள் குணங்கள் கடினமாக மாறி இன்னொரு பெண்ணை வேதனைப்படவைப்பது தான் மிகவும் வருந்ததக்க விடயமாக உள்ளது.

சில பெண்களில் கூடவே பிறந்த ஒரு குணம் இருக்கின்றது. இன்னொரு பெண்ணின் வாழ்க்கையைப் பற்றியும் அவளின் கடந்த காலம் பற்றியும் அறிந்து அதனை மற்றவர்களிடம் கூறுவது.

உண்மையில் இப்படிப்பட்ட குணம் கொண்டவர்கள் தம்மைத் திருத்திக்கொள்ளவேண்டும். பெண்களுக்கு வாழ்க்கையில் பல வேண்டத்தகாத சம்பவங்கள் நடந்திருக்கலாம் . அதனை எல்லாம் அலசி ஆராய்ந்து பார்க்க இன்னொரு பெண்ணுக்கு என்ன அவசியம் இருக்கின்றது.

ஒரு சிறு விடயத்தை ஊதிப்பெரிதாக்கி ஊர் முழுவதும் தம்பட் டம் அடிக் கும் முன் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

அவ்வாறில்லாமல் அவதூறாகப் பேசும்போது சம்பந்தப்பட்டவர்களின் மனம் எவ்வளவு வேதனைகளை அனுபவிக்கும் என்பதை ஒரு நிமிடம் யோசியுங்கள்.

உண்ட உணவு ஜீரணம் ஆக வேண்டும் என்பதற்காக இன்னொரு பெண்ணின் வாழ்க்கையில் எதிர்பாராத வகையில் இடம்பெற்ற வேண்டத்தகாத ரகசியங்களைப் போட்டு மெல்லாதீர்கள்.

ஏனெனில் பெண் பாவம் பொல்லாதது.

வந்தனா
ரைவெட்டி.



# கங்காவின் கடிதங்கள்

அன்பின் கண்மணி

உன் உறவுக்காரப் பெண் ஒருத்தி இரண்டாம் மொழி பேசுபவரை காதலிப்பதாகவும் அவருடன் சேர்ந்து திரையரங்கத்துக்குப் படம் பார்க்கச் செல்வதாகவும் மிக வேதனையுடன் எழுதியிருந்தாய். அதிகமான பெண்கள் இவ்வாறு நடந்து கொள்கின்றனர். இவ்வாறான பெண்களை என்னவென்று சொல்வது. மனச்சாட்சிக்குப் பயப்படாதவர்கள் தான் இவ்வாறு நடந்து கொள்வார்கள். அவர்களுக்கு விளங்கவில்லை காதல் என்றபெயரால் தாம் ஏமாற்றப்படப் போகின்றோம் என்பது.

இப்படிப்பட்ட பெண்களை புத்தி கூறித் திருத்த முயன்றாலும் தான் காதலிக்கும் நபரைக் கூட்டி வந்து மிரட்டுகின்றனர்.

தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற தைரியத்தில் தான் இளைய சமுதாயம் இன்று புதைகுழி நோக்கிப் பயணித் துக்கொண்டிருக்கிறது. கடைசியில் கெட்டுச் சீரழிந்து நிற்கப் போகின்றனர். அப்போது அவர்களுக்கு ஆதரவு கொடுத்து தூக்கிவிட யாரும் இருக்கமாட்டார்கள் என்பது தான் யதார்த்தம்.

அன்புடன்....
கங்கா.

# அண்ணா எழுதி வழங்கிய கலைவாணரின் நல்லதம்பி

சில நாள்களுக்கு முன்னர் பழைய நல்லதம்பி படத்தைத் தொலைக் காட்சியில் பார்க்கச் சந்தர்ப்பம் வாய்த்தது. இந்த மாதிரியான பழைய படங்களை மீண்டும் பார்க்கக் கிடைப்பது அருமை. இனி எப்போது மீண்டும் ஒளி பரப்புவார்களோ தெரியாது.

நல்லதம்பி படம் அருமையான கருத்துச் செறிவுள்ள ஒரு படம். அறிஞர் அண்ணா முதன் முதல் கதை வசனம் எழுதிய படம் என்று கூறுவார்கள். இந்த படத்தில்தான் பிரபல நடிகை பானு மதி தமிழ்ப்பட கதா நாயகியாக அறிமுகமாகின்றார்.

பானுமதி இந்திய மொழிகள் பலவற்றிலும் பேசி நடித்து மக்கள் மனம் கவர்ந்தவர். எம்.கே.ரி.பாகவதர் முதற்கொண்டு பி.யு.சின்னப்பா , ரஞ்சன், எம்.ஜி.ஆர், எம்.கே.ராதா, சிவாஜிகணேசன் என்று தமிழ்ப்பட கதாநாய கர்கள் பலரோடும் சேர்ந்து நடித்துக் கலக்கியவர்.

பானுமதிக்கும் அறிஞர் அண்ணாவுக்குமிடையில் ஏதோ தொடர்பு இருப்பதாக அந்தக் காலத்தில் கிசு கிசு செய்திகள் வந்த துண்டு. பத்திரிகையாளர் ஒருவர் அதைப் பற்றி அண்ணா விடமே கேட்டு விட்டார். அதற்கு அண்ணா கூறிய பதில், நான் முற்றும் துறந்த முனிவனுமல்ல, பானுமதி ஒன்றும் அறியாத சிறுபிள்ளையுமல்ல என்பதாகும்.

**அசை போட ஒரு 5 விடயம்**

இம் மாதிரி நாசுக்காகவும் கருத்து செறிவோடும் பேசுவதில் அண்ணா கைதேர்ந்தவர். சட்ட சபையில் சில ஆசனங்களை வென்று அண்ணாவும் அவரது தோழர்களும் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்தபோது - காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தது. ஆளும் கட்சியைச் சேர்ந்த அனந்தநாயகி அம்மையார் சபையில் பேசும் போது ''அத்தைக்கு மீசை முளைத்தால் தான் சித்தப்பா, அது போல அத்தைக்கு மீசை முளைக்கப் போவதுமில்லை தி.மு.க ஆட்சிக்கு வரப் போவதுமில்லை'' யென்று கிண்டல் அடித்தார்.

அடுத்துப் பேசிய அண்ணா, ''அத்தைக்கு மீசை முளைத்திருப்பதை அம்மை யார் அறியவில்லைப் போலும்'' என்று கூறி அப்பொழுது கேரளாவில் காங்கிரஸை வீழ்த்தி மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி பதவிக்கு வந்திருந் ததைச் சுட்டிக் காட்டினார். பக்கத்து மாநிலத்தில் அத்தைக்கு மீசை முளைத்திருப்பதைப் போல இங்கேயும் விரைவிலேயே முளைக்கப் போகிறது பாருங்கள் என்று பதிலடி கொடுத்தார். பின்னர் அண்ணா தலைமையில் தி.மு.க. ஆட்சி உருவானமை வேறு விடயம்.

நல்லதம்பி படத்தின் ஆரம்பத்திலே இந்திரசபா என்ற நாடகம் வருகிறது. மது விலக்கை வலியுறுத்துவதாக அந்த நாடகம்.

முதல் கட்டத்தில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் கோமாளியாகவும் புளி மூட்டை ராமசாமி நார தராகவும் வரு வார்கள்.

நாரதர் கூறுவார்; ''ஓ வாரும் பிள் ளாய் கோமாளியாரே''

கோமாளி : என்ன ஏமாளியாரே?

''உம்மை ஒன்று கேட்கிறேன் பதில் சொல்வீரா?''

"ஒன்று என்ன ஒன்பது கேளும் தில் சொல்கிறேன்''

''இந்தக் காலத்தில் உருட்டும் புரட்டும் திருட் டும்''

''நிறுத்தும் நீர் சொல்வது அந்தக்காலம் இந்தக்காலம் நீதியான காலம் நேர்மையான காலம் இன்னும் சொல்கிறேன் கேளும்...'' என்று கூறிவிட்டு ''மனுசனை மனுசன் ஏய்த்துப் பிழைத்தது அந்தக்காலம்'' என்று பாடத் தொடங்குவார்.

50 களில் மதுவிலக்கு பிரசாரம் தமிழ் நாட்டில் பெரிய அளவில் நடை பெற்றது. காங்கிரசார் மது விலக்கு பிரசாரம் செய்தது மட்டுமன்றி மது விலக்கை அமுல் நடத்தவும் முயற்சி எடுத்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் நல்லதம்பி படத்திலும் மது விலக்கு பிரசாரம் இடம் பெற்றதால் கலைவாணருக்கும் மதிப்பாய் இருந்தது அண்ணாவும் பெரிதும் புகழப்பட்டார். தமிழ் நாட்டின் பேர்னார்ட்ஷா என்று கல்கி அவரைப் புகழ்ந்ததாக கூறுவார்கள்.

அது அவ்வளவோடு முடிந்துவிட்டது. மது விலக்கு கொள்கையானது காந்திய கொள்கையாக இருந்த போதிலும் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்து 60 வருடங்களுக்கு மேலாகியும் அக் கொள்கையை அமுல் நடத்த முடியாமல் போய்விட்டது.

மதுவரியின் மூலமே அரசுகள் நிலைத்து நிற்க முடியும் என்ற நிலை இருப்பதே இதற்குக் காரணம்.

இலங்கையிலும் கடந்த தேர்தலுக்கு முன்பு மகிந்த சிந்தனையில் மதுவிலக்குப்பற்றி மிக பிரமாதமாகப் பேசப்பட்டது. தேர்தல் முடிந்த பின் பெரிய இடத்திலுள்ளவர்களே மதுபான கொண்டாட்டங்களை நடத்துகிறார்கள். மது ஒழிப்பு என்பது அவ்வளவு இலகுவான விடய மன்று.

இந்தப்படத்தில்தான் 'கிந்தன் சரித்திரம்' என்ற பின் தங்கிய சமூகத்தின் சிறுவன் ஒருவன் படித்து பட்டம் பெற்று மேல் நிலைக்கு வருவதைக் கூறும் கதாகா லாட்சேபத்தை வழங்குகிறார் கலைவாணர்.

இந்தப்படக்கதை வசனத்தை எழுதிக் கொடுத்தமைக்காக அண்ணா சன்மானம் எதையும் பெற்றுக் கொள்வில்லையாம். ஆனால் படம் வெற்றிகரமாக ஒடியதையடுத்து அண்ணாவுக்கு கலைவாணர் கார் ஒன்றை வாங்கிப் பரிசாகக் கொடுத்தார் என்று கூறுவார்கள்.

**அண்ணாவுக்கு முக்கிய பங்கு**

தமிழ் படங்களில் வசன நடையை புதுமுறைக்கு மாற்றி அமைத்தவர் களில் அண்ணாவுக்கு முக்கிய இட முண்டு. அதற்கு முன்னர் தமிழ் சினிமா வில் அக்கிரகார தமிழே வசனங்களாக பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அம்மாமி தமிழ் என்று அதனைக் கிண்டல் அடித்தார்கள் ''அவா வருவா; இவா போவா'' என்பது போன்ற தமிழ் பயன்படுத்தப்பட்டது. அண்ணாவுக்கு முன்பே இளங்கோவன் என்ற எழுத்தாளர் அழகான தமிழ் வசனங்களைத் தமிழ் படங்களில் பயன்படுத்தியிருந்தார். பி.யு. சின்னப்பா, பசும்பலோட்டி கண்ணாம்பா ஆகியோர் நடித்து வெளி வந்த 'கண்ணகி' படத்தில் இளங்கோவனின் தீ பறக்கும் வசனங்களைக் கண்ணாம்பா மிக அருமையாகப் பேசி நடித்திருந்தார்.

பிற்காலத்தில் மனோகரா என்ற படத்தில் கண்ணாம்பா மனோகரனின் தாயாராக நடித்து கலக்கியிருந்தது இரசிகர்கள் அறிவார்கள். இவ்வளவுக்கும் கண்ணாம்பா வேற்று மொழியாளர் ஆவார்.

அண்ணாவின் கதை வசனம் தமிழ் சினிமாத்துறையில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்தது. அண்ணாவைத் தொடர்ந்து கலைஞர், முரசொலி மாறன் மற்றும் பல தி.மு.கழகத்தினர், கதை வசனங்களில் அடுக்குத் தொடர்களையும் எதுகை, மோனைகளையும் புகுத்தி எழுதினார்கள். அதற்கு அந்தக் காலத்தில் நல்ல வரவேற்பும் இருந்தது.

இளைஞர்களைத் தமிழ் சினிமா கவர்ந்து இழுக்கும் தன்மை கொண்டது. அதனால் அந்தக்காலத்தில் சினிமாவையே கவர்ச்சிப்பொருளாகப் பயன்படுத்தி தி.மு.கவினர் அரசியல் நடத்தினார்கள்.

சினிமாவிலிருந்து அவ்வாறு அரசியலுக்கு புகுந்தவர்கள் ஏராளம்.

சிவாஜிகணேசன், எம்.ஜி.ராமச்சந்திரன், எஸ்.எஸ்.ராஜேந்திரன் போன்றவர்களைக் கூறலாம்.

பொதுவில் பிராமணிய எதிர்ப்பு இயக்கமாகவே தி.மு.க. ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் கொள்கைப் பிரசாரத்துக்கு வேலைக்காரி, பராசக்தி போன்ற படங்கள் பெரிதும் உதவின.

அந்தக் கட்சியிலிருந்து பிற்காலத்தில் கலைஞருடனான மோதல் காரணமாக அ.இ.அ.தி.மு.க.வை ஆரம்பித்தார் எம்.ஜி.ராமச்சந்திரன். இன்று அக்கட்சியில் தலைவராக இருப்பவர் பெரும்பாலும் மூலக்கட்சியின் கொள்கைகளிலிருந்து வெகுதூரம் சென்று விட்டதாகக் கூறப்படுகின்றது.

தி.மு.க.விலிருந்தும் , அ.தி.கவிலிருந்தும் பிரிந்து பல உதிரிக் கட்சிகள் தோன்றின. இவைகளில் பலவும் ஜாதிகளை மையமாக வைத்து இப்போது செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரம்யன்

# இத்தனை மாந்தருக்கு ஒரு சுடலை...

இத்தனை மாந்தருக்கு ஒரு சுடலை போதாதா.. எம்.எஸ்.விஸ்வநாதனின் குரலில் வெளிவந்த பழைய தத்துவப் பாடலில் கோயில் என்பதை நீக்கி விட்டுச் சுடலை என்பதை இட்டுள்ளேன். வித்தியாசம் அவ்வளவுதான். ஆனால் இங்கு கூற விளையும் விடயம் ஒரு சமகாலப் பிரச்சினைதான்.

நில மற்ற ஏழைக்குடிமகன் ஒருவன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றில் கேட்ட கேள்வியின் வெளிப்பாடுதான் அது. யாழ்.குடா நாட்டின் வலிகாமம் எனும் பெரிய நிலப்பரப்பிலுள்ள 5 பிரதேச செயலர் பிரிவினதும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றில் நடந்த உணர்ச்சி பூர்வமான உரையாடல்தான் என்னை இப்பத்தியை எழுதத் தூண்டியது. 4 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட பெரிய கிராமம் அது. பன்னெடுங்காலமாக இந்து மதத்தவர் பெரும்பான்மையாக வசிக்கிறார்கள். மரணமடைந் தோருக்கு தகனக் கிரியைகளை நடத்துவதற்கென 5 இந்து மயானங்கள் உள்ளன.

சனத்தொகை பெருக நிலமற்ற ஏழைகள் இந்து மயானத்தை அண்டிய நிலப்பரப்பிலிருந்து அரச காணிகளில் மெல்லக்குடியமர ஆரம்பித்தனர்.

காலம் அவர்களைச் சுடலையின் வாசல் வரை குடியமர வைத்தது.

இப்போது இந்து மயானத்தில் எரியூட்டப்படும் உடலங்களிலிருந்து எழும் புகையும். அரைகுறையாக எரிந்த உடலங்களின் துர்நாற்றமும் இந்த ஏழைக்குடியானவர்கள் நோய்களை எதிர்கொள்ள காரணமாயின.

சுவாசம் சம்பந்தமான நோய்களுடன் புற்று நோய்களும் இம் மக்களை பாதித்தன.

அதனால் அவர்கள் இந்து மயானத்தை இடம்மாற்றக் கோரிக்கை விடத் தொடங்கினார்கள். இப்போது அந்தப் பிரதேச செயலகத்தின் ஒருங் கிணைப்புக் குழுக்கூட்டத்தின் சூடான காட்சிக்கு வருவோம். அந்த ஏழைக் குடியானவர்களின் பிரதிநிதியாக ஒரு நடுத்தர வயதைத் தாண்டிய பெரியவர் எழுந்தார்.

தமது பிரச்சினைகளைக் கூறிச் சுடலையை (இந்து மயானம்) இடம் மாற்ற வேண்டுமென பணிவுடன் கோரிக்கை விடுத்தார். பிரதேச சபையின் அதிகாரி ஒருவர் எழுந்தார்; கேட்டார் ''சுடலை முதல் வந்ததா, அல்லது நீங்கள் அவ்விடத்துக்கு முதல் வந்தீர்களா'' அப்போது அந்த ஏழைப் பெரியவர் கூறினார். சுடலை முதல் தான் வந்தது. குடியிருக்க நிலமில்லாத காரணத்தால் நாம்தான் பின்னர் வந்தோம். பிரதேச சபை அதிகாரி கூறினார். நீங்கள் பின்பு வந்தபடியால் குடியெழும்ப வேண்டும் அல்லது இவற்றைச் சகித்துக் கொண்டு இருக்கத்தான் வேண்டும். பதில் சொல்ல எழுந்த குடியானவன் ''உலகம் இன்று தொழில் நுட்ப ரீதியாக எவ்வளவோ உயர்தரமான வாழ்க்கை வசதிகளைக் கண்டுள்ளது.

பலநூறு மனிதர் செய்யும் வேலைகளை ஓரிரு இயந்திரங்கள் திறம்படச் செய்கின்றன.4 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ள இந்த ஊருக்கு 5 சுடலைகள் தேவைதானா. 4 சுடலைகளை மூடி விட்டு ஒரு சுடலையை மின்சாரத்தில் தகனம் செய்யக் கூடியதாக மாற்றி விட்டால் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படாது, விறகுப் பிரச்சினையும் இராது. நிலமற்ற ஏழை மக்களின் பிரச்சினையும் தீர்ந்து விடும்.

அந்த ஏழையின் குரல் எல்லோரையும் சில விநாடிகள் அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது.

சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யத் தெளிவான ஆலோசனையாகவும் அது இருந்தது. மின்சாரத்தில் இயங்கும் மயானங்கள் தென்னிலங்கையில் ஆரம்பித்து வவுனியா நகரம்வரை வந்து விட்டது. வடக்கின் வசந்தத்துடன் இங்கும் வருமெனக் கூறினார்கள்.

வசந்தமும் ஓயும் நிலை வந்து விட்டது. அரசாங்கமும், எமது அரச உயரதிகாரிகளும் இம் மண்ணைத் தாய் நிலமாகக் கொண்ட அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த ஏழைக் குடியானவரின் கூற்றைச் சிந்திக்க வேண்டும். இலங்கைத் தீவின் வடக்கே குட்டிக் குடாநாட்டின் ஏழைக் குடியானவர்களின் நிலமற்ற நிலைமையைப் போக்க முன்வாருங்கள்.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் வட இந்தியாவில் வினோபாஜி எனும் சமூகப் பெரியார் பூமிதான இயக்கத்தை முன்னெடுத்தார். நிலப் பிரபுக்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தி பல லட்சம் ஏழைமக்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்கினார்.

அதுபோன்ற நிலைமை எம் மண்ணில் இல்லைத்தான் அது போகட்டும். இருக்கும் வளங்களை நடைமுறைக் குச் சாத்தியமான முறையில் அந்த ஏழை கூறியதைப் போல் பங்கிட்டுக் கொடுத்தால் என்ன? புதிய சிந்தனை ஊற்று இது. சமூகப் பெரியார்களே மனிதன் நலமாக வாழ உங்கள் பங்களிப்பைச் செய்யுங்கள். *

மருதன்

# அரசியல் அழுத்தங்களில் நீதித்துறை அழுங்கி விடுமா?

**டெய்லிமிரல் பத்திரிகையில் வெளியான கட்டுரையிலிருந்து சில பகுதிகள்**

ஒரு நபரின் உரிமைகள் மீறப்படுமானால் அல்லது அநீதியான தீர்ப்பொன்று அவருக்கெதிராக வழங்கப்படுமானால் அதற்கு நீதி வழங்குமாறு கோரி சர்வதேச அரசியல் மற்றும் மனிதஉரிமை ஆணைக் குழுவின் முன் அவரால் மன்றாட முடியும். இந்த உரிமையை முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர் மறுத்துவிட்டார். இன்று அரசாங்கம் அந்த நீதியரசரின் பழைய செயற்பாடுகளை ஆராயத் தொடங்கும் போது அவர் சர்வதேச நீதியை நாடிநிற்கின்றார்.

ஒருவரின் உரிமையை பறித்தெடுத்த தனது சொந்த செயல்பாட்டின் மூலமே இன்று அவர் உதவி இல்லாத மனிதராக திகைத்துப்போய் நிற்கின்றார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவரின் முந்தைய தீர்மானங்கள் அல்லது செயல்பாடு குறித்து அரசாங்கமோ அல்லது கட்சியோ விசாரணை நடத்த முனையும் போது அதனை எதிர்க்கவேண்டியது எமது கடமையாகும். இல்லையென்றால் இப்போது பதவியிலிருக்கும் பிரமதநீதியரசர் அதே நிலைக்கு ஆளாக நேரலாம். அரசு வேறு ஒருவரை அந்தப் பதவியில் அமர்த்தி விட முயலலாம். இது நீதிபதிகள் சுயேச்சை யாக செயல்படுவதற்கு ஓர் அச்சுறுத்தலாக இருந்துவிடும்.

பொய்யான தகவல்களைக் கொடுத்து ஐ.நா. குழுவை தவறாக வழிநடத்தக் கூடிய சாத்தியம் இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் மோகன் பீரிஸ் சில வாரங்களுக்கு முன் கருத்துவெளியிட்டிருந்தார். பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொட வெளி நாடொன்றில் வாழ்ந்துவருகிறார் என்பதற்கு தம்மிடம் தகவல் இருப்பதாக கூறியிருந்தார் அவர். இதற்கு மேலாக பத்திரிகையாளர் பொத்தல ஜயன்தவை தாக்கியவர்களை தாங்கள் கைது செய்திருப்பதாகவும் கூட அவர் கூறியிருந்தார். இது பற்றி பத்திரிகையாளர்கள் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விடம் கேட்டபோது, முன்னாள் சட்டமா அதிபர் வெளியிட்ட கருத்துக்கள் அவரது சொந்தக் கருத்துக்கள் ஆகும் என்று கூறினார்.

**பரிகாசத்துக்கு உள்ளாக்கும்**

முன்னாள் சட்டமா அதிபரும் ஜனாதிபதியின் சட்ட ஆலோசகருமான ஒருவர் உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிடுவாரானால் அது எமது நாட்டைப் பரிகாசத்துக்குள்ளாக்கும் விடயமாகும். பிரகீத் எக்னலிகொட இருக்குமிடம் அவருக்குத் தெரியுமானால் அதனை அரசுக்கு அவர் சுட்டிக்காட்ட முடியும். கண்டுபிடிப்பதும் அரசுக்கு சுலபமாகும். எனவே பிரகீத் எக்னலிகொட இருக்கும் இடத்தை வெளிப்படுத்தி சர்வதேசத்துக்குதான் பொய்கூறவில்லையென்பதை அரசு நிரூபிக்க வேண்டும்.

பொத்தல ஜயந்த தாக்கப்பட்டது தொடர்பாக இது வரைக்கும் எவரும் கைது செய்யப்படவில்லை. அவர் கடத்தப்பட்டமைக்கு நேரடிச் சாட்சியமான பெண்டி ரூப்பசிங்க கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

உண்மையில் இன்று என்ன நடக்கிறது என்றால் நீதிமன்றங்கள் அரசியல் வாதிகளால் சொல்லொணாத அழுத்தங்களுக்குள்ளாகி வருகின்றன. 18 ஆவது அரசமைப்பின் படி நீதித்துறை ஆணைக்குழு ஒழிக்கப்பட்டவுடன் சகல நியமனங்களும் ஜனாதிபதியாலேயே செய்யப்படும் என்பதால் நீதித்துறையின் சுயாதீனம் இழக்கப்பட்டு விடும். சட்டமா அதிபரின் திணைக்களம் ஜனாதிபதியின் நேரடி மேற்பார்வைக்குள் வந்துவிடும். கடந்தகாலங்களில் பல முறைப்பாடுகள் சட்டமா அதிபரால் வாபஸ் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு வழக்குகள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டமையால் சட்டமா அதிபரின் திணைக்களம் பகிடிக்குரியதாயிற்று. அரசியல் வேலைகளை செய்வதற்காக அரசியல் சட்டங்கள் பல இயற்றப்பட்டமை தொடர்பாக விவாதங்களும் கருத்துப்பரிமாற்றங்களும் இடம்பெற்றுள்ளன. அவை அமுல் படுத்தப்பட்ட முறைகளும் அவைகளுக்கு கொடுக் கப்பட்ட வியாக்கியானங்களும் விவாதத்துக் குள்ளாகிவந்தன.

குறிப்பாக கடந்த சிலவாரங்களில் இடம்பெற்ற சில சம்பவங்களாலும் நீதித்துறை பெருமளவு கேள்விக்குள்ளானமையும் குறிப்பிடப்படவேண்டும்.

**நீதித்துறை மீது நேரடி அச்சுறுத்தல்**

முன்னாள் பிரதம நிதியரசர் சரத் என் சில்வாவின் முன்னைய செயற்பாடுகளை விசாரணை செய்வதற்கான நாடாளுமன்ற குழுவொன்றை நியமிக்கும் செயற்பாட்டில் அரசாங்கம் இறங்கியுள்ளது. நீதித்துறையின் மீதான ஒரு நேரடி அச்சுறுத்தலாகும். இது ஒரு சட்ட விரோத நடவடிக்கையாகும், இதன்படி இப்போதைய நீதியரசர்களின் நடவடிக்கைகள் பிற்காலத்தில் ஆராயப்படுவதாக அமைந்துவிடும்.

கடந்தகாலங்களில் சரத் என் சில்வா சிறந்ததோர் சட்ட வல்லுனராக இருந்துள்ளார் என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். மேன் முறையீட்டு நீதி மன்றின் ஓர் அறிவுசார்ந்த நீதிபதியாக அவர் விளங்கியுள்ளார்.

பிரதம நீதியரசராக அவர் நியமிக்கப்பட்டதன் பின்னர் உலகவங்கியின் ஆதரவுடன் மாவட்ட நீதி மன்றங்களின் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை முன்வைத்து பெரும் பணியாற்றி யிருக்கின்றார். அவரது செயற்பாடுகள் பாராட்டப்பட்டுமுள்ளன சில சமயம் குறைகூறப்பட்டுமுள்ளன.

சுனாமி உதவி சபை மற்றும் வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு தொடர்பாக அவர் வழங்கிய தீர்ப்புக்கள் பார்வைக்கு இனமுலாம் பூசப்பட்டவையாக தெரிந்தாலும் ஒரு தீர்வை நோக்கி நகரும் படியாக அரசை நெருக்குவதாக அமைந்தன.

இன்று எதிர்த்தரப்பின் பலவீனம் பற்றி சரத் என் சில்வா பேசுகிறார். அவர்கள் துடிப்புடன் செயல்படவில்லையென்றும் அவர்களின் அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளதாகவும் கூறுகிறார். ஆனால் 2004 ஆம் ஆண்டு 108 ஆசனங்களை மட்டுமே கொண்டிருந்த அரசு 118 ஆக அதிகரிப்பதற்கு உதவிபுரிந்து எதிர்க்கட்சியினர் அரசுடன் இணைந்து அமைச்சர் பதவிகளை பெற்றுக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை என்று கூறி தீர்ப்புகளை வழங்கினார்.

இந்த நடவடிக்கை எதிர்க்கட்சியினர் இன்று இருக்கும் நிலைக்கு முக்கிய பொறுப்பு அவரையே சாரும் ஆனால் எதிர்க்கட்சிகளை பல வீனமாக்கி அவர்களை பிரிவினைக்கும் உள்ளாக்கியது. இன்று எதிர்க் கட்சிகள் பலவீனமாக இருப்பதாக அவர் கூறிக்கொள்கின்றார்.

இன்றைய பிரதமநீதியரசர் டாக்டர் ஹிராணி பண்டாரநாயக்க அனுராதபுரத்தில் கிராமிய பகுதியிலிருந்து வந்தவர். பல்கலைக்கழகத்தில் முதலாவது சட்டம் பேராசிரி யராக விளங்கினார். முதல் பெண் பிரதம நீதியரசர் என்ற முறையில் நாட்டுக்கு சிறப்பினைக் கொண்டு வந்துள்ளார்.

**தமிழில்: ரம்யன்**

இன்று நீதிமன்றங்கள் எதிர்கொள்ளும் அரசியல் அழுத்தங்களை எதிர்ப்பதற்கு அவருக்கு போதிய பலம் இருக்கும் என்று நம்புகின்றேன்.

எவருக்கும் அநீதிவிளைவிக்காமல் என் முதுகில் சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்று முன்னாள் இந்திய பிரதம நீதியரசர் பிரபுல்ல சந்திர நத்வர்லால் பக்தி ஒரு முறை தெரிவித்திருந்தார்.

இந்த மாதிரி பொறுப்புள்ள வகையில் சிந்திக்கும் சட்ட அறிஞர்கள் நமது நாட்டிலும் இருக்கவேண்டும் என்பது எமது ஆசையாகும்.

## மாறு வேடம் பூண்டால் மாண்பினை அறியலாம்

பண்டைய மன்னர்கள் இன்றைய அரசோச்சும்- அமைச்சர்களைப் போல, படைபலம், சூழ தெருவோரம் முப்படைகள் காவல் புரிய; அதிவேக வாகனங்கள் இரைந்து பாய- நடுவனாய் குண்டு துளைக்காத குளிரூட்டியிலே குனிந்த தலை நிமிராது பவனி வந்தார்களா என்றால் இல்லவே இல்லை- மக்களோடு மக்களாக, மக்கள் துயரோடு தாமும் துயர் பகிர்ந்து வாழ்ந்தவர்கள் பண்டைய மாமன்னர்கள் ''பசுவே- அரண்மனை மணியினை அடித்து நீதி கேட்ட பரம்பரை நம் தமிழர் பரம்பரை''.

இன்று புதுப்படம் வெளியிடும் இயக்குநர்கள்- இரவோடு இரவாக, மாறுவேடத்தில் 'கலரி' வரை சென்று மக்களுடன் கலந்து கருத்தை பல முறை ''மறைமுகமாகக்'' கேட்பது இன்றுள்ள வழக்கமாகி விட்டது- அன்றைய அரசர்கள் மாறுவேடம் தாங்கி தெருவில் நடந்தும் இருந்தும், கண்டும், கேட்டும் அறிந்த காலம் போய்- இன்று மக்களால், மக்களுக்கு, மக்களே தேர்ந்தெடுத்த-மா- மேதைகளான அரசியலார் மக்களைக் கண்டே ஓடும் கால மல்லவா இது? அது மன்னராட்சி இதுவோ மக்கள் ஆட்சி- இன்று ஒட்டு மொத் தமாக ஈழம் வாழ் தமிழர்கள் எதைக்கேட்கின்றனர். என்பதைக் கொழும்பில் இருந்து ஊகிப்பதை விடுத்து மக்களோடு மக்களாக அரசின் உண்மைத் தூதுவர்கள் கண்டறிந்தால், மறைந்த நீதியரசர் ஒருவர் கூறியது போல் ஒரு மணி நேரம் இருதரப்பும் மனம் விட்டுப் பேசினால் இலங்கை இனப் பிரச்சினையை ஒரே நாளில் ஒரு பொழுதில் தீர்த்து விடலாம். பேச வேண்டியவர்கள் பேசாமல் உலகளாவிய பேச்சு இரு பகுதியினரையுமே ஈற்றில் ஏமாற்றிவிடும்.

இந்தியா தனது அக்கறையை முன்வைத்து சீன ஆதிக்கத்தை மேலோங்க விடாது தடுத்து சிங்கள அரசைத் தன் பக்கம் இழுப்பதே இந்திய இராச தந்திரம். மேலை நாடுகள் அமெரிக்காவை முன்நிறுத்தி, தமது வர்த்தக நலனைப் பேணி ஆசியாவில், சீனத்தின் ஆதிக்கத்தை சிதைப்பதையே தம் மூச்சாகக் கொண்டுள்ளன. எவருமே எமக்காகப் பேசப்போவதில்லை. ஐநாவும் , மேற்குலக நாடுகளின் கைப்பொம்மையே. குடியமர்ந்த தமிழரின் கூக்குரல் கிணற்றில் விழுந்தவனைக் காக்கக் கூடி நின்று கத்துகின்ற கும்பலைப் போன்றதே!

கிணற்றில் குதித்துக் காப்பாற்ற யாருமே முன்வரப்போவதில்லை- இதுவே யதார்த்தமான உண்மை 'தனிநாடு' 'சுயநிர்ணயம்' எனப் பேசிக் கொண்டிருக்க எமது தாயகம் நாளும் பொழுதும் பறி போய்விடும். போன மண் போனதுதான். அமரர். ஜீ.ஜீ. முற்றவெளியில், அன்று கூறியதை இன்று நினைவு கொள்வோம். ''ஆடுற மாட்டை ஆடியும், பாடுற மாட்டை பாடியும் பால் கறக்கப்பழக வேண்டும். செல்வநாயகம் கொம்பனிக்கு இதைச் சொல்லி வைக்கிறேன்'' என்ற வார்த்தை இன்று சிந்திக்க வேண்டியது.

போரிட்டுக் கொன்று அழிப்பது ஒரு வகைச் சமாதானம் எனக் கூறி, நாலாபுறத்தாலும் மண்ணை அபகரித்து- சிங்கள அரச ஊழியர்களை உட்புகுத்துவது மறுவகையான இனக்கொலை. பறிபோன மண் மீளக் கிடைக்குமா? இன்று வேண்டுவது வாய் வீரமல்ல- மதியூகம்-

**விகடகவி**

## கல்வியின் தேவையை உணர்ந்து செயற்பட்ட சேர் பொன். இராமநாதன்

இலங்கையின் தவப்புதல்வர்களில் ஒருவராகப் போற்றப்படுகின்ற சேர் பொன்.இராமநாதன் 1851 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 16 ஆம் திகதி பிறந்து சிறுவயதிலேயே தாயை இழந்து பாட்டியின் அரவணைப்பில் வளர்ந்து கல்விப் பருவம் வந்ததும் தந்தையோடு வாழ்ந்தார். தந்தையைப் போலவே இராமநாதனும் சிறு வயது முதல் தமது ஓய்வு நேரங்களில் தேவார திருவாசகங்களில் ஈடுபட்டதோடு சமயப் பெரியார்களின் கருத்துரைகளிலும், உபதேசங்களிலும் ஈடுபாடு காட்டினார்.

சுதந்திர உணர்வும், நற்பண்புகளும், பொறுப்புணர்ச்சியும் உள்ளவராக விளங்கிய இராம நாதன் தனது ஆரம்பக் கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியிலும், சென்னை இராசதானிக் கல்லூரியிலே சி.வை.தாமோதரம் பிள்ளையின் மேற்பார்வையில் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

அருட்பரானந்த சுவாமிகளைச் சற்குரு வாய்ப் பெற்றதன் பின்பு இராமநாதனின் வாழ்க்கையின் நோக்கமும் போக்கும் புதுவழியில் திரும்பியதோடு மட்டுமன்றி வாழ்விலும் எளிமையாய், மிகவும் அமைதியாகவும், விவேகமாகவும், உண்மையாகவும், எவற்றாலும் அசைக்க முடியாத வீரத்தோடும், அஞ்சாமையோடும், எதிலும் பற்றற்ற தன்மையோடும், அனுதாபத்தோடும் வாழ்ந்துள்ளார். ஆன்மிக விருத்தியில் அதிக நாட்டம் கொண்டவராய் சமய ஒப்பீட்டறிவைப் பெருக்கிக் கொண்டார்.

**கடந்த 30 ஆம் திகதி அவரது குருபூசை**

இவரது கல்விப் பணி சைவப் பெண்பிள்ளைகளின் கல்வித் தேவையை உணர்ந்த வகையில் அமைந்தது. 1913 ஆம் ஆண்டில் இலங்கையில் முதலாவது சைவப் பெண்கள் உயர்கல்வி நிலையத்தை சுன்னாகத்தில் நிறுவினார். இதுவே தற்போது இராமநாதன் மகளிர் கல்லூரி எனும் பெயரில் இயங்கி வருகின்றது. ஆண்களின் ஆளுமையை வளர்க்க 1921 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவினார். பின்னாளில் இக்கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாறி அனைத்து மாணவர்களுக்கும் கல்வியைப் போதிக்கும் உயர் கல்வி நிலையமாக செயற்படுகின்றது. இவ்விரு கல்லூரிகளும் இராமநானின் கல்விச் சிந்தனைக்கும் கல்விப் பணிக்கும் நினைவாலயமாக அமைந்தன.


1923 ஆம் ஆண்டில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை உருவாக்க உதவினார். ஆர்வமுள்ள பலர் ஆரம்பித்த பள்ளிக் கூடங்கள் அரச அங்கீகாரம் பெறும்வரை இராமநாதனின் பொருளுதவியைப் பெற்றுக் கல்விப் பணியாற்றியதும் கவனிக்கத்தக்கது. சைவப் பெண்கள் ஆசிரியைகளாக வேண்டும் எனும் நோக்குடன் 1926 ஆம் ஆண்டில் இராமநாதன் கல்லூரி வளவில் இராமநாதன் சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலையையும் நிறுவினார்.

கல்விக்கு வறுமை தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகத் திக்கற்ற குழந்தைகளுக்கு நல்ல கல்விச் சூழலை வழங்க இராமநாதன் கல்லூரியில் சைவப் பெண்கள் அநாதைகள் இல்லத்தை நிறுவினார்.

கல்வி வாய்ப்புப் பெறுவதில் ஏழை என்றும், செல்வர் என்றும் வேறுபாடு இருத்தல் கூடாது எனவும் இக்கல்வி வாய்ப்பை அரசும் பாரபட்சம் இன்றி யாவர்க்கும் வழங்கல் வேண்டும் எனவும் பாடுபட்டதோடல்லாமல் தாமே இரு பெரிய கல்விக் கூடங்களையும் நிறுவி வழி காட்டிய வகையில் சேர் பொன். இராமநாதன் இந்த நாட்டின் கல்வித் துறைக்கு மாபெரும் பணியாற்றியுள்ளார்.

**யோ.பிரதீப்,**
தலைவர், இந்து மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.





# மணிமேகலைக் காப்பியமும் மாதவி – மணிமேகலை துறவறமும்

இலக்கியக் காட்சி – 111

(சென்றவாரத் தொடர்ச்சி)

மணிமேகலையோடு மாலை தொடுத்தலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சுதமதி என்பாளும் இதனை அவதானிக்கிறாள். மணிமேகலை மலர்வனம் செல்வதற்கு இந்திரவிழாக்காலம் உகந்ததல்ல. அதுவும் தனித்துச் செல்வது கூடாது என்றும் தான் முன்னர் பட்ட அவலம் பற்றியும் மாதவியிடம் கூறிய தோழி மணிமேகலையின் கண்ணீரைப் பார்த்து அவள் அழகுக்கு வந்த கேடு கண்டு உள்ளம் வருந்துகிறாள். இவ்வாறு மாதவியிடம் காணப் பெற்ற ஆடல், பாடற்கலையறிவும் அவள் உடலழகும் வீணாகிப் போனமையும், மணிமேகலை தன் இளமை வனப்பை அழித்துத் துறவுக் கோலங் கொண்டமையும் விதியின் பயனே ஆகும். இதனைத் திருவள்ளுவரும்,

*தவமும் தவமுடையோர்க்கு ஆகும் அறம் அதனை*
*அதிலார் மேற்கொள்வது* [குறள் 262]

என்று கூறுவது நம் சிந்தனைக்குரியதே.

சிலப்பதிகாரக் கோவலன் கண்ணகியார் வாழ்வில் ஊழ்வினை வந்து சேர்ந்தது. அவர்களின் இன்ப வாழ்க்கை இடைவழியில் முடிந்தது. அதுபோலவே மணிமேகலையின் வாழ்விலும் ஊழ்வினை துன்பம் விளைவிக்கிறது.

இன்ப வாழ்க்கைதான் கெட்டது என்றால் துறவு வாழ்க்கையிலும் உதயகுமாரன் என்ற அரசிளங்குமரனால் மணிமேகலை துன்பமடைகிறாள். அப்போது மணிமேகலாத் தெய்வம், சுதமதியின் உதவியுடன் மணிமேகலையைக் கொண்டு போய் மணிபல்லவம் என்கின்ற தீவில் சேர்த்துவிட்டது. பின்பு இளவரசனிடம் சென்று

*“ மன்னவன் மகனே!*
*கோன்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்;*
*கோள் நிலை திரிந்திடின் மாரி வறங் கூரும்;*
*மாரி வறங் கூரின், மன்னுயிர் இல்லை;*
*மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்*
*தன்னுயிர் - என்னும் தகுதி இன்றாகும்;*
*தவத்திறம் பூண்டோர் தன் மேல் வைத்த*
*அவத்திறம் ஒழிக”* என்று அவன்வயின் உரைத்தபின் புகார் நகரத்துக்குத் திரும்பியது

புகார் நகரத்து மணிமேகலாத் தெய்வம், வணிகனான கோவலனுக்கு வழிபடு தெய்வமாகும். வணிகஞ் செய்யுங்காலத்தில் இத் தெய்வம் அவனையும் நண்பர்களையும் விபத்துகளிலிருந்து காப்பாற்றியது. அதனாலேயே கோவலன் தன் மகளுக்கு மணிமேகலை எனப் பெயர் சூட்டிக் கொண்டாட்டமும் வைத்தான் என்பதை நாம் அறிவோமாக.

உதயகுமரனுக்கு மணிமேகலாத் தெய்வம் அறிவுரை கூறியும் கேளாது எப்படியும் மணிமேகலையை அடைய வேண்டும் என எண்ணுகிறான்.

அதேநேரம் மாதவி தன் மகளை நினைந்து இன்னுயிர் இழந்த யாக்கையின் இருந்தனள் என்கிறார் சீத்தலைச் சாத்தனார்.

மாதவி மகளை எண்ணி வருந்தியிருக்க, மணிமேகலை தந்தை கோவலனை எண்ணி அழுது கொண்டிருக்க அங்கே புத்தபகவான் அமர்ந்த ஆசனமான தருமபீடிகை அவள் கண்முன் தோன்றுகிறது.

இப்பொழுது தர்மபீடிகையை வணங்கிய மணிமேகலை தனது காதலன் யார் என்பதை உணர்த்தும்படி மணிமேகலாத் தெய்வத்திடம் வேண்டுகிறாள். தர்ம பீடிகையை (புத்தருடைய ஆசனம்) வணங்கியதும் தனது பழம் பிறப்பு உணர்ந்தவளாய், பழைய காதலன் யார் என்பதை கேட்கிறாள்.

பழைய காதலன் பெயர் இராகுலன். அவனோடு நீ காதல் மயக்கத்தில் உரையாடிக் கொண்டிருந்த பொழுது சாதுசக்கரன் என்ற ஒரு முனிவன் வானில் இருந்து இறங்கி வந்தான். அப்பொழுது இராகுலனைக் கவணியாது அந்த முனிவரைப் பணிந்து நின்றாய். அத்துடன் அவனுக்கு குளிர்ந்த நீரினைக் கொடுத்துப் பருகச் செய்தாய். அம் முனிவனை இராகுலன் வணங்கவில்லை; வந்தோன் யார்? என்று மணிமேகலையிடம் வெகுண்டான். ஆனால் வான் வழி வந்த முனிவன் நின் பிறவியை அறுத்துவிட்டது. இப் பிறவியில் நீ இலக்குமியாகவும் தாரை வீரை என்பவர்கள் முறையே மாதவி சுதமதியாகவும் பிறந்துள்ளீர்கள். இந்தத் தாரையும் வீரையுமாகிய சகோதரிகள் நினது தமக்கையர்களாக முற்பிறவியில் துச்சயன் என்னும் அரசனுக்கு மனைவியராக இருந்தவர்கள்.

இந்த இராகுலனே இப் பிறவியில் உதயகுமரனாக உவ வனத்தில் உன்னைக் கண்டு காமுற்றவன் எனவும் சாதுச்சக்கர முனிவன் கூறி மறைகிறான்.

மேலும் மணிமேகலை புத்தபீடிகையை வணங்கி நின்றதனால் முற்பிறப்பு அறிந்து நிற்கும் போது அவளது கையில் அமுதசுரபிப் பாத்திரம் வந்து புகுந்து கொள்கிறது.

இந்த இடத்தில் பசிப்பிணியின் கொடுமை பற்றிப் புலவர் கூறுவது காண்போம்.

*குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்*
*பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்*
*நாணணிகளையும், மாணெழில் சிதைக்கும்;*

*பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்*
*பசிப்பிணி என்னும் பாவி; அது தீர்த்தோர்*
*இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது*
*எனப் பசிப்பிணி தீர்த்தவருக்கு வரும் புகழ்*
*சொல்லுந் தர மன்று*

என்னும் கருத்தால் என் நா நிமிராது எனக் கூறுதல் நயம் பயப்பதாகும். அதனை இன்னொரு இடத்தில் கூறும்போது

*“மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே..”*

என முற்பிறப்பில் இராகுலன் ஆன தன் காதலன் இருக்கும்போது

தான் ஒருவனுடைய பசி போக்கியதால் போலும் இப்போது இப் பாத்திரம் தன் கையில் வந்தது என மணிமேகலையை எண்ண வைக்கும் புலவரின் திறன் வியந்து பாராட்டத்தக்கது. (மிகுதி அடுத்த வாரம்)

■ மட்டுவில் நல்லதம்பி

---

# அன்னையின் விடுதி

சிறுகதை

வழமையைப் போலவே அன்றைய காலைப் பொழுதும் சூரிய தேவனின் ஒளிப் பிரவாகத்தினூடு மலர்ந்தது. சிற்றோடையின் மேலாடையைக் களைந்து கொண்டு மார்கழி மாத குளிர்காற்று அப்பிரதேசத்தில் அன்று மலர்ந்த அல்லிகளுக்கு புத்துணர்வூட்டியது ஆதவனின் பொற்கதிர் தோகையும் விரிந்தாட அதிகாலைப் பொழுது உச்சி காலத்தை அடைய எத்தனித்துக் கொண்டிருந்தது.

இத்தனைக்கும் என்றுமில்லாத வண்ணம் அந்தக் கொழும்பு மாநகரிலமைந்த சுந்தரபவனம் அநாதைகள் விடுதி மட்டும் பரபரப்புடனும் பதற்றத்துடனும் அல்லோலப்பட்டுக் கிடந்தது. புதுமலர்கள் போல நிதமும் குதூகலிப்புடன் பூத்துக் குலுங்கிய அநாதை விடுதிச் சிறார்களும் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர்.

இந்த பரபரப்பு நிலைக்குக் காரணம்தான் என்ன? மகிழ்வுடன் குதூகலித்த பிஞ்சு முகங்கள் மட்டும் கண்ணீருடன் தத்தளிக்கக் காரணம் என்ன? காரணமில்லாமல் இல்லை......! அந்த விடுதியின் ஸ்தாபகராகிய அன்னம்மாள் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அவலம்தான் இத்தனை துயரங்களுக்கும் ஆதாரமெனில் மறுப்பதற்கில்லை. அன்னம்மாளின் கண்களிரண்டும் வாசற்கதவுகளினையே காவலிட்டு கிடக்கின்றன......! அன்னம்மாளின் உலர்ந்த உதடுகள் கூட சங்.....கீ.....தா என்ற நான்கெழுத்து மந்திரத்தைச் செபித்துக் கொண்டிருக்கின்றன. “பாவம் மகளின்ர முகத்தைப் பார்த்திட்டுத்தான் மகராசி உசிரவிடுவா போல...” என விடுதியின் காப்பாளர்களாகிய சுந்தரியும் கமலமும் ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டிருந்தனர். சுந்தரபவனம் விடுதியின் பத்துப் பிஞ்சுகளும் கண்ணீர் கசிய கவலையுடன் கதறினர். அன்னம்மாள் என்னும் மூதாட்டி அப் பிள்ளைகளின் மேல் கொண்டுள்ள பற்றையும் பரிவையும் அவர்களது கண்ணீர்த்துளிகள் வெளியுலகுக்கு உணர்த்திக் கொண்டிருந்தன. அன்னம்மாளின் மூடாத விழகளினூடு கடந்தகால எண்ண வாய்ப்புக்கள் கொழுந்துவிட்டு எரிந்தன. போரெனும் பேயன் தீர்த்துக் கொண்ட பலிகளும் அதனால் தான் பறிகொடுத்த உறவுகளும் தன்னை ஒரு அமங்கலி யாய் வாழவைத்த கொடூரங்களும் அவளின் உளத் தீக்குக் காரணங்கள் போலும்...! அன்னம்மாளின் மூடாத விழிகள் ஆயிரமாயிரங் கதை பேசின. அதனை இதமான இதயங் கொண்டோராலும் கனிவான குணம் கொண்டோராலும் யுத்தமெனும் அரக்கனால் உறவுகளை இறந்தவர்களாலும் மட்டுமே உணர்ந்து கொள்ள இயலும். இத்தனை கொடூரங்களையும் மீண்டும் ஒரு முறை அசைபோடத் துணிந்து விட்டது அன்னம்மாளின் இளகியமனது. இந்த இருபத்தைந்து வருடங்களையும் மீட்டுப் பார்க்கத் துணிந்து விட்டது அன்னம்மாளின் காருண்ய மனது.

வன்னி மண்ணுக்கும் சமாதனச் சூழலுக்கும் எட்டாப் பொருத்தம் போலும். அதனால்தான் யுத்தச் சத்தங்கள் என்றும் கேட்கும் வன்னி ஆனது. யுத்தத்தின் அனர்த்தங்களை ஒவ்வொரு நாளும் வன்னியின் மண் மீது கண்டுகொள்ளலாம். துப்பாக்கிச் சன்னங்கள் பலரின் வாழ்வை துர்ப்பாக்கிய சாலிகளாக மாற்றியமைத்துவிட்டது. குண்டுமாரி களின் அதிரடியினால் எத்தனையோ பேரின் வாழ்வு நிலைகுலைந்திருக்கின்றது. இத்தனைக்கு மத்தியிலும் உழைத்து சீவியம் செய்ய வேண்டிய நிலைப்பாடு அவர்களது கடமையாயிற்று. பெண்கள் கூட உழைத்து ஊதியம் பெற்றால் மட்டுமே யுத்தச் சாக்கடையில் அகப்பட்டோரின் வாழ்க்கைச் சக்கரம் சற்றேனும் சுழல இயலும். இது ஒரு சில பெண்களுக்கு விதிவிலக்கல்ல.



ந.சிவகரன்,
மெய்யியல் துறை,
2005 யாழ்.
பல்கலைக்கழகம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 04.12.2011 முதல் 10.12.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். வழக்கமான பணிகளில் இருந்து விடுதலை பெறுவீர்கள். நண்பர்களுடன் சந்தோஷமாக பொழுது போக்குவதில் நாட்டம் செல்லும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். ஓய்வாக இருக்க நினைத்தாலும், முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். எதிர்ப்புகள் போட்டிகள் இல்லாமல் ஏற்றம் பெறுவீர்கள். தந்தை உடல் நலனில் பாதிப்புகள் ஏற்பட்டு, அதனால், செலவுகள் செய்யலாம். மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்களால் அனுகூலம் பெறலாம்.

### இடபம்

ஊக்கம், உற்சாகம் குறைந்து அலுப்பு, சலிப்பு ஆள்கொள்ளும். திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். தேவையற்ற செலவுகளுக்கும் ஆள்படலாம். பயணங்கள், எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையலாம். நினைத்ததற்கு மாறாக சில காரியங்கள் நடக்கலாம். மற்றவர்களுக்காக உங்களின் சேமிப்புப்பணத்தைச் செலவிடலாம். அடிக்கடி, குழப்பங்கள் மற்றும் தடுமாற்றங்களுக்கு ஆள்படுவது தொடரும். எந்த விடயத்திலும் தீர்க்கமான முடிவு எடுக்க முடியாமலும், எந்தக் காரியத்தையும் திட்டமிட்டபடி செய்ய முடியாமலும் திணறலாம். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். உத்தியோக ரீதியாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். காரிய வெற்றி உண்டு. நல்ல செய்தி கேட்கலாம்.

### மிதுனம்

பணவரவுகளைப் பெறலாம். சோர்வின்றி, சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத நல்ல செய்திகளைக் கேட்கலாம். நண்பர்களுக்காக சில உதவிகளைச் செய்வீர்கள். கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். மற்றவர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். திட்டமிட்ட காரியங்களில் மாற்றங்கள் ஏற்படும். பயணத்தடை நேரும். நிறுத்தி வைத்த சில வேலைகளை உடனே முடிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகலாம். தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். திட்டமிட்ட சில வேலைகளை சிரமப்பட்டாவது முடிப்பீர்கள். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். ஊக்கம், உற்சாகம் கூடும். நீண்ட நாள்களாக வராமல் இழுத்தடித்த கடன் மிகுதிகள் வரலாம். நோய் உபாதைகளைச் சந்திக்கலாம்.

### கடகம்

மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். அலைச்சல் இல்லாமல் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். மற்றவர்கள் செலவில் உங்களின் சில தேவைகள் நிறைவேறும். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத சிலரைச் சந்திப்பீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம். இல்லையெனில், சிலருடன் பிரச்சினைகள் வரலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தந்தை வழியில் செலவுகள், சிரமங்கள் நேரும். எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் தவிக்கலாம். எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். சந்தோஷமான செய்தி களைக் கேட்கலாம். உறவினர்களால் தொல்லை உருவாகும்.

### சிங்கம்

குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். சிறிய விடயங்களைப் பற்றி பெரிய அளவில் கற்பனை செய்து பயம் கொள்வீர்கள். பணவரவுகளைப் பெறலாம். முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். பிரியமான வர்களின் சந்திப்பு நிகழும். திட்டமிட்ட காரியங்களைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகள், சிரமங்கள் உண்டாகும். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக் கலாம். பிரியமான உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பு நிகழும்.

### கன்னி

வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். உறவினர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். குழப்பங்கள், தடுமாற்றங் களுக்கு ஆள்படலாம். சிறிய பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் கவலை கொள்வீர்கள். ஆரம்பித்த வேலைகளை தடையின்றி, சுறுசுறுப்பாக முடிப்பீர்கள். சகோதரிகள், உறவுப் பெண்கள் சிலரின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம். மாற்று மொழி பேசுவோரால் நன்மை அடையலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பணவரவுகளைப் பெறலாம். தொழில் துறையில் அபிவிருத்தி காணலாம். நிர்வாகத்தினரிடம் எதிர்பார்த்த கோரிக்கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம்.

### துலாம்

ஆரம்பித்த காரியங்கள் எளிதாக வெற்றி பெறும் நாள். பெரிய மனிதர்கள் உதவியால், சந்திப்பால் பெருமை அடைவீர்கள். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். பொறுப்பாகச் சில வேலைகளைச் செய்து மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். உறவினர்கள் சந்திப்பால் உற்சாகம் பெறுவீர்கள். எடுத்த காரியங்களை எளிதில் முடிக்க முடியாமல் இடையூறுகளையும் சந்திக்கலாம். எதிர்பார்த்த பணவரவுகள், கடனுதவிகள் கிடைக்காமல் இழுத்தடிக்கலாம்.பேச்சில் கடுமையைக் குறைக்க வேண்டும். மற்றவர்கள் உங்களை குறை சொன்னாலும், அதை பொறுமையாகக் கேட்டுக் கொள்வது நல்லது.

### விருச்சிகம்

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். நீண்ட நாள்களாக பிற்போட்டு வைத்த வெளியூர் பயணம் செல்லலாம். ஊக்கம், உற்சாகமாகவும், பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். நீண்ட நாள்களாக முயற்சித்த காரியங்கள் பலிக்கும். கடன் பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சமாளிப்பீர்கள். மாற்று மதத்தினர் தொடர்பான வகையிலும் தொல்லைகள் உருவாகலாம். அவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். ஆதாயமில்லாத அலைச்சல், உண்டு. உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். பெரிய மனிதர்களின் உதவி கிடைப்பது தள்ளிப் போகலாம். மற்றவர்களுக்காகப் பிணை கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். சகோதரர்கள், நண்பர்கள் வகையில் உதவிகள் கிடைக்கலாம்.

### தனுசு

மனதில் நல்ல சிந்தனைகள் தோன்றும். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். பொறுப்புகளால் போராட்டமான நிலைமையைச் சந்தித்தாலும், அதனால், ஆதாயம் பெறுவீர்கள். கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். புத்துணர்ச்சியுடனும், புதுவேகத்துடனும் செயற்படுவீர்கள். தந்தை வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். பொறுப்புகள், வேலை நெருக்கடிகள் கூடும். ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள். பொறுமையைச் சோதிக்கும் நிகழ்ச்சிகள் அதிகமாக நடக்கலாம். எதிலும் பொறுமை, நிதானமாகவும், முன்யோசனையுடனும் செயற்பட வேண்டும். பணவரவுகளைப் பெறலாம். சந்தோஷ அனுபவம் உண்டு. பழகிய சிலர் மூலம் பணவரவு களைப் பெறலாம்.

### மகரம்

செலவு, அலைச்சல் உண்டு. சிலரைச் சந்திக்க வெளியிடங்களுக்குச் செல்லலாம். வழக்கமான வேலைகளை நிறுத்திவிட்டு வேறு வேலைகளில் ஈடுபடலாம். ஒரு விடயத்தில் மன உளைச்சலையும், மற்றொரு விடயத்தில் சந்தோஷமான அனுபவத்தையும் பெறலாம். எதிர்பாராத முக்கிய செய்திகளைக் கேட்கலாம். எதிலும் அவசரப்படாமல் நிதானமாகச் செயற்படுவது நல்லது. தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். கடன் பிரச்சினைகளில் கவனம் அவசியம். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். இழுத்தடித்த நீண்ட நாள் பிரச்சினைகள் சுமூகமாக முடிவுக்கு வரலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். வழக்கமான பணிகளில் தடை, தாமதங்கள்ஏற்படும். தேக ஆரோக்கியக் குறைவுகள் நீங்கி, தெம்பு உற்சாகமாகச் செயற்படுவீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம்.

### கும்பம்

செலவுகளையும், வீண் அலைச்சல்களையும் சந்திக்கலாம். மறதியாலும் அவதிகளுக்கு ஆளாகலாம். மற்றவர்களை நம்பி பொறுப்பான வேலைகளை ஒப்படைப்பதைத் தவிர்க்க வேண்டும். வெளியூர்களில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்கலாம். தாய் வழி சொந்தங்கள் மூலம் ஆதாயம் பெறலாம். தந்தை வழியில் நன்மை அடையலாம். எதிர்பாராத சம்பவங்கள் நடக்கும். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். ஊக்கம், உற்சாகம் கூடும். பணம் வரும். உறவினர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். உத்தியோக ரீதியான விடயங்களில் இடையூறுகள் ஏற்படலாம். சட்டம், நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும்.

### மீனம்

எடுத்த காரியங்களில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். குறைந்த பலனை எதிர்பார்த்துச் செய்த காரியம் ஒன்றில் பெரிய அளவில் பலன் கிடைக்கலாம். அலைக்கழிப்புகள், தொழில்ரீதியான தொல்லைகள் தொடரும். பெருமைக்காக சில செலவுகளைச் செய்து அவதிப்படுவீர்கள். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பர்.கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். திட்டமிட்டதை விட சில விடயங்களுக்கு அதிகமாகச் செலவிடலாம். தொழில் ரீதியாக மேலதிகாரிகளின், முதலாளிகளின் விமர்சனங்களைச் சந்திக்கலாம்.

## குரங்கார்



மனிதன் போல இருக்குது
மரத்தின் மேலே ஏறுது
கனியும் காயும் தின்னுது
காடு மலையில் வாழுது
இனிக்கும் கரும்பை ஒடிக்குது
இன்பமாகத் தின்னுது
மந்திக் கூட்டம் இதுவே

கூடி வாழும் குரங்கினம்
ஆட்டம் பாட்டம் போடுமே
ஆலம் விழுதில் தொங்குமே
ஓட்டமாக ஓடியே
ஒன்றை யொன்று பிடிக்குமே
அடிக்கத் தடியை ஓங்கவே
கடிக்கப் பாயும் நம்மையே

ரசிகா

# பணக்காரரும் முல்லாவும்

ஒரு நாள் முல்லா ஒரு பெரிய பணக்காரரிடம் சென்று ஒரு மனிதனுடைய கஷ்ட நிலை கண்டு மனம் தாங்க முடியாமல் தங்களிடம் வந்திருக்கிறேன். அந்த மனிதன் ஒரு பணக்காரரிடம் கொஞ்சம் பணத்தை கடனாக வாங்கிவிட்டான். அது இப்பொழுது வட்டிக்கு வட்டியெனக் கூடிவிட்டது. அந்தத் தொகையைத் திருப்பிக்கொடுக்க முடியாது திணறுகின்றான். அவன் தற்கொலை செய்து விடுவானோ என்று கூட எனக்குப்பயமாக இருக்கின்றது.

''அவனின் கடனை அடைப்பதற்கு நீங்கள் ஆயிரம் பொற்காசுகள் அந்த மனிதனுக்கு கொடுத்தால் அவன் உரிய காலத்தில் அதைத் திருப்பிக் கொடுத்து விடுவான். அதற்கு நான் உத்தரவாதம் தருகிறேன்'' என்று மிகவும் உருக்கமாகக் கூறினார்.அதைக்கேட்டு மனம் உருகிய செல்வந்தர் முல்லாவிடம் ஆயிரம் பொற்காசுகளைக் கொடுத்து ''அவ்வாறு கஷ்டப்படும் மனிதன் யார்?'' என்று கேட்டார்.

''வேறு யாருமல்ல நான்தான்'' என்று கூறிச் சிரித்தவாறு முல்லா சென்று விட்டார். இரண்டொரு மாதங்கள் கழித்து முல்லா அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். இரண்டொரு மாதங்கள் கழிந்தபின்பு மீண்டும் முல்லா அந்தப் பணக்காரரிடம் சென்று ''யாரோ ஒருவர் பணம் வாங்கிக் கஷ்டப்படுகின்றார்; அதை என்னிடம் வாங்கிக் கொடுக்க வந்திருகின்றீரா?'' என்றார் செல்வந்தர். 'ஆமாம்' என்றார் முல்லா.''அந்தக் கஷ்டப்படும் ஆள் நீர்தானே'' என்று செல்வந்தர் கேட்டார்.




''இல்லை உண்மையிலேயே ஓர் ஏழை தான் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகின்றான்'' என்றார் முல்லா. ''உம்மை எவ்வாறு நம்புவது பணத்தை வாங்கிய பின் நான்தான் அந்த ஏழை'' என்று கூறமாட்டீர் என்பதற்கு என்ன நிச்சயம் என்று செல்வந்தர் கேட்டார். ''நீங்கள் இவ்வாறு கூறுவீர்கள் என்று தெரிந்துதான் அந்த ஆளை நேரில் கொண்டு வந்து வாசலில் நிறுத்தியிருக்கிறேன்'' என்றார் முல்லா.

பின்னர் வாசல் பக்கம் சென்று ஓர் ஏழையை அழைத்து வந்தார்.'' நீர்தான் கடன்வாங்கி கஷ்டப்படும் ஏழையா? '' என்று கேட்டார் செல்வந்தர். 'ஆமாம்' என்று அந்த ஏழை பதில் சொன்னான். செல்வந்தர் முல்லா சொன்ன தொகையை ஏழையிடம் நீட்டினார். அதனை முல்லா கை நீட்டி வாங்கிக்கொண்டார். '' ஏன் பணத்தை நீர் வாங்குகிறீர்; பழையபடி என்னை ஏமாற்றுகிறீரா?'' எனச் செல்வந்தர் கேட்டார். ''நான் பொய் சொல்லவில்லையே, கடன்வாங்கியது அந்த ஏழைதான்; ஆனால் கடன் கொடுத்தவன் நான். கொடுத்த கடனை இப்பொழுது வசூல் செய்கிறேன்'' என்று கூறியவாறு ஏழையை அழைத்துக்கொண்டு முல்லா நடந்தார்.

■ சார்மி





டர்னிகன்,
தரம்-5,
காரைநகர்.



தர்ணிகா,
தரம்-3, யா/ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.



சோபிகா,
தரம்-8ரி, யா/மகளிர் கல்லூரி சாவகச்சேரி.



அ.பவிந்தன்,
யா/மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை.

## விடுகதைகளும் விடைகளும்

- கடலில் கலக்காத நீர், யாரும் குடிக்காத நீர் அது என்ன?
- அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைப்பான் அவன் யார்?
- ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள் அது என்ன?
- விடுமுறை இல்லாத கடை எது?
- சின்னப்பயல் உரசினால் சீறிப் பாய்வான் அது என்ன?
- வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கிறார். அவர் யார்?
- யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும். அது என்ன?
- வளைந்து நெளிந்து செல்பவள் வழியெங்கும் தாகம் தீர்ப்பாள் அவள் யார்?
- அடிக்காமல், திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் அவள் யார்?
- வளைந்து நெளிந்து ஆடும் தண்ணீர் குடித்தால் சாகும் அது என்ன?
- தொட்டுப் பார்க்கலாம் எட்டிப் பார்க்கமுடியாது அது என்ன?
- மாமா போட்ட பந்தல் பிரித்தால் கந்தல் அது என்ன?
- முறையின்றித் தொட்டால்,ஒட்டிக் கொண்டு உயிரை எடுப்பான் அவன் யார்?

### விடைகள்

1.கண்ணீர் 2.மேளம் 3.வாய் 4.சாக்கடை 5.தீக்குச்சி 6.பாம்பு 7.கண் இமை 8. ஆறு அல்லது அருவி 9.வெங்காயம் 10.நெருப்பு 11.முதுகு 12.சிலந்தி வலை 13.மின்சாரம்-

ஆ.கபிலன்.



## விடை தெரியுமா? 136

### உங்களுக்கும் பரிசில்கள்

1. குறைந்த அளவில் லஞ்சம் வாங்கும் நாடுகளில் இலங்கைக்கு எத்தனை யாவது இடம்?
2. மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான நகரங்களில் முதலிடத்தில் உள்ள நகரம் எது?
3. சர்வதேச எய்ட்ஸ் தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
4. தென் கொரிய அதிபரின் பெயர் என்ன?
5. உலகின் சிறந்த சிந்தனையாளர் பட்டியலில் இடம்பெற்ற இந்தியர்கள் எத்தனை பேர்?

### விடைகள் 134

1. அங்காரா
2. டியன்மென்
3. டோக்கியோ
4. இந்தியா
5. சூரியன்


### வெற்றி பெற்றோர் விவரம் (135)

★ஏ.கீர்த்திகன், தரம்3, யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
★எ.துவாரகி, தரம்- 6, யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
★சி.வனோஜா, தரம்-2,யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
★சி.லதாங்கி, தரம்-2, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 10.12.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

## கடற்குதிரை



பூமியில் உள்ள முழுக்கடற்பரப்பிலும் 32 வகையான கடற்குதிரை இனங்கள் காணப்படுகின்றன. வட அமெரிக்காவில் இருந்து தென்அமெரிக்கா வரையுள்ள பசுபிக் கடற்கரைகளில் பெருமளவில் காணப்படுகின்றன. இவை நீந்துவதற்கு வயிற்றுப்புற இடுப்பை குறைவாக பயன்படுத்துகின்றன. உடல் 25-30 சென்ரிமீற்றர் நீளமானது. சிறிய மீனினம், தாவரப் பிளாந்தன்கள், இறால்கள் என்பவை கடற்குதிரையின் உணவாக அமையும்.



இனப்பெருக்கத்தின்போது பெண் கடற்குதிரை அண்ணளவாக 200 முட்டைகளை ஆண் குதிரையின் பையினுள் இடுகின்றது. அங்கு அவை கருக்கட்டப்பட்டு முழுமையடைந்ததும் அவை பையிலிருந்து கடலுக்குள் செல்லும். இவை விசேடமாக நீர்த் தாவரங்கள், முருகைக் கற்பாறைகள், சதுப்பு நிலங்கள் உட்பட கடலினுள் நிழலான இடங்களில் வாழ்கின்றன.

-தி.துவாரகா

# மறக்க முடியுமா?



சின்னக் கருவாய்
அன்னை வயிற்றில்
முந்நூறு நாள் கழித்த
எண்ணக் கருவை
மண்ணில் வாழும் வரை
மறக்க முடியுமா?

அன்னை தன் மடியணைத்து
உண்ண அமுதும் பாலும் ஊட்டிய
வண்ணமதை இந்த
மண்ணில் வாழும் வரை
மறக்க முடியுமா?

வண்ண உடையணிந்து
வகிடெடுத்து தலைவாரி
பொன்னை அணிவித்து
புத்தழுகு பார்த்த
அன்னை அவள் செயல்
மண்ணில் வாழும் வரை
மறக்க முடியுமா?

எதிர்கால நலன்கருதி
ஏற்றமிகு கல்வி தன்னை
சரியான பாதையில் காட்டிய
அன்னை அவள் செயலை
மண்ணில் வாழும் வரை
மறக்க முடியுமா?

- யாரோ

# மறு ஜென்மம்...!

இப்பிறவியில் நீ
என்னைச் சேர்ந்திருக்க
நியாயமில்லை!
உனக்காக என்
இதயமும் துடிக்க
வாய்ப்பில்லை
என் இதயம் மீண்டும்
ஒருமுறை
உனக்காய் துடிப்பதற்காய்
தனது துடிப்பை
இடை நிறுத்திக்
கொள்கின்றது
மறு ஜென்மத்துக்காய்...!

ச.சோபியா,
புதலிகோயிலடி.

# இருவருக்காக!



எனக்காக மட்டுமே
சுவாசித்து துடித்த
என் இதயம்
உனக்காகவும்
சிறிது துடிக்க தான்
செய்தது நீ என் இதயத்தை
விட்டு வெளியேறியிருந்தாலும்
நீ தங்கிய இதயமது
தனது துடிப்பை இடை
நிறுத்தும் வரை
இருவருக்காகவும்
துடித்துக் கொண்டுதான்
இருக்கும்..!

# இலக்கிய விருந்தாளி

ஈழத்து இலக்கியக் காற்றே
உன்னை எழுதுவதில்
தமிழ் கொஞ்சமல்ல
அதிகம் திமிர் கொள்கிறது

நீ மயானம் போனது
மறைவுக்காகவல்ல
பிரபஞ்சத்தின்
இலக்கியப் பிழையை
சரி செய்வதற்கே

அன்புக்கிலக்கணமான
யேசுவை சிலுவையில்
அறைந்த போது
இஸ்ரேலே அழுதது
அன்று
தமிழுக்கு இலக்கணமான
உன்னைப் பிரிந்தால்
தமிழுலகமே அழுகிறது
இன்று

தமிழைச் சரி செய்தாய்
தமிழ் தலைமுறை
பிழைப்பதற்கு
காலம் உன்னைச்
சரி செய்தது
நாம் கண்ணீரில்
திளைப்பதற்கு

உன்னை எழுதுவதில்
எனக்கொன்றும்
பெருமையில்லை
உன்னை இழந்ததால்
தமிழ் மொழி அழுதது
அந்தத் தமிழை
எழுதுவது
பெருமைதானே!

செ.மோகன்ராஜ்,
நெடுந்தீவு- 12



# எம் தாய்மொழி

எம் தாய்மொழியை நாம்
பேசியதால் - எம்மவரின்
உயிரின் உரையாடல்
அழுகையின் புரிதல்
தவிப்பின் தாகம்
தண்டனையின் கடினம்
இறுதிவரை யாருக்கும் புரியவில்லை..!

சதிகள் என்னும் விதிகள் மட்டும்
சுதந்திரமாய் விளையாடுகின்றன..!
எம் வாழ்க்கையின் மைதானத்தில்..!
உணர்வுகள், உடல்கள் துடிதுடிக்க
நிர்ப்பந்தமாய் புதைக்கப்படுகிறதே...
எம் மண்ணின் மயானத்தில்...!

கண்ணீர் சொரிந்து கண்கள்
குருடாகியதும்...!
அவலம் கேட்டுக் காதுகள் செவிடானதும்...!
அகதியாய் அலைந்து கால் வலுவிழந்ததும்..!
துன்பம் நிறைந்து இதயம் மலடானதும்..!
இன்று நாம் பெற்ற வரங்கள்..!

தலை நிமிர்ந்து கூறுவோம்
எம் மண்ணில் இன்று நாம்
அகதிகள் என்று..!
ஓயாமல் கூறுவோம்
எம் இனத்தைக் கொன்று குவித்தது
"எம் தாய்மொழி" என்று..."

வி.செரோபா,
யாழ். பல்கலைக்கழகம்.



# என் இனியவள்

எத்தனை தான் சொந்தமிருந்து
என்ன?
கள்ளமில்லா வெள்ளை
உள்ளத்துடன்
நிலாவொளியின் குளிர்மை
போல்
நிஜ உலகில் - என்னை
உன் அன்பால் கவர்ந்தவளே..!
உன் உறவைப் போல்
இத்தரணியில் இனியும்
ஓர் உறவு உண்டோ...?
பண்பில் இமயம் - நீ
அறிவுக்கு ஆசான்- நீ
உறவுக்கு உண்மை - நீ
அன்புக்கு அன்னை - நீயே
என் அன்னை அம்மா

ஆத்மிகா பகவத்சிங்கம்,
நீர்வேலி தெற்கு.



# மரணம்

நீ இல்லாத
வாழ்வும்
உயிர்
இல்லாத
உடலும்
ஒரு வகையில்
சமத்துவம்
தான்..!



# சிறைச்சாலைகளில் தொடரும் இனவெறி

ஞாயிறு காரம்

■ சந்திரசேகர ஆஷாத்

> ஒரு தடுப்புக் காவல் கைதி நீதிமன்றத்தின் பொறுப்பிலேயே சிறையில் வைக்கப்படுகிறார். சிறையின் முழுப் பொறுப்பும் சிறைச்சாலை அத்தியட்சகரே. எனவே ஒரு கைதிக்கு இன்னல் ஏற்பட்டால் நீதிமன்றத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு சிறைச்சாலை அத்தியட்சகருக்கே. எனவே நீதிமன்றத்துக்கு உரிய நடவழக்கை எடுக்க வேண்டிய கடப்பாடு உண்டு.

"போரில் எந்தத் தரப்பு முன்னேறிக் கொண்டிருக்கிறது. எது பின்வாங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் சிறைக்குள் நடக்கும் சம்பவங்களைக் கொண்டே புரிந்துகொள்ள முடியும். போரில் சோவியத் தரப்பு முன்னேறுகிறது. எம் மேல் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் அதிகரித்துவிடும். காவலர்கள் கர்ணகடூரமாகி விடுவார்கள். பெரும் ஆவேசத்துடன் எம்மைத் தாக்குவார்கள். ஆனால் ஹிட்லரின் படைகள் முன்னேறும் போது அவர்கள் முகங்களில் கருகடுப்புக் குறைந்துவிடும். மூர்க்கத்தனமான தாக்குதல்களைக் கைவிட்டு எமது வேதனைகளைக் கண்டு ரசித்து மகிழும் வகையிலும் மகிழ்வையும் தோல்வியின் கோபத்தையும் அகதிகளைத் துன்புறுத்தும் விதத்திலிருந்தே நாம் புரிந்து கொள்வோம்.''

இது பிரபல செட் எழுத்தாளராகிய யூலிஸ் பூரிக் எழுதிய தூக்குமேடைக் குறிப்புக்கள் என்ற நூலில் காணப்பட்ட விடயங்களாகும். இவர் ஜேர்மனிய நாஸிகப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுக் கொடிய சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு இறுதியில் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டார். இவர் சிறையில் மரணத்தை நோக்கிக் காத்திருந்த நாள்களில் மலசலகூடத் தாள்களில் எழுதி இரகசியமாக வெளியே அனுப்பப்பட்ட குறிப்புக்கள் பின்பு அவரின் மனைவியால் தூக்கி மேடைக் குறிப்புக்கள் என்ற பேரில் வெளிவந்தன.

60 லட்சம் யூதர்களையும் பல்லாயிரக் கணக்கான நாஸிக எதிர்ப்பாளர்களையும் சித்திரவதைகள், இரும்புப் பட்டங்களால் தலையில் அடித்தல், விஷவாயுக் கூண்டுகளில் போடல், உயிருடன் கொதிக்கும் நீரில் அமிழ்த்தல் போன்ற பல்வேறு கொடிய வழிமுறைகள் மூலம் கொன்று குவித்த ஹிட்லரின் சிறைக் கொடுமைகள் பல இந்த நூலின் மூலம் வெளிவந்தன. 'உலகமே ஹிட்லரைக் கொடிய அரக்கனாகக் காறித்துப்பியது.

தமிழ்க் கைதிகளைப் பொறுத்தவரையில் இலங்கையின் சிறைச்சாலைகள் ஹிட்லரின் சிறைகளுக்கு எவ்விதத்திலும் குறைவுபடாத கொடூரபுரிகளாக இருந்து வருகின்றன. வெளியில் இடம்பெறும் எந்த ஒரு சம்பவத்தினது பிரதிபலிப்பையும் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் மேல் காட்டும் வீர நடவடிக்கைகள் என்பன தொடர் கதைகளாகவே மாறியுள்ளன.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தன்று அனுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற அரச காடைத்தனம் இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும். தமிழ் மக்கள் சில இடங்களில் வெளிப்படையாகவும் பல இடங்களில் இரகசியமாகவும் பல்வேறு இராணுவ காடைத்தனங்கள், நெருக்கடிகள் மத்தியிலும் தமக்காக உயிர்த்தியாகம் செய்த மாவீரர்கள் நாளை அனுஷ்டித்துக் கொண்டிருந்த சிறையின் உள்ளே தமிழ்க் கைதிகள் மேல் காடைத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

இன்று உங்களுக்கு விசேட நாள்; கொண்டாட வேண்டும் எனக் கூறப்பட்டு கைதிகள் முற்றத்துக்கு அழைத்து வரப்பட்டு கொட்டும் மழையில் நிறுத்தப்பட்டனர். பின் அவர்கள் நிர்வாணமாக்கப்பட்டுக் கர்ணகடூரமாகக் கொட்டன்களாலும் பொல்லுகளாலும் தாக்கப்பட்டனர். ஊனமுற்ற கைதிகளின் செயற்கை அவயங்கள் சேதப்படுத்திப் பறித்துச் செல்லப்பட்டன. இதில் படுகாயமுற்ற சில கைதிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் சிறைச்சாலை நிர்வாகமோ அன்று நாம் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் வேறு எதுவும் இடம்பெறவில்லை எனவும் தெரிவித்து விட்டது. எனவே இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும் படி கோரி கைதிகள் உண்ணா விரதப் போராட்டத்தில் குதித்தனர். ஆனால் சிறைச்சாலை நிர்வாகமோ கைதிகள் உடனடியாக உண்ணா விரதத்தைக் கைவிட வேண்டுமென மிரட்டியுள்ளது. அதாவது ஹிட்லர் சிறைச்சாலைகளின் பாணியில் அனுராதபுரம் சிறைச்சாலைக்குள்ளும் மாவீரர் தின நிகழ்வுகளுக்கு காடைத்தனம் மூலம் ஒரு பிரதிபலிப்பு காட்டப்பட்டுள்ளது.

இப்படியான சிறைச்சாலைப் படுகொலைகளும் தாக்குதல்களும் இலங்கைச் சிறைகளில் இடம்பெறுவது இதுதான் முதல் தடவையுமல்ல. வெளியில் இடம்பெறும் சம்பவங் களுக்கு கைதிகளைப் பழி தீர்க்கும் கோழைத்தனம் முன்பு இடம்பெறாமலும் இல்லை.

1983 இல் இலங்கை வரலாறு கொடிய இனவெறிப் படுகொலைகளால் என்றுமே அழிக்க முடியாதபடி தனது வரலாற்றைக் கறைப்படுத்திக் கொண்ட ஆண்டு. திருநெல்வேலியில் இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டத்தை அடுத்து திட்டமிட்ட வகையில் சிங்கள இனவெறி கொண்ட அரசியல் வாதிகளால் பெரும் இனஅழிப்புக் காடைத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டது. பல்லாயிரக் கணக்கான தமிழ் உயிர்கள் பறிக்கப்பட்டன. தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன; தமிழர்களின் தொழில் நிலையங்கள், கடைகள், குடியிருப்புக்கள் எரியூட்டப்பட்டன. தென்னிலங்கையின் வீதிகள் எங்கள் தமிழ் மக்களின் இரத்தம் ஆறாக ஓடியது.

இந்தக் கொடுமைகள் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள்ளும் பாயத் தவறவில்லை. சிறைக் காவலர்களதும் அதிகாரிகளதும் அனுசரணையுடன் சிங்களக் கைதிகள் முதல் நாளிலும் மூன்றாம் நாளிலுமாக குட்டிமணி, ஜெகன் தங்கத்துரை உட்பட 56 தமிழ்க் கைதிகளின் கண்களைத் தோண்டி, பிறப்புறுப்புக்களை அறுத்து கொடூரமான முறையில் கொலை செய்து சிறைச்சாலை புத்தர் சிலையின் முன் போட்டனர்.

அங்கே சிறை அதிகாரி கள் முன்னிலையில் இரு பாரதூரமான குற்றங்கள் இடம்பெற்றன. ஒன்று மரண தண்டனை உட்பட நீதிமன் றத்தால் தண்டிக்கப்பட்டுத் தீர்ப்பளிக் கப்பட்ட கைதிகள் நீதிமன்றத் தீர்ப்பு நிறைவேற்றப்பட முடியாதவாறு அங்கு கொல்லப்பட்டனர். அதனால் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மற்றது - எந்த ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்புமின்றி சிறைக்குள் மேற்கொள்ளப்பட்ட உயிர் பறிப்பு.

இந்தப் பாரதூரமான குற்றத்துக்குத் துணைபோன சிறைக் காவலர்களோ, பொறுப்புக் கூற வேண்டிய சிறை அத்தியட்சகரோ விசாரிக்கப்படவுமில்லை; தண்டிக்கப்படவுமில்லை.

இந்தக் குற்றங்களில் நேரடியாக ஈடுபட்ட கைதிகள் கூட தண்டிக்கப்படவில்லை. மாறாக குறித்த வெளிச் சிறைச்சாலை என்ற பேரில் மணலாறு கென்ற் பாம், டொலர் பாம் பிரதேசத்துக்கு அனுப்பப்பட்டனர்.

இரத்தவெறி அடங்காத அவர்கள் வேட்டைக்கோ அல்லது தேன் எடுக்கவோ காட்டுக்குள் செல்லும் தமிழ் மக்களின் கழுத்துக்களை வெட்டிக் கொலை வெறியாட்டம் ஆடினர். இன்னும் நெடுங்கேணி, மருதோடை வீதியில் கழுத்து வெட்டிச் சந்தி என்ற பெயருடைய சந்தி உண்டு.

இப்படியான சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் தண்டிக்கப்படாமல் இருப்பது அரசு இவற்றுக்கு வழங்கும் மறைமுக ஊக்குவிப்பையே வெளிப்படுத்துகிறது. எனவே இப்படியான சம்பவங்கள் தொடர்வதில் என்ன ஆச்சரியம் இருக்கக் கூடும்?

இதை அடுத்து இடம்பெற்றது பிந்துனுவெவ இளைஞர் சீர்திருத்த முகாமில் நடந்த கொலை வெறியாட்டம். சிறைக்காவலர்களும் உள்ளூர்க் காடையர்களும் இணைந்து அங்கு தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களில் 24 பேரைக் கொன்று பலரைக் காயப்படுத்தினர். இந்தக் கொலையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களான மூவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மேல்முறையீட்டில் அவர்கள் குற்றமற்றவர்கள் எனக் கூறப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

அதன் பின்பு வெலிக்கடை, மகஸின், களுத்துறை ஆகிய சிறைகளில் பலமுறை கைதிகள் சிறைக் காவலராலும் சிங்களக் கைதிகளாலும் தாக்கப்பட்டனர். உயிராபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். தமிழ்க் கைதிகள் உண்ணா விரதம் முதற்கொண்டு எத்தனையோ போராட்டங்களை நடத்திய போதும் சம்பந்தப்பட்ட எவருமே தண்டிக்கப்படவுமில்லை; எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவுமில்லை.

இத்தனைக்கும் இவர்கள் விடுதலைப் புலிகள் என்ற பேரில் கைது செய்யப்பட்டவர்களல்ல. விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள். இவர்களில் குற்றமற்றவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் குற்றம் புரிந்ததாகக் கருதப்படுபவர்கள் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் பல மாதங்களுக்கு முன்பே பிரதம நீதியரசர் உத்தரவிட்டுவிட்டார்.

அவரின் கட்டளை கூட அலட்சியப்படுத்தப்படுகிறது. ஆனால் கைதிகள் சட்டவிரோதமான முறையில் தாக்கப்படுகின்றனர்; அவமானப்படுத்தப்படுகின்றனர்; துன்புறுத்தப்படுகின்றனர். ஆனால் அவற்றைத் தடுக்கிற எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஒரு தடுப்புக் காவல் கைதி நீதிமன்றத்தின் பொறுப்பிலேயே சிறையில் வைக்கப்படுகிறார். சிறையின் முழுப் பொறுப்பும் சிறைச்சாலை அத்தியட்சகரே. எனவே ஒரு கைதிக்கு இன்னல் ஏற்பட்டால் நீதிமன்றத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு சிறைச்சாலை அத்தியட்சருக்கே.

எனவே நீதிமன்றத்துக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய கடப்பாடு உண்டு.

இவ்வாறான பிரச்சினைகள் எழும் போது உரிய நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கி பொதுமக்களுக்குப் பதில் கூற வேண்டியவர் நீதியமைச்சராவார். அவர் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவாரா?

யூ.என்.சி.எச்.ஆர் உட்படச் சகல அரச சார்பற்ற நிறுவனங்களையும் வெளியேற்றிவிட்டு ஊடகங்கள் அனுமதிக்கப்படாது இறுதிப் போர் இடம்பெற்று பெரும் இன அழிப்பு இடம்பெற்றது. களத்திலிருந்த பி.பி.சி இற்கு தகவல் வழங்கிய வைத்தியர்களும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுத் தாம் வழங்கிய தகவல்கள் பொய் எனக் கூற வைக்கப்பட்டனர். அத்துடன் அரசின் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பிரச்சினை முடிந்துவிட்டதாக அரசு நம்பியது.

ஆனால் செய்மதிப் படங்களும், சனல்- 4 ஒலி, ஒளி நாடாக்களும் இன்று அரசின் மீது போர்க் குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும் சுமத்தி திக்குமுக்காட வைக்கின்றன.

எனவே சிறைச்சாலைகளுக்குள் இடம்பெறும் அரச காடைத்தனங்களை அதிகாரபலம் கொண்டு தற்சமயம் மறுக்கலாம். ஆனால் அவை எப்படியோ ஒரு நாள் வெளிவரும் போது அவற்றின் சக்தி சிறியதாக இருக்கப் போவதில்லை. ✱

# பாலை




விமர்சனம்

முல்லை நிலத்தில் இருக்கும் இரு சமூகத்துக்கும் இடையிலான போர்தான் இந்தப் படத்தின் கதையாகும். சாதாரண பாமர மக்களின் குடும்பக் கதையாகி இருப்பதால் அந்த மக்களின் வாழ்க்கை வரலாற்றைப் பேசுகிறது.

இந்தப் படக் காட்சிகள் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட சமூகத்தின் வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ப எடுக்கப்பட்டுள்ளன. அந்த மக்களின் இளமைப் பட்டாளத்துக்கு இடையே ஏற்படும் காதல் இனிமையானது. முல்லை சமூகத்தினர் காதலை ஏற்றுக்கொள்கின்றனர். காதல் திருமணத்துக்கு அங்கீகாரம் வழங்குகின்றனர். இப்படியாக நடைமுறை வாழ்க்கையில் எளிமையான விடயங்கள் மட்டுமல்ல அண்டை குழுக்களுடன் நேர்மையாகவும் இருக்க முயற்சிக்கிறார்கள் முல்லை சமூகமக்கள் . ஆனால் அதற்கு எதிராகச் செயற்பட நினைக் கிறது ஆயக்குடி சமூகம். சாதிய அடிமைத்தன சுருக்குக் கயிறுகள் இறுக்க குற்றுயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் படத்தில் வரும் காட்சிகள் பார்வையாளர் மனதில் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சுகிறது. இரு சமூகத்துக்கும் இடையிலான போரில் யானைகளை விரட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்ட 'கவண்கல்முறை' உட்பட அந்தக் காலத்தின் பல்வேறு போர் முறைகள் படத்தின் காட்சிகளில் வேரூன்றி இருக்கிறது.

போரில் வெற்றி பெற எவையெல்லாம் தேவை என்று முல்லைக் குடியைச் சேர்ந்த முதுவன் சுட்டிக் காட்டுவது அனைத்தும் சத்திய வார்த்தைகள், முல்லைக் கொடியாருக்கும் அடிமை இல்லை என்ற வார்த்தைகள் உட்பட ரோமப் பேரரசர்கள் போல் உடையணிந்து கொண்டு கட்ட பொம்மன்கள் போல வீரவசனம் முழங்கு கிறார்கள். ஔவைகள் திருமணம் செய்து கொள்ளாமல் கூன் முதுகுடன் அறநெறி கற்பிப்பவர்களாகவும் மட்டுமே அடையாளப்படுத்தப்பட்ட அவலம் தமிழகத்தில் நடந்துள்ளன.

வரலாற்றில் எத்தனை ஔவைகள் இருந்தார்கள். அவர்கள் எதைப்பற்றியெல்லாம் பாடினார்கள். அவர்களது கற்பனையும், தைரியமும் எப்படிப்பட்டவை என்பதைப் பற்றியெல்லாம் ஆர்வம் உள்ளவர்களுக்கும் கூட அதிகம் தெரிந்திருப்பதில்லை. இந்தச் சூழ் நிலையில் ஔவையின் வரிகள் மூலமாகப் பெண்ணின் மனக்குரலாக, அவளது மனதில் இயல்பாகத் தோன்றும் விருப்பத்தை வெளிப்படுத்துகிறது 'பாலை'.

அத்துடன் அன்றைய வாழ்வில் உறவுகளில் இருந்த வெளிப்படைத்தன்மை, எளிமை போன்றனவும் படத்தில் பிரதிபலிக்கின்றன. இந்தப்படத்தின் நடிகர், நடிகைகளின் நடிப்பு, ஆடைகள் என எதிலும் மிகையில்லை. மிகைகளையே பார்த்துப் பழகிப்போன எமது கண்களுக்கு இந்த மிகையில்லாத நிஜம் சற்று உறுத்தலாக இருக்கக் கூடும். ஆனால், ஒரு படைப்புக்கான நியாயத்துடன் இந்தப் படத்தை நோக்க வேண்டும். முதுவன் என்ற பெயர், உடலில் இயற்கைக் கூறுகளைப் பச்சை குத்திக் கொள்ளுதல், மலர் அலங்காரம், நடன அசைவுகள், ஆடை அணியும் முறை எனப் பலவற்றிலும் பண்டைத் தமிழ் பண்பாடும். பழங்குடிகளில் இருந்து இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் பண்பாடும் பிரதிபலிக்கின்றன. தீவிர ஆராய்ச்சிக்கு, கடுமையான உழைப்பு படைப்பின் மீதான பிடிப்பு போன்றவை இன்றி இது போன்றதொரு திரைப்படம் சாத்தியமில்லை.

தேசிய விருதுபெற்ற ஒளிப்பதிவாளர் அபிநந்தன் தனது பார்வையால் பார்வையாளர்களின் பார்வையை விரிய வைத்துள்ளார். வேத் பிரகாஷின் சுகவனத்தின் இசை நவீன ஆர்ப்பாட்டங்களை ஒதுக்கி வைத்து வசீகரிக்கிறது. மூன்று பாடல்களும் அருமை. இன்றைக்கு பெரிய தயாரிப்பு நிறுவனங்கள், பணம் படைத்த அரசியல்வாதிகள் எதை எதையோ தமிழர் பண்பாடு என்ற பெயரில் சினிமாச் சந்தையில் ஏகபோக வியாபாரம் செய்து வருகிறார்கள். இதனை முறியடித்துப் பாலை படத்தை வெளிக் கொண்டுவந்த முயற்சி பாராட்டத்தக்கது. பண்பாட்டு ஆராய்ச்சியாளர் தொ.பரமசிவன், சூழலியலாளர் பாமயன் உள்ளிட்டோரது எழுத்தினும், கற்பனை ஓவியங்களிலும் தமது பண்டை சமூகங்கள் பற்றி எமக்குக் கிடைத்த சித்திரங்களுக்கு காட்சி வடிவம் கொடுத்துள்ள முதல் முயற்சியான பாலை எதிர்பார்ப்பைத் தாண்டி சுயமான கலைத் தன்மையுடன் கம்பீரமாக நிற்கிறது. திரைப்படம் என்பது மற்ற எல்லாக் கலைப் படைப்புக்களையும் போலவே உணர்வு பூர்வ மான கலைப்படைப்புதான். அது சரியான அர்த்தத்துடன் எடுக்கப்படும்போது கையில் கிடைத்த கரிக்கட்டை, மண்ணைக் கொண்டு சுவர்களீல் ஓவியம் வரையப்பழக ஆரம்பித்த காலத்தில் இருந்து மக்களின் கலையாக வெளிப்பட்ட அனைத்துக் காலங் களைக் கடந்து மனிதனின் மனசையும், அவனது படைப்பாற்றலையும், கலைத் தாக்கத்தையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட வரிசையில் வைத்துப் பேச வேண்டிய தகுதியை 'பாலை' முதல் பார்வையிலே பெற்றுவிடுகிறது.

தங்கள் வாழ்க்கையையும் அதோடு இரண்டறக் கலந்திருக்கும் சூழலையும், பருவகாலத்தையும் இன்னும் பல பண்பாட்டுக் கூறுகளையும் நூலிழையாக வகுத்து நெடுங்காலத்துக்கு முன்பே பின்பற்றியது எமது பண்பாட்டு தமிழ் சமூகம்.

உலகின் வேறு சமூகங்களில் இதுபோன்ற அறிவியல் பூர்வமான மானிடவியல் பண்பாடு இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் எமது துரதிஷ்டம் அதை எல்லாம் பள்ளிப் பாடப் புத்தகங்களில் மனனம் செய்யும் பாடங்களாக மட்டும் குறுக்கி விட் டோம்.

எமது மூதாதைகள் அவர்களது அன்றைய பண்பாடு போன்றவை. எப்படி இருந்திருக்கும் என்பது பற்றி இவ்வளவு காலம் மனக் கற்பனையில் சினிமா எடுத்து வந்தனர். அந்த மனக்காட்சிகளை சினிமாத்தளம் பூசாமல் அசலாகக் காட்டியுள்ளது பாலை.

- குமார்.


# நாவலரே மீண்டும் வாரீர்

விரதத்துக்கு உண்ட வாழையிலையை வீட்டுக் கூரையினுள் மறைத்து வைத்தும், சம்பளம் என்னும் பஞ்சாட் சரத்துக்கு அடிமைப்பட்டும் யாழ்ப்பாணத்து மக்கள் போலிக் கிறிஸ்தவர்களாக வாழ்ந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் தோன்றிய விடிவெள்ளி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்.

1822 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பதினெட்டாம் திகதி யாழ்ப்பாணத்து நல்லூரில் கந்தப்பருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் கடைக் குட்டியாகத் தோன்றியவர் ஆவார். வடமொழி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நிறைந்த பாண்டித்தியம் படைத்தவர். பீற்றர் பார்சிவல் துரையின் மிகுந்த அன்புக்குரியவர், உறவினர்கள் அர சாங்கத்தில் உயர்பதவிகள் வகித்தவர்கள். எனினும் நாவலர் பெருமானின் கருத்து முழுவதும் சைவ சமயத்தையும் அதற்குக் கருவியாகிய தமிழையும் பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலுமே ஊன்றியிருந்தது. இஃது யாழ்ப்பாண மக்கள் யாவரும் செய்த அருந்தவமேயாகும். பார்சிவல் பாதிரியாரின் பாடசாலையில் தமிழ் ஆங்கில ஆசிரியராகவும் சிறந்த மொழி பெயர்ப்பாளராகவும் பார்சிவலுக்குப் பண்டிதராகவும் விளங்கிய நாவலர் பெருமான் இவை யாவற்றையும் பரித்தியாகம் செய்து விட்டுத் தமது வீட்டில் இராப் பாடசாலை வைத்து நடத்தினார். கற்று வல்ல ஆசிரியர்களையும், மதகுருமார்களையும் உருவாக்குவதற்காகப் பன்முகப்பட்ட ஆக்க வேலைகளை அவசர அவசரமாகச் செய்து முடிக்க வேண்டியவரானார்.

தமிழ் மொழியிலும் சைவ சமயத்திலுமுள்ள நூல்களைக் கற்றுத் தேறினார். செய்யுள் வடிவிலிருந்த புராண நூல்களை வசன வடிவில் ஆக்கினார். அச்சியந்திரங்களை உண்டாக்கிப் பல புதிய நூல்களை உருவாக்கிப் பலரும் பயனடைய வழி செய்தார்.

தமது இம்மைப் பயன்கள் யாவற்றையும் மறந்து, சைவ சமயத்தைப் பற்றிய விழிப்புணர்ச்சியை மக்கள் மத்தியில் உரு வாக்க வேண்டுமென்று எண்ணினார். அதற்காக யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலில் வெள்ளிக்கிழமை தோறும் சமயப் பிரசங்கம் செய்து வந்தார். பல கிராமங்களில் சைவப் பாடசாலைகளை உருவாக்கினார். இன்று நாம் காணும் வண்ணார் பண்ணை நாவலர் மகாவித்தியாலயம் நாவலர் பெருமானால் உருவாக்கப் பெற்ற சைவப்பிரகாச வித்தியாசாலையேயாம்.



நாவலர் பெருமான் வசன நடை கைவந்த வல்லாளன். அவரது பிரசங்கம் கேட்டார்ப் பிணிக்கும் தகையது. உறுதியும், கருத்துத் தெளிவும், மதுரமும் நிரம்பியது. எத்தனை மணித்தியாலங்களும் எவ்வித உடலசைவுமின்றிப் பேச வல்லவர். திருவாவடுதுறை ஆதீனத்தில் அவராற்றிய பதி, பசு, பாசம் உண்மை பற்றிய பிரசங்கமே நாவலர் என்னும் பட்டத்தை அவருக்குக் கொடுத்தது. திரிகரணசுத்தியும் தீர்க்க தரிசனமும் கொண்டு கல்விப் பணியாற்றிய சேர்.பொன். இராமநாதனைச் சட்ட சபைக்கு அனுப் பிய பெருமையும் நாவலர் பெருமானின் பிரசங்கத்துக்கே உண்டு. இன்று நாம் காணும் சைவப் பாடசாலைகள், சைவக் கோவில்கள், சைவ ஆசிரியர்கள், சைவசமய மக்கள், புராண படனம் என்பன யாவற்றுக்கும் வித்திட்ட மூலமூர்த்தி எங்கள் நாவலர் பெருமானே. கற்றுவல்ல ஆசிரியர்களை உரு வாக்க வேண்டுமென்பதைத் திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை ஓரளவு நிறைவு செய்து கொண்டு இருந்தது. அந்த நிறுவனத்தை மீண்டும் உருவாக்குவதற்கு நாவலரே மீண்டும் வாரீர் எனக் கதறியழைப்போம்.

நாவலர் பெருமானின் சரித்திரம் ஒரு ஒப்பற்ற சரித்திரம், உயர்வான சரித்திரம், தனிச்சரித்திரம். நாவலர் பெருமானின் தொண்டு ஈழத்துடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. இந்தியாவிலும் பரவியது. இதற்குச் சான்றாகச் சிதம்பரத்திலுள்ள சைவப் பிரகாசவித்தியாசாலையும், சைவப்பிரகாச அச்சு இயந்திர சாலையும் இன்றும் மிளிர்கின்றன.

தமிழ் இலக்கண, இலக்கியங்கள், தருக்க சாத்திரங்கள், பன்னிரு திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், புராண இதிகாசங்கள் என்னும் இவற்றையெல்லாம் கற்றுத்தேறி நமக்குச் சேவைசெய்த நாவலர் பெருமான் பிறக்காவிட்டால் நமது நிலையைச் சிந்தித்துப் பார்ப்போம். 1879 ஆம் ஆண்டு பதினொராம் மாதம் ஐந்தாம் திகதி நடராஜப் பெருமானின் குஞ்சித பாதத்தை அடைந்த பெருமானை என்றும் நன்றியுடன் வழிபடுவோம்.


பண்டிதை திருமதி
பொன். பாக்கியம் , சுழிபுரம்

# ஏராளம் தமிழ்ப் பாடல் எமக்கீந்த பெருவள்ளல்

# நாராயணதாசன் பொ.சிவகுருநாதன்

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

20



இசை என்பது இவ்வுலகத்தின் உயிரினங்களை மட்டுமல்ல இறைவனையும் மகிழ்விக்க வல்லது என்னும் நம்பிக்கை எம் அனைவருக்கும் உண்டு. எமது கலைகளின் தோற்றமும் வளர்ச்சியும் ஆலய வழிபாடுகளோடு பின்னிப் பிணைந்தவைகளாகவே காணப்படுகின்றன. இவற்றுள் இசையும் நடனமும் ஆலயங்களில் பெருவளர்ச்சி கண்டு அதன்பின்னர் அரங்க ஆற்றுகைக்கலைகளாக நல்வடிவம் பெற்று உயர்வு கண்டுள்ளன.

கடவுளையன்றி வேறெவரையும் புகழ்ந்து இசைபாட மறுத்த இசையாளர்கள் தமது எண்ணற்ற பஜனைப் பாடல்களினூடாகப் பக்தியிசையை மக்களிடத்தில் பரப்பி வந்துள்ளனர். இவ்வாறு செல்வாக்குப் பெற்ற பஜனைப் பாடல்களே பிற்காலத்தில் இசையரங்க உருப்படிகளாகவும் மாற்றம் கண்டன. நம் நாட்டின் செவ்விசை வளர்ச்சியிலும் பஜனைக் கலைஞர்களின் பங்களிப்பானது முக்கிய இடத்தைப் பெற்று நிற்கின்றது. இக்கலைஞர்களுள் முதுகலைஞராகவும் ஒவ்வொரு கணமும் கண்ணனையே நினைத்து, அவனடி தொழுது, அவன் புகழ் பாடிப் பலநூற்றுக் கணக்கான பாடல்களைப் புதிதாக உருவாக்கி வரும் பெருமகனாகவும் பல தசாப்தங்களாக இசைப்பணியாற்றி ஈழத்தின் தனித்துவமான இசைமரபுக்குப் பலம் சேர்த்து வருபவர் பக்திகீதமணி பொ.சிவகுருநாதன்.

அமரர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் மகனாக 04.07.1922 இல் வடமராட்சிப் பகுதியின் தும்பளையில் இவர் பிறந்தார். கணிதம், சோதிடம், வைத்தியம், சங்கீதம் போன்ற துறைகளில் புகழ் பெற்றிருந்த இக்கிராமத்தில் இவரது கலைவாழ்வு இனிதே தொடங்கியது. தும்பளை அமெரிக்கன் மிசன் பாடசாலை, புலோலி வேலாயுதபிள்ளை மத்திய மகாவித்தியாலயம், தட்டாதெரு மஹாவித்தியாலம் ஆகிய பள்ளிகளில் கல்வி கற்ற இவர் சிறு வயதிலிருந்தே கலைத் துறையில் அதீதமான ஈடுபாடு கொண்டவராக விளங்கி வந்தார்.

ஈழத்தின் இசைநாடகத் தளமாக இன்றுவரை விளங்கி வரும் நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் அக்காலத்தில் ஒவ்வொரு நாளும் இரவு முழுவதையும் இனிமையாகக் கழிக்கவல்ல இசைநாடகங்கள் நடைபெற்று வந்தமையால் அவற்றைத் தினமும் கேட்டும் பார்த்தும் தனது சிறு வயதைக் கழித்து வந்த இவர் தவத்திரு சங்கரதாசு சுவாமிகளின் நாடகப்பாடல்களை மனனம் செய்து பத்து வயதிலேயே இசை அரங்குகளில் சுருதி லயம் பிசகாமல் இனிமையாகப் பாடிவந்தார். தும்பளை மேற்கு பெரியதம்பிரான் கோவிலருகில் அமைக்கப்பட்டிருந்த கலாமண்டபத்தில் நடைபெற்ற அனைத்து இசை விழாக்களிலும் இசைக் கச்சேரிகளை ஆற்றுப்படுத்தித் தனது இசை அனுபவத்தை மேலும் வளர்த்துக்கொண்டதுடன் இசைநாடகங்களிலும் ஈடுபட்டு வந்தார்.

விவசாயம், வணிகம், தையல், நெசவு போன்ற துறைகளில் வல்லவராகவும் மும்மொழிகளிலும் திறன்கொண்ட ஒருவராகவும் திகழ்ந்த இவர் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் சாரதிப் பயிற்சியாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றி 1964இல் அப்பணியிலிருந்து விலகிக் கொண்டவர். ஆன்மிகத் துறையில் எல்லையற்ற ஈடுபாடு கொண்டிருந்த இவர் பொன்னாலை அருள்மிகு வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நடைபெற்று வந்த பஜனை நிகழ்வுகளில் தனது சொந்தப் பாடல்களை இனிதுறப் பாடி வந்தார்.

1947இல் இவ்வாலயத்தில் நடைபெற்ற பஜனை வழிபாட்டில் கோகுல மாதவனே, புவனம் புகழ் கோபியர் நாயகனே என்று தொடங்கும் தோடி இராகத்தில் அமைந்த இவரது முதலாவது பாடலானது அரங்கேற்றம் கண்டது. அங்கு கூடியிருந்த அனைவராலும் இவர் பாராட்டப்பட்டார். எனினும் இந்த நிகழ்வின் துணையிசையாளராக அழைக்கப்பட்டிருந்த முதுகலைஞர் ஆறுமுகத்தின் ஆசீர்வாதமும் பாராட்டும் இவரை மேலும் ஊக்கப்படுத்தியது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இவ்வாலயத்தில் நடைபெற்று வரும் பஜனைகளில் புதிது புதிதாக இவரால் அறிமுகம் செய்யப்பட்ட எண்ணற்ற கண்ணன் பாடல்கள் ஆலயத்துக்கு வரும் அடியவர்களின் மனங்களில் சங்கீத இரசனையையும் பக்தியையும் ஏற்படுத்தியது எனலாம்.

எளிமையும் பக்தியும் இனிமையும் கொண்ட இவரது பாடல்கள் லய நுட்பம் கொண்ட மத்திம கால சாகித்யங்கள் கொண்டமைந்தவையாகவும் இதிகாச, புராண வரலாறுகளை அழகுற உள்ளடக்கியவைகளாகவும் எல்லாவிதமான தாளங்களிலும் இராகங்களிலும் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள் இசை, நடன அரங்குகளில் தற்காலத்தில் ஈழத்துக் கலைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

நாராயணா உன்னை நான் மறந்தாலும், செந்தமிழ் தெய்வமே, வந்தேன் உன் சந்நிதி, புண்ணியம் செய்தோமே, ஸ்ரீ வைகுந்த பதே போன்ற இவரது பாடல்கள் தற்கால இசை அரங்குகளைச் சிறப்புச் செய்து வருகின்றன. நானூறுக்கும் அதிகமான பாடல்களைத் தமிழிசைக்கு அள்ளித் தந்திருக்கும் இவரது ஆக்கங்கள் பல பாகங்களாக நூலுருவாகவும் இறுவட்டுக்களாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஆலய பஜனை நிகழ்வுகளினூடாக தமிழிசைக்குப் பெரும் தொண்டாற்றி வரும் இவர் 1970ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு மார்கழி மாத இறுதியிலும் மாபெரும் பஜனை ஊர்வலத்தை மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றார். தன்னடக்கமும் அமைதியும் பல்துறை ஆற்றலும் தூய சிந்தனையும் கொண்ட இவர் ஈழத்தின் இயலிசைப் புலவர் வரிசையில் முதன்மையான ஒருவராக மதிக்கப்பட வேண்டியவர் என்றால் அது மிகையல்ல.

பாடல் என்பது கருத்தாழம் நிறைந்ததாகவும் சந்தம் விலகாத சொல்லடுக்குக் கொண்டதாகவும் இராகத்தின் தன்மைக்கேற்றவாறு இசைபடக் கூடியதாகவும் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறான முயற்சியின் போது மொழி, சமய அறிவோடும் நிதானத்தோடும் ஈடுபடுவது முக்கியமானதாகும். சலனமற்ற நற்சிந்தனையும் இறை தியானமும் மொழிப்பற்றும் இசையுணர்வும் ஒருங்கே சங்கமிக்கும் போது பாடல்கள் தாமாகவே ஊற்றெடுக்கும். எனினும் சில சந்தர்ப்பங்களில் கற்பனையானது இடமளிக்காத நிலையும் ஏற்படும். அவ்வேளைகளில் அமைதியாக இருப்பதே சிறந்ததாகும். நினைப்பில் வருகின்ற வசனங்களையெல்லாம் ஒழுகில்லாமல் எழுதிவிட்டுவதும் ஒரே சொற்களைத் திரும்பத் திரும்ப எழுதுவதும் பாடல் எழுதும் முறைக்கு ஏற்புடையதல்ல என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார். ✱

**வசாவிளான் தவமைந்தன்**

---

# ‘சாபவிமோசனம்’

## ஓர் இரசிக நிலைப்பட்ட பார்வை

குருதேவ் இரவீந்திரநாத் தாகூரால் எழுதப்பட்ட சாப விமோசனம் என்ற கதையை ஆசிம்பண்டு பட்டாச்சார்ஜீ, மற்றும் பிம்பாவதிதேவி ஆகியோர் இணைந்த குழுவினர் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் 28.11.2011 அன்று நாட்டிய நாடகமாக மேடையேற்றியிருந்தனர்.

வங்காள மொழிக் கவிஞரும் கீதாஞ்சலி எனும் கவிதை இலக்கியத்துக்கான நோபல் பரிசை வெற்றி கொண்டவருமான குருதேவ் இரவீந்திரநாத் தாகூரின் 150 ஆவது பிறந்த தினத்தை நினைவுகூர்ந்து இந்நாட்டிய நாடகம் அரங்கேற்றப்பட்டது. இதனை இந்தியத் துணைத் தூதரகத்தின் அனுசரணையுடன் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு மேடையேற்றும் ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தது.

கிழக்கு இந்திய மணிப்புரி நடனமும் வட இந்திய கதக் நடனமும் இணைந்ததான இந்த நிகழ்வு சாபவிமோசனம் என்ற மகுடத்துடன் அரங்கேறியது. நாட்டிய நாடகத்துக்குரியதான அடக்கங்களை இனங்காண்பது கடினமானதாக இருந்ததெனினும் சிறந்ததோர் ஆடல் நிகழ்ச்சியாக அதனை இரசிக்க முடிந்தது. வங்காள மொழியில் இசைக்கப்பட்ட பாடல்களும் அதற்கிசைய ஆடப்பட்ட கதக், மணிப்புரி ஆகிய நடன ஆடல்களும் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் சிறந்திருந்தன.

1861 இல் பிறந்தவரான இரவீந்திரநாத் தாகூர் 1913 இல் கீதாஞ்சலி எனும் கவிதை இலக்கியத்துக்கான நோபல் பரிசை வென்றார். இளமைக் காலத்திலேயே கவிதை எழுதுவதில் ஆர்வம் காட்டினார். வங்காள மொழியில் இவர் எழுதிய நாவல்கள், கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள் பிரபல்யம் மிக்கவை.

1934 இல் இலங்கைக்கும் வருகை தந்த தாகூர் ஹொறன எனும் இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பாலி எனும் பாடசாலைக்கு அடிக்கல் நட்டதாக அறியப்படுகின்றது.

1941 ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி 80 வயதில் அவர் காலமானார்.

இந்தியக் கலைஞர்கள் இரவீந்திரநாத தாகூரின் கதை ஒன்றையே ‘சாப விமோசனம்’ என்று பெயரிட்டு நாட்டிய நாடகமாக்கி மேடையேற்றியிருந்தனர்.

இந்திரனின் அரச சபையிலே இசைவாணனாக இருந்த சௌரசன், தேவலோக நர்த்தகியான ஊர்வசியின் நடனத்துக்கு வாத்தியம் வாசிக்கும் போது சூரிய உதயத்தைப் பார்க்கச் சென்றிருந்த அவனது காதலி மதுஸ்ரீயின் நினைவில் தாளத்தைத் தவறவிடுகிறான். அதனால் ஆத்திரமுற்ற இந்திரன் சௌரசனை குரூபியான அருணேஸ்வரர் என்ற அரசராகவும் அவனது காதலியான மதுஸ்ரீயை கமலிகா என்ற அழகிய அரசகுமாரியாகவும் பறக்கும்படி சாபமிடுகின்றான்.

சாபத்துக்குள்ளான அருணேஸ்வர் தனிமையும் துயரமும் வாட்ட அலைந்தான். ஒருநாள் கமலிகாவின் படம் ஒன்றைப் பார்த்து அவளே தனது காதலி எனத் துணிகிறான். அவளையே திருமணம் செய்ய விரும்புவதாகத் தூதனுப்புகிறான். அதனை ஏற்றுக் கொண்ட கமலிகாவுக்குத் திருமண நாளன்று தனது வீணையை அனுப்பி வைக்கிறான். அதனை ஏற்றுக் கொண்டு கமலிகா வீணைக்குத் தாலி கட்டுகிறாள். அருணேஸ்வர் தனது குரூர ரூபத்தைக் காட்ட விரும்பாது அரண்மனையில் இரவில் கமலிகாவைச் சந்திக்கிறான். இதனால் விரக்தியடைந்த அவள் அருணேஸ்வரின் முகத்தைப் பார்க்காவிட்டால் தான் அவரை விட்டு விலகப் போவதாகக் கோபித்துக் கூறுகிறாள். அதற்கு அவன் நர்த்தகியாக நீ விழாவொன்றில் வரும்போது உன்னைப் பார்க்கிறேன் என்று கூறுகிறான்.

அதன்படி விழாவின்போது அந்த நடன சபையிலே ஒரு குரூரமான உருவமாக அவனைப் பார்க்கிறாள். அதனால் அதிர்ச்சியடைந்தவள் அரண்மனையை விட்டு காட்டுக்குச் செல்லுகிறாள் எனினும் அந்தக் குரூர உருவமே தன்மீது ஆழ்ந்த காதல் கொண்டுள்ளதென்பதை உணர்ந்தவள் அந்த உருவத்துடன் மீண்டும் சேர விரும்புகிறாள். அதைத் தொடர்ந்து இந்திரனின் சாபம் விலகவும் குரூர உருவம் விலகி அழகனாக அருணேஸ்வர் தோற்றமடைகிறான் இருவரது துன்பங்களும் அகலுகின்றன. அவர்கள் காதலர்களாக இணைகின்றனர். இதுதான் கதை.

நடன நிகழ்ச்சி ஆரம்பிக்க முன்னதாக ஒரு மணித்தியாலம் வரை நடன இரசிகர்களின் ஆவலைத் தூண்டும் வகையிலும் ஆடையலங்காரங்களுடன் முன்னதாகவே வந்திருந்த நாட்டியக் கலைஞர்களை வருத்தும் வகையிலும் அனைவரையும் காக்க வைத்த செயலானது அரங்கேறிய நடனநிகழ்வின் சிறப்பால் மறக்கடிக்கப்பட்டது.

எனினும் அரங்க நிகழ்வின் சிறப்பான நோக்கம் ஒருசில ஒழுங்கமைப்பாளர்களால் இவ்வாறு குலைக்கப்படும் செயல் தவிர்க்கப்படுதல் நலமானதாகும்.

அருமையான ஆடல் நிகழ்வொன்றை நிகழ்த்திய இந்திய ஆடல் கலைஞர்களுக்கு இரசிகர்களின் பாராட்டுக்கள் என்றும் உரியதாகும். ✱

**■ முக்கண்ணன்**

## சொற்சிலம்பம் - போட்டி இல: 191

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | 16 |
| 17 | | ■ | 18 | | | 19 | |
| | ■ | 20 | | | ■ | 21 | |
| 22 | | | | ■ | 23 | | |

அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### இடமிருந்து வலம்

1.ஹாஸ்யக் கவிதைகள் படைப்பவர்
5. பிரி
7.குதிரை
8.மகளைத் திருமணம் செய்பவன்
9. ஒன்றுக்கு அதிகமானது
10. தீய்
11. கவலை
13. மென்மை அல்லாதது
14. கல்லுக்குப் பின் தோன்றியது
15.பொதி
17. சுயநலம் பிறப்பது இது பற்றிய எண்ணத்தில் தான்
18. பிடிபடாமல் போதல்
20. குல்லாய்
21. மார்பையும் முதுகையும் இணைக்கும் பகுதி
22. கேலி கிண்டல் தனத்தோடு செய்யப்படுவது
23. கொடுஞ்செயல் புரியும் தன்மை

### மேலிருந்து கீழ்

1. திடீரென சம்பவிப்பது
2. எரிந்தாலும் வரும்.காட்டிலும் வாழும்
3. தாமரை
4. பாராட்டி வழங்குவது
5. கடவுள்
6. மலை உச்சியில் இருப்பது
9. வீட்டின் கூரையை ஒட்டி அமைந்திருக்கும்
12. கூற்றுவன்
13. கணிதத்துடன் தொடர்புபட்டது
15. அரிசி இல்லாத நெற்பதர்
16. படிக்காத தன்மை
17. இரும்பு போன்றது
18. தவறு
19. அரிசி தீட்டும் போது இதுவும் வரும்.
20. சத்தத்தைக் குறிக்கும்

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 189 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) சுபாவம் (4) பதவி (7) வாடல் (8) சிறந்த (9) சல்லாபம் (11) திண் (12) திருமதி (13) கக்கம் (14) அவா (15) அருகல் (16) ஏந்த (17) ரகம் (18) சத்தம் (19) சில் (20) சரிதம்

### மேலிருந்து கீழ்

(1) சுவாசம் (2) பாடல் (3)வல்லாதிக்கம் (4) பற (5) தந்தி (6)விதண்டாவாதம் (8) சிம்மம் (10) பருகல் (13) கருகல் (14) அந்தம் (15) அரசி (16)ஏத்த (18) சரி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 189 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **திருமதி கி.சித்திரவேல்,**
சிமாட் ஹிட்ஸ்' ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

2 ஆம் பரிசு — **சு.ஜெயகுமார்,**
மட்டுவில் நாடு கிழக்கு, பூநகரி, கிளிநொச்சி.

3 ஆம் பரிசு — **ஞா.ஸ்ரீதேவி,**
புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

4 ஆம் பரிசு — **சாந்தன் கஜானனன்,**
யா/ புனித பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

5 ஆம் பரிசு — **ப.சாந்திநிகேதன்,**
இல.7, குகன் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

**திருமதி ம.பற்குணராசா,**
'மங்கள விலா' உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

**க.கணேசலிங்கம்,**
வத்திராயன் வடக்கு, தாளையடி.

**சிவராசா இராசமணி,**
முள்ளானை, இளவாலை.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம்போட்டி - 191**
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*(பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 14.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.191 இற்கான விடைகள் 18-12-2011 ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

# அன்னையின்....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வன்னி மண்ணுக் கென்றே எழுதப்பட்ட விதிவரிகள் தான் அவை. அதற்கேற்ப தான் அன்னம்மாளும் தொழில் புரிந்து ஊதியம் பெறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. யுத்தத்தின் அகோரத்தால் உறவிழந்து, ஆதரவிழந்து தவிக்கும் சிறார்களுக்குப் புகலிடம் அளித்து ஆதரித்து கல்வியறிவை ஊட்டி யுத்தத்தின் வலிமைக்கு மத்தியிலும் சிறார்களுக்கு உதவ வேண்டுமென்பதுதான் அன்னம்மாளின் உளக்கிடக்கை . ஈழமணித் தீவில் பிறந்த ஒரு தமிழிச்சிக்கு இவ்வாறானதொரு எண்ணம் தோன்றுவதில் எள்ளளவேனும் வியப்பில்லையே! அன்னம்மாளின் கருத்துகளுக்கேற்ப உதவி நல்கும் அன்னம்மாளின் கணவன் சுந்தரும் இதே கருத்துடையவன்தான். இதனால் தான் இவர்களின் குடும்ப வண்டி, அழகாக நகர்ந்தது....! அன்னம்மாளின் ஆசிரியத் தொழிலும் இடையூறின்றி நடந்தேறிக் கொண்டிருந்தது.

யுத்த அரக்கன் எப்போது ஆவேசப்படுவான்? எப்போது அடங்கி நிற்பான்? என்று யாராலும் கூறமுடியாது. அன்றைய வெள்ளிக்கிழமையும் அதிகாலை வரை கூட சுமுகமாயிருந்த வன்னி நிலை யுத்தத்தின் ஷெல் வீச்சுக்கு இலக்காகியது. தீடிரென்று புகைந்த யுத்தம் பெரும் தீப்பிழம்பாய் பரவத் தொடங்கியது. எங்கும் நரமாமிசக் குவியல்கள்.....! நாலாபக்கங்களிலும் பெருக்கெடுத்தோடும் இரத்த ஆறு. எங்கும் கதறல்கள் .... எங்கும் மனித அவயங்கள்....! அந்த அகோரத்தாக்கு தல்களின்று தப்பித்துக் கொள்வதற்காக அன்னம்மாள் உட்பட பல மனிதர்கள் பங்கர் ஒன்றினுள் புகலிடம் கோரினார்கள்.

கடவுளே! இந்த உயிர்களை நீ தான் எப்படியாவது காப்பாத்திவேணும்..... அன்னம்மாளின் உள்ளமும் பொதுநல நோக்கில் மானசீகமாகவே தன் பிரார்த்தனையை நிறைவேற்றிக் கொண்டது. ஆறு மணி நேரம் கழித்து ஓய்ந்த யுத்தத்தை கண்டு சந்தோஷப்பட்ட மக்கள் தங்கள் இருப்பிடம் நோக்கி விரைந்தனர். அன்னம்மாளும் தன் நெசவாளன் கணவன் சுந்தரத்தைக் காணும் பொருட்டு மனை நோக்கி விரைந்தாள். போகும் வழியிலே அன்னம்மாளின் மனதைக் கலங்க வைத்தது ஒரு காட்சி . மூன்று வயது கூட நிரம்பியிராத பச்சிளம் பெண் குழந்தையொன்று தன்னுடைய பெற்றோர் இறந்தமையைக் கூட அறியாமல் ''அம்மா பசிக்குது எழும்புங்கோ; எனக்கு பயமாயிருக்குது'' என்று கதறியழுதது. பெண்மைக்கேயுரிய காருண்யப் பண்பு மேலோங்க ஒரு தமிழிச்சிக்கு இருக்கக்கூடிய தாயன்பு வெளிப்பட ஒடிச்சென்று அம்மகவைக் கட்டிக் கொண்டு அழுதாள். ''அழாதடி செல்லம் உனக்கு இனி அம்மா நானிருக்கிறேன். இனி நான் தான் உனக்கு எல்லாம்'' என்று குழந்தையின் கண்ணீரைக் கத்தரித்து முத்தமிட்டாள்.

தன்மனை காண ஒடியவள் அங்கே கண்ட காட்சி அவளை நிலைகுலைய வைத்தது. ஆம் தன் கணவன் நெசவுத் தறியின் மேலே உயிரற்ற உடம்பினராய் குருதியின் மேற் கிடந்த காட்சி அவளை ஒரு கணம் கொன்றுவிட்டது. ஐயோ.... கடவுளே கட்டின தாலிய ஐஞ்சு மாசம் கூட நிலைக்க வைக்கவில்லையே .. இனி நான் என்ன செய்வேன்.... என்று ஒலமிட்டாள். தனிய இருந்தாலாவது நஞ்சைக் குடிச்சிட்டுச் செத்துப் போகலாம். ஆனால் இப்ப ஒரு குழந்தையை வேறு பொறுப்பெடுத்துட்டனே.

கடவுளே உனக்கு கண்ணேயில்லையா என கதறினாள். வன்னியின் அன்றைய சூழலிலே தான் ஒரு பெண்குழந்தையுடன் வாழ்வது பொருத்தமற்றது. வன்னியில் இருந்தால் சங்கீதா அன்னம்மாளால் வளர்க்கப்பட்டவர் எனத் தெரிந்துவிடும் தொழில் ரீதியான இடமாற்றம் கோரி சங்கீதாவுடன் கொழும்பை வந்தடைந்தாள் சங்கீதாவும் பல்கலைக்கழக தேர்வுக்கு தெரிவாகித் தனது பட்டதாரிப் படிப்பையும் நிறைவு செய்து விட்டபோது

மகள் நான் எப்படியாவது ஒரு விடுதி கட்டி அதில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுசுகளுக்கு ஆதரவு கொடுக்க வேணும் என்ற அன்னம்மாளின் கூற்றைக் கேட்டுக் கேட்டு அன்னையின் ஆவலை எப்படியும் பூர்த்தி செய்தாக வேண்டும் என எண்ணினாள். உத்தியோக வாய்ப்பிற்காகக் காத்திருந்தாள். சங்கீதாவின் பல்கலைக்கழக உயர் திறமைச் சித்தியின் பயனாய் புலமைப் பரிசில் மூலம் வெளிநாடு செல்லத் தயாரானாள். ஐயோ தனியே வாழ்வதா? அம்மாவை விட்டுட்டு எப்படி வாழப் போறன்? என்று தான் தடுமாறும் போதெல்லாம் தாயின் அநாதை விடுதியைத் ஸ்தாபிக்கும் எண்ணம் மனதில் முகிழ்த்தெழும். வெளிநாட்டுப் பயணத்துக்கும் தயாரனாள்.

வெளிநாடு சென்றவள் அங்கு வாழும் தமிழர் தமிழின் மேல் கொண்டுள்ள பற்றும் கலைகளின் பால் கொண்டுள்ள விருப்பும் கண்டு பெருமைப் பட்டாள். சங்கீதாவின் கலைகளுக்கும் அறிமுகம் கிடைத்தது. ஐந்து வருடங்கள் தானும் கற்று பிறருக்கும் கற்பித்து உழைத்ததன் பயனால் கொழும்பு நகரிலே அநாதை விடுதி அன்னம்மாளின் அயராத ஆசையாலும் சங்கீதாவின் முயற்சியாலும் நிதர்சனம் பெற்றது.

தான் எடுத்துக்கொண்ட பணியினை முழுதாக முடிக்காமல் தாயகம் திரும்பக்கூடாது என்பதற்காக விடுதியின் திறப்பு விழாவிலும் கலந்து கொள்ளாமல் இத்தனை வருடங்கள் கழித்து இன்று தாயின் சுகவீனம் அறிந்து புறப்படுவதாக அறிவித்திருந்தாள். ஓரிரு வருடத் தாகமல்ல. ஐந்து ஆண்டுத் தாகம்...! தன் மகளின் தரிசனம் காணத் தாயுள்ளம் தவிக்கின்றது.

வாயிற் கதவிலிருந்து அம்மா என்று கதறிக் கொண்டு சங்கீதா ஒடி வந்து தன் தாயை இறுக அணைத்தாள். அம்மா என்று விம்மிக்கொண்டிருந்த அவளால் எதுவும் பேச முடியவில்லை. மகள் இந்தக் குழந்தைகளை இது வரைக்கும் நான் பார்த்தன் ... இனி எனக்குப் பிறகு என்ற சேவையெல்லாத்தையும் நீ தான் மகள் செய்ய வேணும். எனக் கூறிய அன்னம்மாளின் இதழ்கள் தானே மூடிக் கொண்டன.. மகளைக் கண்ட விழிகளும் இறுக மூடிக் கொண்டன. ஓவெனக் கதறிய சங்கீதா தீடிரென எழுந்து சுந்தர பவனத்தின் பிஞ்சுகள் பத்தையும் இறுக அணைத்தாள். அந்த இதமான அரவணைப்பில் அன்னம்மாளின் அதே சுகத்தை அத்தனை பிஞ்சுகளும் உணர்ந்தன. சங்கீதாவின் பிடியிலிருந்த அத்தனை பிஞ்சுகளும் கண்ணீர் மல்கி அணைத்தன. ✱

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 46

## நீரிழிவு நோய் ஏன் முக்கியத்துவம் பெறுகிறது?

புள்ளி விவரங்களின்படி நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கையானது மிக வேகமாக அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இவ் அதிகரிப்பானது அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைப் பொருளாதார ரீதியாகவும் பாதிப்படையச் செய்கின்றது. 26 மில்லியன் நீரிழிவு நோயாளர்கள் தற்போது அமெரிக்காவில் இருக்கிறார்கள். இது அந்த நாட்டின் மொத்த சனத்தொகையின் 8.3 வீதம் ஆகவும் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட தொகையானவர்கள் நீரிழிவு நோயின் குணங்குறிகள் இன்றித் தமக்கு நீரிழிவுநோய் இருப்பதென்று தெரியாமல் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். மேலும் நீரிழிவு நோயானது உடலின் எல்லாப் பகுதிகளையும் பாதிப்படையச் செய்வதால் (உதாரணமாக பாரிச வாதம், இருதயநோய், சிறுநீரக வருத்தம், கண்பார்வை அற்றுப்போதல்) இது பெரும்பாலானவர்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதிப்பது மட்டுமன்றி அவர்களின் இறப்புக்கும் காரணமாக அமைகிறது.

**நீரிழிவு நோய்க்கு அதிகம் உள்ளாகுபவர்கள் யார்?**

பின்வரும் காரணிகள் உடைய வர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகின்றமைக்கான சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகின்றது. அவையாவன:

குளுக்கோசின் அளவு இரத்தத்தில் சற்று அதிகமாக இருத்தல், 45 வயதுக்கு மேற்பட்டவர்கள், நெருங்கிய குடும்ப உற வினர்களுக்கு நீரிழிவு இருத்தல், உடல்நிறை அதிகமாக இருத்தல், உடற்பயிற்சி செய்யாமை, கர்ப்பகாலத்தில் நீரிழிவு நோய்வந்திருத்தல்.

**நீரிழிவு நோய்க்கு முந்திய நிலை (Pre diabetes)**

இது நீரிழிவு நோய்க்கு முந்திய நிலையாக இருந்த போதும் இந்த நிலையானது உடம்பின் உறுப்புக்களைக் கருதத்தக்க அளவுக்குப் பாதிப்படையச் செய்கிறது.

உதாரணமாக நீரிழிவு நோய்க்கு முந்திய நிலை உடைய ஒருவருக்கு இருதய வருத்தம் (Heart attack) வருவதற்கான சந்தர்ப்பம் சுகதேகியுடன் ஒப்பிடும்போது ஒன்றரை மடங்கு அதிகமாகும். எனவே இந்த நிலையைப் புறக்கணிக்காது உரிய முறைகளைக் கையாண்டு சீனியின் அளவைக் கட்டுப்படுத்தவேண்டும்.

இவ்வாறு கட்டுப்படுத்துவதன் மூலம் நீரிழிவு நோய் வருவதை 58 வீதத்தால் தடைசெய்யவோ அல்லது பிற்போடவோ முடியும்.

**எவ்வாறு நீரிழிவுக்கு முந் திய நிலையை உறுதிப் படுத்துவது?**

இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவை அளப்பதன் மூலம் இதை உறுதி செய்ய முடியும்.

Fasting Plasma glucose < 100 mg/ dl - Normal
Fasting Plasma glucose > 100 - 126mg/dl - prediabetes.
Fasting Plasma glucose > 126 mg/dl - Diabetes mellitus.

**நீரிழிவு நோய் வராது தடுப்பது or பிற்போடுவது எவ்வாறு?**

நீரிழிவு நோய் இல்லாமல் ஆனால் நீரிழிவு நோய்க்கான காரணிகளைக் கொண்டவர்கள் நீரிழிவுக்கு முந்திய நிலை வராமலும் அதேபோல நீரிழிவுக்கு முந்திய நிலையை உடையவர்கள் நீரிழிவு நோய் வராமல் தடுப்பதற்கும் அல்லது பிற்போடுவதற்கும் பின்வரும் முறைகளைக் கையாளவேண்டும்.

* உடற்பருமன் கூடியவர்கள் நிறையைக் குறைத்தல் வேண்டும்.
* உணவுப் பழக்கத்தில் மாற்றங்களைக் கொண்டுவருதல்.
* ஒழுங்காக உடற்பயிற்சியில் ஈடுபடுதல்.

**உடற்பயிற்சி:** பல முறைகளில் உடற்பயிற்சிகளைச் செய்ய முடியும். அவற்றுள் சில வேகமாக நடத்தல், ஓடுதல், விளையாடுதல், நீந்துதல், யோகா செய்தல், பாரம் தூக்குதல் போன்ற சிலவாகும். மேலும் ஒரு நாளைக்கு அண்ணளவாக 30 நிமிடப்படி ஆகக்குறைந்தது ஒரு வாரத்தில் ஐந்து நாள்களாவது செய்ய வேண்டும்.

**உணவுப் பழக்கம்:** உணவுப் பழக்கத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் சுக தேகியாக நீண்ட நாள்கள் நோய் இன்றி வாழ முடியும். உதாரணமாக பின்வரும் உணவுகளை இயன்றவரை குறைப்பது நல் லது.

* சீனியை அதிகம் கொண்ட உணவுகள்- இனிப்புப் பண்டங்கள்
* உடம்புக்குக் கேடான கொழுப்பைக் கொண்ட உணவுகள்- பட்டர், ஆடை நீக்காத பால், மாட்டிறைச்சி, தேங்காய் எண்ணை
* அதிக உப்புக்கொண்ட உணவுகள்

**நீங்கள் செய்ய வேண்டி யது என்ன?**

உங்கள் வயது 45 இக்கு மேல் அல்லது உங்களுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான காரணி/ காரணிகள் இருப்பின் உடனடியாக உங்களுடைய குளுக்கோசின் அளவை இரத்தத்தில் சோதியுங்கள் குளுக்கோசின் அளவு சாதாரண அளவு எனின் மீண்டும் நீங்கள் இதே பரிசோதனையை 3 வருடத்தால் திருப்பிச் செய்ய வேண்டும்.

உங்களுடைய குளுக்கோசின் அளவு நீரிழிவுக்கு முந்திய நிலையில் இருந்தால் நீங்கள் இப்பரிசோதனையை மீண்டும் 1-2 வருடத்தில் திருப்பிச் செய்ய வேண்டும். அதேநேரம் நீங்கள் எல்லோரும் நற்உணவுப் பழக்கத்தையும், ஒழுங்கான உடற்பயிற்சியையும் தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் நீரிழிவு நோயில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

Dr ந.சுகந்தன் MBBS. MD ,பொது மருத்துவம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

*உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

## நல்ல உடல் நிறையைப் பேணி நாளைய உலகின் நாயகர்களாவோம்

இன்றைய நவநாகரிக உலகின் மின்சார, இயந்திர, இலத்திரனியல் பாவனையும் தொலைக்காட்சி, கணினி போன்ற பல்லூடகப் பாவனையும் நம்மை ஓர் இடத்தில் தொடர்ந்து இருக்கச் செய்துவிட்டது. இதனால் எமது உடலுக்குப் போதிய அப்பியாசம் கிடைப் பதில்லை. அத்துடன் நாம் இலகுவாகக் கிடைக்கும் சுவையூட்டிய fast food உணவுகளையும் உள்ளெடுப்பதால் முன்னெப்போதும் இல்லாதளவில் உடல் பருமன் மனித சமூகத்தை வாட்டி வதைக்கின்றது. இதனால் நாம் நீரிழிவு, உயர் குருதியமுக்கம், இதயநோய்கள், புற்று நோய்கள் போன்ற பலவற்றுக்கு ஆளாகும் நிலை ஏற்படுகின்றது.

அன்றைய நமது முன்னோர்கள் மனித உடல் உழைப்பிலேயே தமது சீவியத்தை நடத்தினார்கள்.

கடின உழைப்பின் மூலம் வியர்வை சிந்தி தமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அதனால் அவர்கள் உண்ணும் உண வுக்கேற்ப உடல் உழைப்பு இருந்தது. அதனால் அவர்கள் உடல் பருமன் அடையாமல் இன்றும் ஆரோக்கியமாக வாழ்கிறார்கள். அன்றாட வேலைகளும் கடமைகளும்கூட உடல் அப்பியாசத்தைக் கொடுத்தன. உதாரணமாகக் கிணற்றில் அள்ளிக் குளித்தல், தோட்டத் துக்கு நீரி றைத்தல், இடித்தல், குற்றுதல், முற்றம் கூட்டுதல் போன்றவை உடல் அப்பியாசத்தைக் கொடுத்தன. அதனால் அவர்கள் இன்றும் வீறாப்பாக நோய் நொடியில்லாமல் வாழ் கிறார்கள். இன்றைய உலகில் நாமோ எமது நாற் பது வயதில் கிளினிக் கொப்பியு டன் அலைகின்றோம்.

இன்றைய உலகில் நாம் எமது உடல் நிறையைப் பேணு வது மிக அவசியமாகிறது.

* உணவு என்பது எப்போதும் அளவாக இருக்கப் பழகிக் கொள்வோம்.
* கடலை, கௌபி போன்ற தானியங்கள் உண்பதை ஊக்கிவிப்போம்.
* மரக்கறி, கீரை வகைகள், இலை வகைகளைக் கூடுதலாக உண்போம்.
* தாகத்துக்கு நிறைய நீரை அருந்துவோம்.
* பழங்களைக் கூடுதலாக எடுப்போம்.
* நாளாந்த வேலைகளில் கூடுதலாக ஈடுபடுவோம்.
* எமது வீட்டு வேலைகளை நாமே செய்யப் பழகிக் கொள்வோம்.
* அண்மையில் உள்ள இடங்களுக்கு நடந்தே செல்வோம்.
* நமது பிள்ளைகளை நன்றாக விளையாட அனுமதிப்போம்.
* காலையும் மாலையும் காலாறக் கொஞ்ச நேரம் நடப்போம்.
* இனிப்பு வகைகள், பிஸ்கட் வகை கள், சொக்லேட் வகைகளை நமது பிள்ளைகளுக்கு வழங்குவதைக் குறைப்போம்.
* எண்ணெய்யில் பொரித்த உணவுகள், கொழுப்புணவுகள் போன்றவற்றை இயன்றளவு குறைப்போம்.
* நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்ப்பது, கணினி முன் இருப்பதைக் கூடுமானவரை தவிர்ப்போம்.

உங்களுக்குரிய உடல் நிறையை அறிய இதோ சுலபமான வழி. உங்கள் உயரத்தை சென்ரி மீற்றரில் அளவுங் கள். அதிலிருந்து 100ஐக் கழியுங்கள்.

இதோ உங்களுக்குரிய சரியான நிறை கிலோ கிராமில்.

உதாரணமாக உங்கள் உயரம் 165 சென்ரிமீற்றர் ஆனால் உங் கள் நிறை 65 கிலோ கிராம் ஆக இருந்தால் சிறந்தது. எனவே உயரத்துக்கு ஏற்ற உடல் நிறையைப் பேணி நலமாக வாழ்வோம்.

**செ.தவச்செல்வம்,**
தாதிய உத்தியோகத்தர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

## Niacin

* இது நீரில் கரையுந்தன்மையுள்ள விற்றமின் ஆகும்.
* தவிடு நீக்கப்படாத (தீட்டப்படாத) தானியங்களில் இவை அதிகமாகக் காணப்படுகின்றன.
* அத்தியாவசியமான அமினோ அமிலத்தில் இருந்து (Tryptophan) இவ்விற்றமின் நமது உடலில் தொகுக்கப்படுகின்றது.
* உடலில் நடைபெறும் அனுசேபத் தொழிற்பாடுகளுக்கும் இவை இன்றியமையாதவை.
* சராசரியாக ஒரு நாளுக்கு 40mg விற்றமின் உட் கொள்ள வேண்டும்.
* மேற்கூறிய அளவுக்குக் குறைவாக அல்லது உணவுடன் எடுக்கப் படாவிடத்து இவ்விற்றமின் குறைபாடு ஏற்பட்டு Pallegra நோயை ஏற்றபடுத்தும்.
* புரதக் குறைபாடு உள்ளவர்களிலும் (malnutrition) மது அருந்துபவர்களிலும் மற்றும் காசநோய்க்கான சிகிச்சை பெறுபவர்களிலும் இந்நோய் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம்.
* தவிடு நீக்கிய தானியங்களை, மரவள்ளிக்கிழங்கு அல்லது சோளத்தைப் பிரதான மாக உட்கொள்பவர்களுக்கு இவ்விற்றமின் குறைபாடு ஏற்பட வாய்ப் புக்கள் அதிகம்
* கோதுமை, குத்தரிசி போன்ற தானியங்களையும், பருப்பு வகைகளையும் இறைச்சி, மீன் போன்றவற்றையும் உணவில் சேர்ப்பதன் மூலம் இவ்விற்றமின் குறைபாட்டை நீக்கலாம். தோல் சம்பந்தமான நோய்கள் (Dermatitis), வயிற்றோட்டம் (Diarrhoea) , மன உளைச்சல் (Depression), பசியின்மை போன்றன இவ் விற்ற மின் குறைபாட்டால் ஏற்படலாம்.
* குருதியில் உள்ள கொலஸ்ரோலின் அளவைக் குறைப்பதற்கு இவ் விற்றமின் பயன்படுத்தப்படுகிறது.
* இவ்விற்றமினை அளவுக்கதிகமாக உட்கொள்ளுமிடத்து (ஒரு நாளுக்கு 500mg இக்கு மேலதிகமாக) ஈரலில் பாதிப்பு ஏற்படலாம்.

**B.பிறகலதன்,**
மருத்துவபீட மாணவன்.

# HP பண்டிகைக் கால சலுகை அறிமுகம்

உலகின் முன்னணி தொழினுட்ப நிறுவனமும், புத்தமைவு தொழினுட்பங்களின் முனைவர்களுமான ஹெல்வர்ட் பக்கார்ட் பேர்சனல் சிஸ்டம்ஸ் குரூப் (HP PSG) நோட்புக் வாடிக்கையாளர்களுக்கென HP அட்வான்டேஜ் பிளஸ்(HP Advantage Plus) சலுகையினை அறிமுகப்படுத்துகின்றது.

இலங்கை HP PSG, கடந்த பல வருடங்களாக தமது வாடிக்கையாளர்களுக்கு புத்தமைவு சேவைகளை வழங்குவதில் முன்னணியில் திகழ்கின்றது. இலங்கையில் தகவல் தொழினுட்பத்தின் வளர்ச்சி அதிகரித்துவரும் இந்த வேளையில், இலங்கை சந்தையில் நோட்புக்களை வழங்குவதில் HP PSG முதன்மை நிறுவனமாக விளங்குகின்றது.

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏக இ-கிளப் மற்றும் துரித திருத்தல் நிலையங்கள் ஆகியவை மூலமாக ஏக வாடிக்கையாளர்கள் மிகுந்த அனுகூலங்களை பெறுகின்றனர். இந்த காலப்பகுதியில் இலங்கை HP PSG தனித்துவமிக்க ஊக்குவிப்பு சலுகையாக நோட்புக் ஒன்றைக் கொள்வனவு செய்யும் இறுதிப் பயனாளிகளுக்கு இலவச காப்புறுதித் திட்டத்தினை அறிமுகப்படுத்துகின்றது.

DV4,DV6,G4,G6 , 4430 , CQ630 அல்லது Probook 4530s HP நோட்புக் மாதிரிகளில் ஒன்றை அங்கீகாரம் பெற்ற ஏக வர்த்தகப் பங்காளர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யும் யாதொரு வாடிக்கையாளர்களும் கலவரம், வேலைநிறுத்தம் மற்றும் பயங்கரவாதம் தவிர்ந்த ஏனைய இடர்களிலிருந்து நோட்புக்கை பேணும் இந்த இலவச இடர் காப்புறுதியை பெற உரித்துடையவர்களாகின்றனர்.

வாடிக்கையாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட பங்காளரிடமிருந்து நோட்புக் ஒன்றைக் கொள்வனவு செய்த பின்னர், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் இற்கு அழைப்பினை மேற்கொள்வதன் மூலம் இலகுவாக இந்தக் காப்புறுதியினைப் பெற்றுக்கொள்ளலாம். வாடிக்கையாளர்கள் விரும்பினால், தாம் கொள்வனவு செய்த நோட்புக்கின் சந்தைப் பெறுமதிக்கேற்ப காப்புறுதிப் பெறுமானத்தை அதிகரித்துக் கொள்ளவும் முடியும். இதுகுறித்த மேலதிக விபரங்களை வாடிக்கையாளர்கள் பெறவிரும்பினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகப் பங்காளர்களை அணுகலாம்.

இலங்கை HP PSG உள்நாட்டில் விற்பனை செய்யப்படும் ஏக அசல் நோட்புக்களிற்கு மேலதிக பெறுமதியை தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. கொள்வனவாளர்கள் புதிய அட்வான்டேஜ் பிளஸ் ஊக்குவிப்பினை பெற்று இந்தப் பண்டிகைக் காலத்தை மனநிம்மதியுடன் கொண்டாடலாம்.

# முறிகண்டியில் இலங்கை வங்கிக் கிளை

வலி.வடக்கு, செப்.4




கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள திருமுறிகண்டியில் இலங்கை வங்கியின் கிளையொன்று கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கி தனது நடவடிக்கைகளை வன்னி மாவட்டத்தில் அதிகரித்துள்ள நிலையில் இக் கிளையை வாடிக்கையாளர்கள் நன்மை கருதி திறந்துள்ளது.

வங்கியின் கிளையை வன்னிப் பிராந்திய இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பிறேம்குமார் மற்றும் கிளிநொச்சி மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மென்டிஸ் ஆகியோர் திறந்து வைத்தனர்.

வாடிக்கையாளர்களின் கணக்கை வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் சுமணஸ்ரீ ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் விருந்தினர்களுடன் கிளிநொச்சி இலங்கை வங்கியின் முகாமையாளர் எஸ்.சிவகுமார், திருமுறிகண்டி இலங்கை வங்கி முகாமையாளர் யோ.கணாதரன் உட்பட பலர் கலந்துகொண்டார்கள். (த-86)



செலான் வங்கியின் சங்கானை கிளையின் இரண்டாவது ஆண்டு நிறைவு, கிளை முகாமையாளர் இ.சிறிரமணா தலைமையில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது முகாமையாளர் கேக் வெட்டுகின்றார். அருகில் வங்கி ஊழியர்களும் உள்ளனர். (த-10)



மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக்கிளை முகாமையாளரினால் வடமாகாண ஆளுநருக்கு ஆயிரம் ரூபா காசு நினைவுச் சின்னமாக கையளிக்கப்படுகிறது. (த-14)

# நீரிழிவைக் கட்டுப்படுத்தும் குளுக்கோஸ் கெயார் தேயிலை

நூறு வீத இயற்கை மூலிகைகளால் ஆன குளுக்கோஸ் கெயார் தேயிலை நீரிழிவு நோய்க்கான சிறந்த பானமாக கொள்ளப்படுவதுடன் சிறந்த வரப்பிரசாதமாகவும் திகழ்கிறது.ஜிம்நிலா சில்வெஸ்ரி மற்றும் கிறீன்டீ ஆகிய பதார்த்தங்களை உள்ளடக்கியுள்ளது. அந்த வகையில் குளுக்கோஸ் கெயார் தேயிலையானது. இது குருதியில் உள்ள குளுக்கோஸ் மட்டத்தை கட்டுப்படுத்த உதவுவதோடு உணவு சமிபாட்டுத்தொகுதியில் குளுக்கோஸின் செறிவையும் கட்டுப்படுத்துகிறது.

மேலும் சதையக் கலங்களில் இன்சுலின் சுரக்கப்பட்டு நீரிழிவுக்கு நிவாரணம் அளிக்கிறது. குளுக்கோஸ் கெயார் மூலிகை தேயிலையினை 12 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அருந்தலாம். நீரிழிவு வகை I அல்லது II ஐச் சார்ந்த நோயாளர்கள் மற்றும் உடற்பருமனில் கவனம் செலுத்துபவர்கள் உடல் ஆரோக்கியத்தில் ஆர்வம் கொண்டவர்கள் அனைவரும் இதனைப் பயன்படுத்தலாம்.

ஏனைய மருந்துகள் பாவிக்கும் அதேவேளையில் இதனைப் பாவிக்கலாம். எவ்வித பிற பக்கவிளைவும் ஏற்படாது. அதாவது ஏனைய மருந்துகள் பாவிப்பதாயின் ஒரு மணித்தியாலயம் கழித்த பின்னரே குளுக்கோஸ் கெயார் மூலிகை தேயிலை



யினை பாவிக்க வேண்டும். தேவைக்கேற்ப இதனை நாள் தோறும் பாவிக்கலாம்.

ஒரு நாளைக்கு மூன்று கோப்பைகள் வீதம் அருந்துவதன் மூலம் சிறந்த பெறுபேற்றினை உணர முடியும். வாயுத் தொல்லை உள்ள நோயாளர்கள் (Gastritis Patients) உணவு உட்கொண்ட பின்னர் இதனை அருந்துவது சிறந்தது.

இதனை தொடர்ச்சியாகப் பாவிப்பதன் மூலம் 1 முதல் 4 வரை காலப்பகுதிக்குள் சிறந்த பெறுபேற்றிறை காணமுடியும். குளுக்கோஸ் கெயார் தேயிலையினை பாவிக்க ஆரம்பித்த முதல் மாதத்திலேயே சிறந்த பெறுபேற்றினைக் காணலாம். குளுக்கோஸ் கெயார் தேயிலை ஒரு கோப்பை தயாரிக்கும் போது அந்த தேயிலை பக்கற்றை கொதி நீரில் கட்டாயம் 5 நிமிடங்கள் அமிழ்த்தி வைக்க வேண்டும். ஒரு செஸே பக்கற்றை 3 முறை பயன்படுத்தலாம். உணவு உட்கொண்ட பின்னர் குளுக்கோஸ் கெயார் தேநீரை அருந்துவது சிறந்தது.விஞ்ஞான ரீதியிலும் மருத்துவ ரீதியிலும் இதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# அறிமுகக் கருத்தரங்கு

AAT பயில விரும்பும் மாணவர்களுக்கான ஓர் இலவச அறிமுகக் கருத்தரங்கு யாழ். ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கட்டடத்தின் 2 ஆவது மாடியில் இயங்கும் Spectra Skills என்னும் நிறுவனத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெற உள்ளது.

AAT கற்கை நெறியை பயிலுவதற்கு ஆகக்குறைந்த தகைமையான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்ற அனைவரும் இக் கருத்தரங்கில் பங்குபற்றி பயனடையலாம். (த)

# வாகனங்களின் கண்காட்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை வங்கி தனது சேவையை விஸ்தரிக்கும் நடவடிக்கைகள் பலவற்றை முன்னெடுத்துள்ளது. இந்த வகையில் அண்மையில் கிளிநொச்சி நகரப் பகுதியில் டிமோ நிறுவனத்துடன் இணைந்து வாகனங்களின் கண்காட்சியையொன்றை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தியது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட இலங்கை வங்கித் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க வாகனங்களின் கண்காட்சியை நாடா வெட்டித் திறந்து வைத்தார். (த-86)

# ஆர்ப்பிக்கோவின் நத்தார் இலட்சாதிபதிகள்

கடந்த ஆண்டு நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு அதிக பெறுமதியான அன்பளிப்புகளை தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கியிருந்த இலங்கையின் மிகப் பெரிய சுப்பர் மார்க்கட் தொடரான ஆர்பிகோ சுப்பர் சென்டரின் மூலம் இம்முறை நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு இலட்சாதிபதிகள் பலரை உருவாக்கிடும் Arpico Christmas Millionaire திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

2011 நவம்பர் 15 ஆம் திகதி முதல் 2012 ஜனவரி 8 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் இந்த திட்டத்தின் மூலம் வாராந்தம் ஒரு இலட்சாதிபதி தெரிவு செய்யப்படுவதுடன், மேலும் பல அன்பளிப்பு வவுச்சர்கள் தெரிவு செய்யப்படும் அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்களுக்கு வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக 2011 டிசெம்பர் 1 ஆம் திகதி முதல் டிசெம்பர் 31ஆம் திகதி Soniq தொலைக்காட்சியை நாளாந்தம் வெற்றி கொள்வதற்கான வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த Arpico Christmas Millionaire திட்டத்தில் பங்குகொண்டு வாடிக்கையாளர்கள் வெற்றிபெறுவதற்கு செய்ய வேண்டியது, வழமையை போலவே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களில் இருந்து 3 பொருள்கள் உள்ளடங்கலாக 3000 ரூபா அல்லது அதற்கு அதிகமான பெறுமதியுள்ள பொருள்களை கொள்வனவு செய்வதாகும்.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கொள்வனவின் போதும் இந்த திட்டத்துக்கு தெரிவாவதற்காக சந்தர்ப்பம் வழங்கப்படும். பண்டிகை காலத்தை முன்னிட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த Arpico Christmas Millionaire திட்டம் குறித்து றிச்சர்ட் பீரிஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அண்ட்ரூ டால்பி கருத்து தெரிவிக்கையில், வாடிக்கையாளர்கள் தமக்கு தேவையான அனைத்து பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் கொள்வனவு செய்து கொள்ளக்கூடிய ஹைபர்மார்க்கெட் விற்பனை முறையை இலங்கையில் அறிமுகம் செய்த ஆர்பிகோ சுப்பர் சென்டர் மூலம் இந்நாட்டின் சொப்பிங் துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்த முடிந்திருந்தது.

அத்துடன் வாடிக்கையாளர்களின் வரவேற்பும் சிறந்த முறையில் அமைந்திருந்தது. எமது சுப்பர் சென்டர்களின் அறிமுகத்தின் மூலம் இன்று எமது வாடிக்கையாளர்கள் சொப்பிங் செய்ய வருவது பொருள்களை கொள்வனவு செய்ய மாத்திரமன்று, களிப்பையும் சுவாரஸ்யமான அனுபத்தை பெற்றுக் கொள்ளவாகும்.

இதன் மூலமாக எம்மீது நம்பிக்கை கொண்டுள்ள வாடிக்கையாளர்கள் நாடு முழுவதும் உள்ளனர். கடந்த ஆண்டு எமது நத்தார் பரிசுப்பொருள்களில் முதலாமிடத்துக்காக சுமார் 65 இலட்சம் ரூபா பெறுமதியான ஜீப் வாகனம் வழங்கப்பட்டிருந்தது. இம்முறை அந்த பெறுமதியை கடந்து இலட்சாதிபதிகள் ஏழு பேரை உருவாக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

# நாடாளுமன்றை அசிங்கப்படுத்தும் இந்நாள் உறுப்பினர்கள்....

## அன்றைய நடைமுறைகளைப் படித்தால் என்ன?

நாடாளுமன்ற ஜனநாயகம் நிலவும் நாடுகளில் இலங் கையும் ஒன்றென்பது அனைவரும் அறிந்ததே. நாடாளுமன்றம் என்பது ஒரு நாட்டின் பண்புகள், நாகரீகம், கலை கலாசாரங்கள், மக்களின் ஒழுக்க சீலங்கள், மத அனுட்டானங்கள், மாண்புகள், மரபுகள் அனைத்தையும் பிரதிபலிக்கும் இடமாகும் என்பதே பொதுவான கருத்து. ஒரு நாட்டின் அதி உயர் பீடமும் அதுவேயாகும். அதற்கு நிகர் அதுவே. அதற்கு நிகராக வேறு எதையும் ஒப்புவமை காணமுடியாது.

இலங்கை நாடாளுமன்றத்தைக் காலத்துக்குக் காலம் பல அரசியல் மேதைகள் அலங்கரித்திருக்கிறார்கள். இவர்களில் பலர் அரசியர் மேதைகளாக விளங்கியவர்கள் மட்டுமல்ல மாபெ ரும் கனவான்களாகவும் பிரகாசித்தவர்கள். இவர்களின் பட்டியல் மிகமிக நீளமானது.

### சேர் பொன் இராமநாதன்

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் இலங்கை அரசியலில் சேர். பொன் இராமநாதன் எந்த அளவுக்கு மாபெரும் மேதையாக விளங்கினாரோ, அந்த அளவுக்கு அவர் ஒரு மிகப் பெரும் கனவானாகவும் முழு இலங்கை மக்களாலும் மதிக்கப்பட்டவர் என்பது வரலாறாகும்.

### அந்தநாள்களில் அனைவருமே

இலங்கை சுதந்திரம் அடைந்த போது 1948 ஆம் ஆண்டில் இலங்கை நாடாளுமன்றத்தைப் பல அரசியல் நிபுணர்கள் அலங்கரித்தார்கள். இவர்களுள் டி.எஸ்.சேனநாயக்க,எஸ்டபிள்யூ ஆர்.டீ. பண்டாரநாயக்க, ஜே. ஆர். ஜயவர்த்தன, எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜி.ஜி.பொன்னம்பலம், ஸி.சுந்தரலிங்கம், கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, டபிள்யூ.தகநாயக்க, எஸ்.தொண்டமான் போன்ற பலர் இன்றும் நினைவு கூரப்படுகிறார்கள். குறிப்பாக அந்த நாள்களில், நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த அனைவருமே ஏதோ ஒரு வகையில் புடம் போட்ட தங்கங்களாகவே சுடர் விட்டுப் பிரகாசித்தவர்கள் எனலாம்.

எஸ்.ஜே.வி. அரசியலில் பிரகாசித்தவர்களுள் மிகப் பெரியதோர் கனவானாகவே எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை என்றும் அவதானித்ததுண்டு. அரசியல்வாதிகளுள் மனித நேயப் பண்புகள் நிறைந்த ஒரு மானுடப் பிறவியாக சரத் முத்தெட்டுவேகமவை நோக்கியதுண்டு. நேர்மைக்கு இரண்டொருவரை மட்டும் முதலில் உதாரணத்துக்காகக் கூறுங்கள் என எவராவது என்னைக் கேட்டால் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தையும், எட்மன் சமரக்கொடி யையுமே, குறிப்பிட எனது மனம் அவாவுறும். இப்பட்டியல் மிக நீளமானது.

### எனது பணியும் பதிப்பும்

இன்றைய காலகட்டத்தில் நான் நாடாளுமன்றத்தில் கடமையாற்றிய காலத்தைத் திரும்பிப் பார்கிறேன். அதற்கான காரணங்களும் உள்ளன.

1961 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் 'ஹன்சாட்' அறிக்கையாளாராக இணைந்துகொண்ட நான் 1989 ஆம் ஆண்டில் சிரேஷ்ட அறிக்கையாளராகப் பதவி வகித்தவேளை சேவையிலிருந்து இளைப்பாறினேன். அந்தக் கால நாடாளுமன்றங்களின் அனுபவங்களை எல்லாம் ''எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம்'' எனும் நான் வெளியிட்ட நூலில் வெளிப்படுத்தி இருக்கிறேன். இதுவே நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் மாண்புகள், மரபுகள் பற்றித் தமிழில் வெளிவந்த முதல் நூல் எனக் கற்றறிந்தோரால் போற்றப்படுகின்றது.

### மாண்புகள் பல

மூன்று தசாப்த காலம் இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் ஒன்பது சபாநாயகர்களின் கீழ் கடமையாற்றக் கிடைத்த அந்தக்கால அனுபவங்களையும் நாடாளுமன்ற நடைமுறைகளையும் இன்று எண்ணிப் பார்க்கையில் பழமையின் மாண்புகள் பல புலப்படுகின்றன.

### தீர்ப்புக்கள்

நாடாளுமன்ற நடைமுறைகளில் மிகுந்த அனுபவமும் தொடர்ச் சியான அக்கறையும் உள்ளவராக விளங்கிய கலாநிதி என்.எம்.பெரேரா பல சந்தர்ப்பங்களிலே சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமி, சேர்.பிரான்சிஸ் மெலமுரே ஆகியோரின் முன்மாதிரிகைகளையும் தீர்ப்புக்களையும் வெகுவாகச் சிலாகித்து உதாரணம் காட்டிப் பேசியதை நான் சபையில் அவதானித்திருக்கிறேன்.

சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்ற காலத்தில் சபாநாயகராக விளங்கிய சேர்.பிரான்சிஸ் மொலமுரே 1949 ஆம் ஆண்டில் ஒருநாள் **"அரச கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சபாநாயகரின் தீர்ப்புக்களைக் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும்''** என்று குறிப்பிட்ட போது, சபாநாயகருக்குச் சாதகமாகவோ அல்லது மேலும் விளக்கம் வேண்டும் முகமாகவோ எண்ணவோ சேர்.ஜோன்கொந் தலதவலை **''சரியாக இருந்தாலென்ன பிழையாக இருந்தாலென்ன''** என்று இடைநடுவில் நாசூக்காக விளம்ப **"ஆம்"** எனக் கண்டிப்பான தோரணையில் பதிலளித்தார் சபாநாயகர்.

இதேபோன்று 1955 ஆம் ஆண்டளவில் சபாநாயகர் சேர். அல்பேர்ட் எப்.பீரிஸ் ''ஒருமுறை சபா நாயகரால் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டால் அதன் பிறகு அது பற்றி என்னுடன் வாதிட முடியாதென்பதை உறுப்பினர் அறிந்து கொள்ளல் வேண்டும்; ஒரு தீர்ப்பு வழங்கப்படுமிடத்து கீழ்படிந்து ஒழுகல் வேண்டும்'' எனத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

### சட்டமும் ஒழுங்கும் இரண்டு கண்கள்

இத்தகைய தீர்ப்புகள் எமக்கு விளக்குவதென்ன? நாடாளுமன்றத்தில் சட்டமும் ஒழுங்கும் இரண்டு கண்களைப் போன்றவை என்பதே அதுவாகும். அவற்றுக்கமைய நாடாளுமன்ற அமர்வுகள் அனைத்தும் இடம் பெறுவதே நாடாளுமன்ற நடவடிக்கைகளின் உயர்



பாரம்பரிய மரபுகள் எனலாம். இவற்றை மதித்து நாடாளுமன்றத்தில் ஒழுகுவது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரதும் கடமையே.

### அன்றைய சம்பிரதாயங்கள்

நான் நாடாளுமன்றத்தில் கடமையாற்றிய காலத்தில், நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர்களை ஆரம்பித்து வைக்கும் பொருட்டு மேன்மை தங்கிய ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வருகை தருகையில், ஜனாதிபதி பிரதான வாயிலில் இருந்து சபாநாயகராலும் மற்றும் பிரதானிகளாலும் செங்கோல் சகிதம் அழைத்து வரப்படுவார். ஜனாதிபதி வைபவ முடிவிலே தமது மாளிகைக்குத் திரும்புகையிலும் சபா மண்டபத்தின் பிரதான முகப்புவரை இவ்விதமே அழைத்துச் செல்லப்படுவது வழக்கம். இவையெல்லாம் நாடாளுமன்ற நடை முறைகளுக்கு உட்பட்டவை.

### முழுநாட்டினதும் தலைவர்

ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் ஒருவர் எவர் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன, முழு நாட்டினதும் தலைவர் என்ற முறையில் அவருக்குரிய உயர் கௌரவத்தை முதலில் பேணவேண்டிய கடமை அவர் சார்ந்த கட்சியினருக்கே உரியதாகும். அவர்கள் முதலில் தமது தலைவருக்கு முன்னால் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் அடக்க ஒடுக்கமாக நடக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதே பொதுவான அபிப்பிராயமாக உள்ளது.

### ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதமராகப் பதவி வகிக்கையில் அவர் நாடாளுமன்றத்திலே சமூகமளித்திருக்கும் வேளைகளில் எப்போதும் அரச தரப்பில் கட்டுப்பாடும் அமைதியும் நிலவியதை நான் அவதானித்திருக்கிறேன். ஏழாவது நாடாளுமன்றம் அவருக்கு என்றுமே பெரும் மதிப்பளித்திருக்கின்றது.

### ஒரு வார காலத்தடை

1965 ஆம் ஆண்டு நாடாளுமன்ற காலத்தில் ஹம்பஹாத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய எஸ்.டி.பண்டாரநாயக்க ஒருசமயம் சபையைத் ''திருடர் குகை'' என வர்ணித்ததன் காரணமாக அவருக்குச் சபைக் கூட்டங்களில் பங்குபற்ற ஒரு வாரகாலத் தடை உத்தரவு விதிக்கப்பட்டது.

### வாசுதேவாவின் குறும்பு

1976 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதியன்று இரவு கூட்ட நடவடிக்கைகளின் போது அன்று கிரியெல்லைத் தொகுதி உறுப்பினராக விளங்கிய வாசுதேவ நாணயக்கார சபை நடுவில் மலர் வளையம் ஒன்றை வீசிக் குறும்பு செய்தமைக்காகச் சபாநாயகரது பலத்த கண்டனத்துக்கு ஆளாக நேரிட்டது. கிரியெல்லைத் தொகுதி உறுப்பினரது செயல் குறித்துச் சபையில் காரசாரமான வாதப்பிரதி வாதங்கள் பின்னர் இடம்பெற்றன.

முதலாவது அரச காலத்திலே சபாநாயகராக இருந்த பிரான்சிஸ் மொலமுரே இரண்டாவது அரச சபைக் காலத்தில் அதே பதவியை அலங்கரித்த சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமியையும் இன்றும் நினைவு கூருவதை நாடாளுமன்ற வட்டாரங்களில் நான் அவதானிக்கின்றேன். காரணம் அவர்கள் பேணிய நாடாளுமன்ற உயர் மரபுகளே எனலாம்.

### முக்கிய மரபு

நாடாளுமன்ற சபாமண்டபத்தில் சபை அமர்வில் இருக்கையில் இரு தரப்பிலும் உள்ள உறுப்பினர்கள் சபா மண்டபத்தைக் குறுக்கே கடந்து செல்லவோ மற்றவர்களுடன் உரையாடலில் ஈடுபடவோ முடியாதென்பது நாடாளுமன்ற சம்பிரதாயங்களில் மிகமிகக் கவனிக்கப்பட வேண்டியதோர் முக்கிய அம்சமாகும்.

### மேலெழுந்த போக்கில் குற்றம் சுமத்த முடியாது

நாடாளுமன்ற சம்பிரதாயங்களில் உறுப்பினர் ஒருவர் மீதோ அல்லது அமைச்சர் ஒருவர் மீதோ ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்படுமானால் அது முறையான தன்னிலைப் பிரேரனை மூலமே கொண்டு வரப்படல் வேண்டும். மேலெழுந்த போக்கில் குற்றச்சாட்டுக்களைச் சுமத்த முடியாது என்பதும் முக்கியமானதொரு அம்சமாகும்.

எவரும் சபாநாயகரது நடைமுறைகளை விமர்சிக்க முடியாது என்பது மற்றுமோர் நடைமுறையாகும்.

### சபாநாயகரின் மாண்புகள்

நாடாளுமன்ற நடைமுறைகளை ஆராயும் பொழுது சபாநாயகரின் கடமைகள் விரிவுபடும். சபாநாயகர் ஓர் அறிவுரையை நாடாளுமன்ற உறுப்பினர்களுக் குக் கூறும் பொழுது அதை எல்லோரும் அமைதியுடனிருந்து செவிமடுத்தல் வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் யாராவது ஓர். உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருந்தால் உடனே அவர் தமது உரையை நிறுத்தி ஆசனத்தில் அமர்தல் வேண்டும். சபையில் சபாநாயகர் உரையாற்றும் பொழுது எந்த உறுப்பினரும் தமது ஆசனத்தை விட்டு அகலக் கூடாது.

1965 ஆம் ஆண்டு நாடாளுமன்ற காலத்தில் சபாநாயகராக விளங்கியவர்களுள் ஒருவர் சேர். பிரான்சிஸ் மொலமுரே அல்பேர்ட் பீரிஸ் ஆவார். அவரைத் தொடர்ந்து இதற்கு முன்னரும் இவர் சபாநாயகர் பதவியை வகித்த வரலாற்றுக்குரியவர். இவர் தாம் பதவி வகித்த இரு காலகட்டங்களிலும் சபை மரபுகளையும் சம்பிரதாயங்களையும் போற்றிப் பேணுவதில் அதிக கவனம் செலுத்தி அரச கட்சி, எதிர் கட்சி ஆகிய இருதரப்பினரதும் நம்பிக்கைக்கும் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் பாத்திரமாக விளங்கியவர்.

நாடாளுமன்றப் பாரம்பரியங்களில் என்றும் அதிக நாட்டமுள்ளவர்களாக விளங்கிய டட்லி சேனநாயக்க, கலாநிதி என்.எம்.பெரேரா, எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம் பலம், ஜே.ஆர்.ஜயவர்த்தன போன்றவர்களும் ஏனையோரும் சேர்.அல்பர்ட் எப்.பீரிஸ் அவர்களின் தீர்ப்புகளுக்குப் பெரும் மதிப்புக் கொடுத்தார்கள் என்பதை நான் சபை நடவடிக்கைகளின் போது பல கட்டங்களில் அவதானித்திருக்கின்றேன்.

### மரபுவழி வந்த பாரபட்சமின்மை

சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட தினம் உறுப்பினர்களின் பாராட்டுரைகளின் முடிவில் சேர்.அல்பட்பீரிஸின் உரையின் இறுதிப் பகுதியில் அவர் கூறியவை இன்றும் கவனத்தில் கொள்ளத் தக்கவை. அதாவது ''தனிநபர் சுதந்திரத்தினதும், நாடாளுமன்றச் சனநாயகரத்தினதும் பேரரனாக இந்தச் சபையை ஆக்குவன, மரபுவழிவந்த பாரபட்சமின்மை, சுதந்திரம், ஒழுங்கு என்பனவேயாம். இந்தப் பாரம்பரியங்களைப் பேணுவதில் நான் எனது சக்திக்கேற்ப நடந்துகொள்வேன் என உறுதியளிக்கிறேன்'' என அவர் குறிப்பிட்டிருந்தார். இவை எல்லாம் இன்று நாட்டில் எவ்வளவு தூரம் பின்பற்றப்படுகின்றன என்பதே முக்கிய கேள்வியாகும்.

நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் நடைமுறைகள், மாண்புகள், மரபுகள் அனைத்தும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை. இது ஒவ்வொருவரதும் வரலாற்றுக் கடமையாகும். இதுவே ஆரோக்கியமான அரசியல்லுக்கும் வழிவகுக்கும். நாட்டின் அரசியல் செயல்பாடுகளில் கனவான் தன்மைகள் ஒளிர்வதையே இன்றைய புத்திஜீவிகள் விரும்புகிறார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

**28 ஆண்டுகளாக இலங்கை நாடாளுமன்றத்தில் அறிக்கையாளராகப் பணியாற்றிய அனுபவம் வாய்ந்த செல்லப்பா நடராஜா, ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளருமாவார். இன்றைய காலகட்டத்தில் அடிக்கடி நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வரும் ஒவ்வாத, அநாகரிமான செயற் பாடுகள் குறித்து மனம் வருந்தும் அவர் அன்றைய நாடாளு மன்ற நடைமுறைகளில் காணப் பட்ட நேர்த்தி, மதிப்பு என்பவை குறித்த தமது அனுபவங்களை உதயன் வாசகர்களுடன் பகிர்ந்து செல்கின்றார்.**



செல்லப்பா நடராசா
ஓய்வுநிலை நாடாளுமன்ற
சிரேஷ்ட அறிக்கையாளர்

உதயன்
04 டிசெம்பர் 2011 ஞாயிற்றுக்கிழமை

# படங்கள் தரும் பதிவுகள்



ரவீந்திரநாத்தாகூரின் பிறந்தநாளை முன்னிட்டு இந்திய தூதரகமும் வடமாகாண சபையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்திய பிரபல நாட்டியக் கலைஞர்களான ஆசிம்பண்டு பட்டாச்சார்ஜி மற்றும் பிரபாவதிதேவி குழுவினரின் நாட்டிய நிகழ்வின் காட்சிகள்...




வாசிப்பு மாதம் மற்றும் கைகழுவுதல் தினங்களை முன்னிட்டு ஒலுமடு தமிழ் வித்தியாலய மாணவர்கள் கைகழுவும் முறைப்பற்றி விளக்குகின்றனர். வாசிப்பு மாதப்போட்டியில் பங்குபற்றி பரிசில் பெற்ற மாணவர்கள் பாடசாலை அதிபர், ஆசிரியருடன் உள்ளனர்.

கெயர் நிறுவனத்தால் அச்சுவேலி தெற்கு நவவோத சனசமூக நிலையம் ஊடான முன்னெடுத்தல் குழுவின் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர்.









கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர், ஆசிரியை இருவர் உட்பட மூவருக்கு ''பிரதீபா பிரபா'' விருது அண்மையில் வழங்கப்பட்டன. இதைக் கௌரவிக்கும் முகமாக பாடசாலையில் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.



அகில இலங்கை திருமறை மன்றம் நடத்திவரும் தேவாரப் பண்ணிசை வீதி உலாவில் மன்றத்தின் தேவாரப் பண்ணிசை வகுப்பாசிரியர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் தலைமையில் பண்ணிசை உலா அண்மையில் நல்லூரில் இடம்பெற்றது.



தேசிய மர நடுகை வேலைத் திட்டத்தின் கீழ் யாழ். இந்துக் கல்லூரியில் அதிபர் , ஆசிரியர்கள், மாணவர்கள் மர நடுகை நிகழ்வில் கலந்து கொள்கின்றனர்.